திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

17 JUN 1965
MADRAS RECORD OFFICE BUILDINGS MADRAS-8



ஊர்த்துவ தாண்டவமூர்த்தி

மாலை 2] சார்வரி சித்திரை [மணி 8
மே 1960

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



முகப்புப்படம் ஊர்த்துவதாண்டவமூர்த்தியும், மேலேயுள்ள காளியும்,
"ஆடினார் காளிகாண" என்ற அப்பர் பெருமான் திருவாக்கை நினைவூட்டும்.

பொருளடக்கம்

1. வைகாசி விசாகம்
2. திருவுந்தியார்
3. திருவல்லம்
4. ஏனாதிநாத நாயனார்
5. நவதிருப்பதி அநுபவம்
6. கிருஷ்ணாவதாரம்
7. வைஷ்ணவம்
8. பள்ளிகொண்டை
9. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
10. திருவிரிஞ்சிபுரம்
11. திருஅறையணிநல்லூர்
12. ஸ்ரீகிருஷ்ணசைதன்யர்
13. ஆரம்பூண்டான்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை -6.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] சார்வரி சித்திரை - மே 1960 [மணி 8

GAZETTEER UNIT 17 JUN 1965

வைகாசி விசாகம்

வைகாசி விசாகத்திருவிழா திருச்செந்தூர்த் தலத்தில்தான் தனிச் சிறப்புடன் கொண்டாடப் பெறுகிறது. அபிஷேக ஆராதனைகள் அதிகாலையிலேயே நடத்தப்பெறுகின்றன. அதற்கு முன்பாகவே மக்கள் பெருந்திரளாகக் கடலிலும் மற்றும் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து இடைவிடாமல் கோயிலுக்குச் சென்று வழிபட்டுக்கொண்டே இருப்பது ஒரு தனிப் பெருங்காட்சி. இந்த விழாவை விசாக தினத்தை இறுதியாகக்கொண்டு வசந்தோற்சவமாகப் பத்து நாட்கள் கொண்டாடப்பெறுகிறதென்றாலும் விசாக தினத்தன்று தான் மக்கள் பல ஊர்களிலிருந்தும் திரள்திரளாக வந்து வழிபடுகிறார்கள். பத்து நாட்களும் விசேஷ அபிஷேகங்கள், ஆராதனைகள் செய்யப்பட்டாலும் விசாக தினத்தன்று நாகர்கோயில் வெள்ளித் தாம்பாளக் கட்டளைகாரர் சிறந்த முறையில் உச்சிகாலத்தில் உற்சவர் ஜயந்திநாதருக்கு அநேக அபிஷேகங்கள் செய்கிறார்கள். சென்ற ஆண்டு வரையில் இந்த மகா அபிஷேகம், ஜயந்திநாதர் இருக்கும் இடமாகிய ஒரு சிறு அறையில்தான் நடந்து வந்தது. இது மக்களில் பெரும்பாலானோர்க்குத் தெரியாமலே இருந்து வந்தது. அந்த அறையில் அர்ச்சகர், பரிசாரகர்கள், கட்டளைகாரர்கள் முதலியவர்கள் தவிர மற்றவர்களுக்கு நிற்க இடவசதி கிடையாது. சென்ற ஆண்டு இந்த மகா அபிஷேகம் வெகு சிறப்பாகக் கோயில் பிரகாரத்தில் வைத்து எல்லோரும் பார்க்கும்படியாக நடத்தப் பெற்றதால் பெரும்பாலான மக்கள் கண்டு களித்தார்கள். இனி இந்த அபிஷேகத்தை சஷ்டி மண்டபத்தில் வைத்து நடத்தி எல்லா மக்களும் கண்டு களிக்கும்படி செய்யவேண்டுமென்று ஆலயநிர்வாகத்தினர் திட்டமிட்டிருக்கின்றனர். விசாகத்தன்று இரவு முருகப்பெருமான் ஸ்ரீவள்ளி தேவயானை சமேதராய் வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளி அங்கே பதினோரு முறை மத்திய மண்டபத்தைப் பிரதட்சணம் செய்வது கண்கொள்ளாக் காட்சி. இந்த வைபவம் சென்ற ஆண்டுவரை இரவு சுமார் 11-மணிக்குத் தொடங்கப்பெறுவது வழக்கமாக இருந்ததால் பெரும்பாலான மக்கள் சுவாமியை திருக்கோயில் முன்புறம் சண்முகவிலாசத்துக்கு வந்தவுடனேயே தரிசனம் செய்துவிட்டுப் போய்விடுவார்கள். சென்ற ஆண்டு, இரவு 8-மணிக்குச் சுவாமியை எழுந்தருளச்செய்து 9-மணிக்கு வசந்த மண்டபத்தை அடைந்து மத்திய மண்டபத்தை 11 தரம் வலம் வந்த தனிப்பெருங் காட்சியைக் கண்டு களித்தவர்கள் கண்ணிறைப்பெற்ற பயனை நன்கு அனுபவித்தார்கள். ஒவ்வொருதரம் வலம் வரும்போதும் ஒவ்வொருவிதமான பாராயண சங்கீத வாத்தியங்கள் முழங்கின. அவை (1) வேதபாராயணம் (2) தேவாரத் திருமுறைகள் (3) திருப்புகழ் (4) பிள்ளைத்தமிழ் (5) நாதசுவரம் (6) பிரமதாளம் (7) நந்திமத்தளம் (8) திருச்சின்னம் (9) வேல்வகுப்பு (10) வாள் வகுப்பு (11) கப்பல்பாட்டு என்பன.

முருகப்பெருமான் மத்திய மண்டபத்தில் எழுந்தருளிய உடன் முன் மண்டபத்தின் நடுவேயுள்ள ஒரு நீர்த்தொட்டியில் ஆறு மீன்கள் மனித உருப்பெற்றதாக ''மீன் விளையாட்டு'' என்ற ஒரு காட்சி நடைபெறுகிறது. இதன் தத்துவம் என்னவென்றால், பராசர முனிவர் தன் குமாரர்கள் ஆறு பேர்கள் மீன்களை நீரினின்றும் வெளியே எடுத்துப் போட்டு விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டு சினம்கொண்டு ''இச்சிறு உயிர்களை இவ்வாறு துன்புறுத்திய நீங்கள் மீன்களாய்ப் பிறந்து அதன் துன்பத்தை அனுபவிக்கக் கடவீர்'' என்று சாபமிட்டார். தன்னுடைய குழந்தைகள் என்பதையும் பாராமல் ஜீவகாருண்ய மிக்க அம்முனிவர் இட்ட சாபத்தைக் கேட்ட மைந்தர்கள் பதறித் தங்கள் தவறை உணர்ந்து சாபவிமோசனம் வேண்டினர். அப்போது அம் மாமுனிவர் ''நீங்கள் சரவணப் பொய்கையில் மீன்களாக இருப்பீர்கள். சண்முகப்பெருமான் திருஅவதார காலத்தில் உமாதேவியார் வந்து அவரை

வாரியெடுத்து கட்டியணைத்துச் சேர ஒருகோல மாக்கிப் பாலூட்டும்போது சரவணப் பொய்கையில் கலக்கும் பால்துளிகளின் மகிமையால் நீங்கள் மீண்டும் மனித உருப்பெறுவீர்கள்'' என்று அருள் புரிந்தார். இந்த வரலாற்றைத்தான் ''மீன் விளையாட்டு'' என்று சொல்கிறார்கள். இனி இந்த திருவிளையாடலை ஆறு பொம்மை மீன்களையும், ஆறு ரிஷி குமாரர்கள் பொம்மைகளையும் வைத்துக் காட்டவேண்டுமென்று ஆலய நிர்வாகக் குழுவினர் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

ஸ்ரீ கந்தசஷ்டி விழா முருகன் ஆலயங்களிலும் கொண்டாடப்பெறுகிறது. இந்த விழாவைப்பற்றிய விவரம் ''திருக்கோயில்'' மாலை 1-மணி 3-ல் விளக்கப்பெற்றிருக்கிறது.

158339

விஷ்ணு க்ஷேத்திர உற்சவங்கள்

சிவன் கோயில்களில் ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு விதமாக உற்சவங்கள் நடைபெறுவது போலவே திருமால் கோயில்களிலும் நடைபெறக் காண்கிறோம். தஞ்சை மாவட்டம் மன்னார்குடி ஸ்ரீ இராஜகோபால் சுவாமி கோயிலில் 18 நாட்கள் பங்குனி மாதத்தில் பெருந்திருவிழா நடைபெறுகிறது. கோயில் என்னும் தமிழ்ச் சொல்லுக்கு தெலுங்கில் 'குடி' என்பர். நாயக்க மன்னர் ஆட்சிக்காலத்தில் 'மன்னார்கோயில்' என்னும் க்ஷேத்திரம் 'மன்னார்குடி' எனமாறிற்று. ஸ்ரீ இராஜகோபாலனுக்கு 'ஸ்ரீ வித்தியா இராஜகோபாலன்' என்ற சிறப்புப்பெயர் வழங்குகின்றது. ஒரு காதில் தோடும் இன்னொரு காதில் குண்டலமும் அணியப்பெற்று தம்முள்ளேயே பெண்மையையும் கொண்டுள்ள தோற்றம் கண்டார் யாரையும் கவரும் மாண்புடையது. இவ்வாலயத்தில் எம்பெருமானுக்குப் பலவித விநோத அலங்காரங்கள் செய்வதில் இவ்வாலய அர்ச்சகர்கள் பெரும் புகழ் பெற்றவர்கள். இப்பெருமானுக்கு மோகினித் திருக்கோலம் மிகவும் பொருத்தமுடையதாக அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பு. பொதுவாக எல்லா ஆலயங்களிலும் 9 நாட்கள், 15 நாட்கள், அல்லது 30 நாட்கள் திருவிழா நடப்பதுண்டு. இங்கு 18 நாட்கள் நடத்துவதற்குக் காரணம் தம்முள்ளேயே பெண்மையையும் கொண்டுள்ள இராஜகோபாலனுக்கு 9 என்ற எண்ணை இரட்டித்து 18 நாட்களாக உற்சவம்செய்யத் திட்டமிட்டனர் என்று கூறலாம். சிலர் பிரமாண்ட புராணத்திலுள்ள சண்பாகரண்யமான்மியத்தில் 18 நாட்கள் பிரமனால் திருவிழா நடத்தப்பெற்றதாகக் கூறப்படுவதாகச் சொல்லுகிறார்கள்.

முதல்நாள்:—திருச்சிவிகை, கொடிச்சப்பரம். இராஜகோபாலன் என வழங்கும் இராஜாதிராஜனும் தேவதேவனுமாகிய எம்பெருமானுக்கு திருவிழாவில் பல முறை இராஜ அலங்காரம் செய்யப்பெறுகிறது. அதனால் முதல் திருவிழாவில் இவர் மன்னர்களுக்குரிய சிவிகையிலும் கொடிச் சப்பரத்திலும் எழுந்தருளுவது சாலப் பொருத்தமே.

இரண்டாம் நாள்:-புன்னைமரம். திருஆயர்பாடியில்கோபிகைகள் நீராடிக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய ஆடைகளைப் புன்னைமரத்தின் மேல் வைத்து, அவர்களிடம் வணக்கம்பெற்று, ஆடைகளை மீண்டும் கொடுத்த வரலாற்றைக் குறிக்கிறது. இறைவனுடைய சௌந்தரியத்தில் ஆண்களும் பெண்களும் கட்டுண்டு அவரைக் காமுறுவர். உலகியலில் மூழ்கி உழன்றுவரும் ஆன்மாக்களைத் தடுத்தாட்கொள்ளும் தத்துவத்தைக் குறிக்கிறது. அகத்தூய்மையே புறத்தூய்மையைவிடச் சிறந்தது. யான் எனது என்னும் செருக்கால் தன் மானத்தைத்தானே காத்துக்கொள்ளும் ஆன்மாவை மறைத்து நிற்கும் மாயையை அவ்வான்மாக்களிடமிருந்து விலக்கி அதை அவர்கள் திரும்பப்பெற நினைக்கும்போது அவைகளைப் பணியும்படி செய்து தன் வழிப்படுத்தும் தத்துவத்தைக் குறிக்கிறது. இறைவனைப் பணிந்த பின்பு அவ்வான்மாக்கள் மறுபடியும் மாயா சம்பந்தம் பெறினும் உள்ளுணர்வுபெற்று இறையருளால் அகத்தூய்மை அடைந்துவிடுவதால் பின்பு தீங்கு ஏதும் விளையாது என்பதையும் இப்புன்னை மரத்தின் கோலம் விளக்குகிறது.

மூன்றாம் நாள்:—அன்னவாகனம். அன்னம் பிரமனுக்குரிய வாகனம். பிரமனை மகாவிஷ்ணுவின் புத்திரன் என்று சொல்வதுண்டு. தனயன் வாகனத்தைத் தந்தை ஏற்றுக்கொள்ளலாம். இறைவனே அன்னமாகி மறைகளைப் பிரித்து அருளினார். அதனால், ''அம்ச'' என்றழைக்கப்பெற்றார். பறவைகளில் சிறந்தது அன்னம். அதன் வெண்மை நிறம் சத்துவ குணத்தைக் குறிக்கும். அன்னம் பாலும் நீரும் கலந்திருந்தால் பாலையும் நீரையும் பிரிக்கும் சக்திவாய்ந்தது. அது நீரில் வாழும்போது விஞ்ஞானமாகிய சேற்றில் அழுந்தாமல் சிறகுகளை விரித்துப்போவது போல ஞானியும் கர்ம ஞானங்களாகிய சிறகுகளால் பறந்து எம்பெருமான் திருவடிகளை யடையலாம் என்பதைக் காட்டுவது அன்னவாகனம்.

நாலாம் நாள்:—கோவர்த்தனம். 'கோ' என்ற சொல்லுக்கு ஆவினம், ஆன்மாக்கள், புலன்கள் என்ற பொருள் உண்டு. கோபாலனாகிய இறைவன் ஆன்மாக்களாகிய பசுக்களையும் அவைகளின் புலன்களையும் காத்து இரட்சிப்பன் என்பதைக் காட்டுகிறது. கோகுலவாசிகளைக் காத்து இரட்சிப்பதற்காக கோவர்த்தன கிரியைத் தூக்கிக் குடையாகப் பிடித்ததால் ''கோவிந்தன்'' என்ற சிறப்புப்பெயர் இறைவனுக்கு உண்டு. இவ்வாறே தன்னை நாடிவரும் எல்லோரையும் காத்து இரட்சிப்பான் என்ற உண்மையை இது வலியுறுத்துகிறது.

ஐந்தாம் நாள்--பஞ்சமுக அனுமான்: ஆஞ்சநேயருக்குச் சிறிய திருவடி என்ற பெயர் உண்டு. என்றும் சிரஞ்சீவியாக இருந்து இராமபிரானையே வழிபடும் மூர்த்தி. தானே பல உருவங்களையும் கொண்டு இறைவனுக்குப் பணிபுரியக் கருதி ஐந்து முகங்கொண்டான் என்பது வரலாறு. ஐந்து முகங்

களும் முறையே கபி, நரசிங்கம், கருடன், குதிரை, வராகம் முதலிய வடிவுடையவை. இவ்வுருவத்தில் அமைக்கப்பட்ட ஆயுதங்கள் கதை, திரிசூலம் முதலிய சைவ வைணவ சம்பந்தமுடையவை. இதன் தத்துவம் பல்வேறு திசைகளிலும் திரிந்து செல்லும் குணமுடைய ஐம்புலன்களையும் அடக்கித் தன் திருவடியை அடைபவர்களை ஆட்கொள்ளும் தன்மையை இவ்வாகனத்தில் எழுந்தருளும் காட்சி வலியுறுத்தும். ஆனந்த இராமாயணத்தில் இராவணனைக் கொல்லச் சென்ற பிராட்டியைப் பஞ்சமுக அனுமான் தாங்கிச் சென்றான் என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொல்வர்.

ஆறாம் நாள்—கண்டபேரண்டபட்சி: மிருகங்களில் பெரியது யானை. அதனையும் அடக்கும் வலிமையுடையது சிங்கம். இவைகளைவிட மிகுந்த வலிமையுள்ளது சரபம் என்பர். அது மிருகத்தைப் போல தரையில் நடக்கவும், பறவையைப்போல பறக்கும் திறமுடையதென்பர். நரசிம்ம அவதாரத்தில் இரணியனைக் கொன்றபோது சரபம் அந்த சிங்கத்தை அடக்கவர இறைவன் கண்ட பேரண்டம் என்ற இருதலைகளையுடைய பட்சியைப் படைத்து அதனையும் அடக்கினார் என்று புராணம் கூறுவதாகச் சொல்வர். இப்பறவை தன் அலகினால் இரண்டு யானைகளைத் தூக்கும் வலிவுடையதென்று கூறுவர். இதன்மீது எழுந்தருளுவதால் இறைவனுடைய வலிமை உணர்த்தப் பெறுகிறது.

ஏழாம் நாள்—சிவிகை: (முத்துப் பல்லக்கு) இப்போது முத்துப் பல்லக்குக்குப் பதிலாகக் கண்ணாடிப் பல்லக்கு உபயோகிக்கப்படுகிறது. முத்தும் கண்ணாடியும் எதிரிலுள்ள உருவங்களைப் பிரதிபிம்பங்களாகக் காட்டும் தன்மையுள்ளன. இறைவன் ஒருவனேயாகிலும் 'ஆரொருவர் உள்ளுவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய்நின்று' அருள் செய்யும் தன்மையைக் காட்டுகிறது.

எட்டாம் நாள்—ரிஸ்யமுக பர்வதம்: இறைவன் இராமாவதாரத்தின்போது பிராட்டியைப் பிரிந்த நிலையில் இந்த மலையில் தங்கியிருந்ததாக வரலாறு. அந்த மலையும் மிக்க வருத்தமுற்றிருந்து பிராட்டியுடன் கூடிய பெருமானைக் கண்டு ஆனந்திக்கவேண்டுமென்று விரும்பியதால் அவ்வேண்டுகோளை நிறைவேற்ற சீதாலட்சுமண சமேத பட்டாபிராமத் திருக்கோலத்தில் எழுந்தருளுவதாகக் கூறுவர்.

ஒன்பதாம் நாள்—சிம்மம்: சாதாரணமாக சிம்மவாகனம் பிராட்டிக்கே உபயோகப்படுத்துவது மரபு. இராஜகோபாலசுவாமி தம்முள்ளே பிராட்டியின் பெண்மையும் தாங்கியுள்ள தன்மையை இந்த வாகனம் விளக்கி நிற்கும். சிம்மம் எல்லா மிருகங்களையும் அடக்கி மிருக அரசனாக இருப்பதுபோல் அகங்காரம், இந்திரியங்கள் ஆகிய மிருகங்களை அடக்கியாள்பவன் ஞானி என்பதையும் குறிக்கும்.

பத்தாம் நாள்—சூரியப் பிரபை: காயத்திரி மந்திரம் ஓதி சூரியபகவானை வழிபடுபவர்கள் சூரிய மண்டலத்தில் வீற்றிருக்கும் பராமாத்மாவை வழிபடுதல் வேண்டும் என்ற தத்துவத்தையும், சூரியன் புற இருளைப் போக்குவதுபோல் இறைவன் உயிர்களின் அக இருளைப் போக்குவதைக் குறிக்கும். இவ்வாகனத்தில் வேணுகோபாலனாகக் காட்சியளித்து, ஜீவான்ம உருவான குழலையேந்தி தனது நாத தத்துவத்தை நிரம்பிக் கொண்டிருப்பதைக் குறிக்கும். இந்த வாகனத்தில் ஒருபுறம் சூரியப் பிரபையும், மற்றொருபுறம் சந்திரப் பிரபையும் தோன்றும்படி அமைந்திருக்கிறது. சூரியனிடமிருந்து ஒளிபெற்று சந்திரன் பிரகாசிப்பதைக் காட்டுகிறது. பூரண ஞானத்துக்கு பூரணசந்திரனை உபமானமாகச் சொல்வதுண்டு. சந்திரன் உதித்தால் விஞ்ஞானம் துலங்கும் என்பர். சந்திர தரிசனம் ஆனந்தத்தைக் கொடுப்பதுபோல இறைவன் தன்னுடைய தண்ணொளிபரப்பி ஆன்மாக்களை இரட்சிக்கும் தன்மையைக் காட்டுகிறது.

பதினோராம் நாள்—சேஷ வாகனம்: 'சென்றால் புடையான் நின்றால் மரவடியான் இருந்தால் சிங்காதனமாம்' என்பதற்கிணங்க எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் இறைவனுக்குப் பணிவிடை செய்யும் ஆதிசேஷன் நித்திய சூரிகளில் ஒருவர். பிரளய காலத்தில் எல்லாம் அழிந்த பின்பும் சேஷமாக எஞ்சிநிற்பதாலும் எப்போதும் பணி செய்து கொண்டு இருப்பதாலும் சேஷன் என்ற பெயர் அமைந்துள்ளது. இராமகிருஷ்ண அவதாரங்களிலும் ஆதிசேஷன் பின்னும் முன்னும் அவதரித்துப் பணி செய்தான் என்பது யாவரும் அறிந்ததே. எந்த நிலையிலும் அவன் பணிசெய்யும் திறத்தை இவ்வாகனம் வலியுறுத்தும். சர்ப்பம் போன்ற குண்டலினி சக்தியையும் ஆட்டிவைப்பவன் இறைவனே என்பதையும் இவ்வாகனம் குறிக்கும்.

பன்னிரண்டாம் நாள்—கருடவாகனம்: நித்திய சூரிகளில் ஒருவர் கருடபகவான். அவருக்கு வைநதேயன் என்ற பெயரும் உண்டு. இவரை வேதாத்மா என்பர். வேதமே உருவானவர். வாகனமாகவும் அடிமையாகவும் நண்பனாகவும் கொடியாகவும் விசிறியாகவும் இறைவனுக்குப் பணி புரிகிறார் என்பர். வேதாத்மாவாகிய கருடன்மீது எம்பெருமான் எழுந்தருளுவது மறைகளின் முடிவில் இறைவன் வேதமுதல்வனாக வீற்றிருக்கிறான் என்பதைக் காட்டும். இறைவன் மற்ற வாகனங்களில் எழுந்தருளும்போதும் அவ்வாகனங்களுக்கு அதிதேவதையாக உள்நின்று கருடன் தாங்கிச் செல்கிறார் என்பர். இவரைப் பெரிய திருவடி என்று கூறுவர். கருடனுடைய காட்சியும் குரலும் சுபசகுனங்களாக எல்லோராலும் போற்றப்படுகின்றன.

பதிமூன்றாம் நாள்—அனுமான்: பரமபதத்தில் பரந்தாமனுக்கு கருடன் வாகனமாய் நிற்பதுபோல, விபவநிலையில் இராமனுக்கு அனுமான் வாகனமாய் நின்றார். கருடன் மறையுருவானவர். அனுமான் மறைகளுக்கு விளக்கம்கூறும் சாத்திரங்களனைத்தும்கற்ற சொல்லின் செல்வர். மறைக்குப்பின்சாத்திரங்கள் வருவதுபோல கருடனுக்குப்பின் அனுமான்

வாகனமாய் அமைந்திருக்கிறது. குரங்கை மன துக்கு உபமானமாகச் சொல்லப்படுவதுண்டு. ''நின்றவா நில்லா மனதுடையேன்'' என்றபடி மனம் எப்போதும் அலைந்துகொண்டு இருக்கிறது. மனம் என்ற குரங்கு அறிவுபெற்றிருந்தாலும் பரம னடி சேர்ந்து தான் என்றென்றும் அழியாப் புக ழுடைந்து சிரஞ்சீவியாக முடியும் என்ற தத்து வத்தை அனும வாகனம் எடுத்துக்காட்டுகிறது.

பதினுன்காம் நாள்—யானை : அரசர் முதலிய பெரியோர் யானைமேல் ஊர்ந்து ஊர்வலம் வருவது பண்டைய வழக்கம். அரசர்க்குப் பேரரசனுன இராஜகோபாலன் திருமணக் கோலத்துடன் யானை வாகனத்தின்மீது எழுந்தருளுகிருன். ஆன்மா அகங்காரம் கொண்ட நிலையில் மதம் பிடித்த யானை யின் நிலையில் இருக்கிறது. ஆன்ம அறிவு என்ற அங்குசத்தால் அடக்கி அதன்மீது இறைவன் இருக் கிருன். அறிவின்மையான இருளைக்கரிய நிறமுள்ள யானை குறிக்கிறதென்றும் அதன் முடிவிலே பேரொளிப்பிழம்பாக இறைவன் திகழ்கிருன் என்றும் கூறுவர். அகங்காரமமகாரம் ஒழிந்தால் மெய் யறிவு பெற்று பேரின்பம் உண்டாகும் என்பதை யானை வாகனம் விளக்குகின்றது.

பதினைந்தாம் நாள்—பூப்பல்லக்கு : சர்வகந் தன் என்று மறைகள் கூறுவதற்கு இணங்க இறை வன் மலர்களுள் மணம்போல மக்களுடைய மனத் தாமரையின்கண் வீற்றிருக்கின்ருன். இறை மணம் எங்கும் வியாபித்து விளங்கும் தன்மையையும், இயற்கைப் பொருள்களில் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மையையும் எடுத்துக்காட் டவே பூப்பல்லக்கு திருவிழாக் காலங்களில் உப யோகப்படுத்தப்படுகிறது.

பதினுரும் நாள்—வெண்ணெய்த்தாழி: சத் துவம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்களில் சத்துவகுணம் காத்தற் கடவுளுக்குரிய தென்றும், அது வெண்மை நிறமானதென்றும் கூறுவர். அவ் வித பண்பு நிறைந்த உள்ளத்தைக் குழந்தை உள்ளம் என்றும் கூறுவர். இறைவன் குழந்தை யாகக் காட்சி தருவதுடன், மென்மை, தூய்மை இவைகளையுடைய இளகும் பண்புடைய மனமான் வெண்ணெயை யுடையவர்கள் அவனிடம் கொடுத் தால் ஏற்றுக்கொண்டருள்புரிவான். உலகத்தை அணைத்துக்காக்கும் பெருமையை வெண்ணெய்த் தாழியை அவர் தழுவிநிற்கும் திருக்கோலக் காட்சி புலப்படுத்துகிறது. ''வெண்ணெய் உண்டவாயன் என் உள்ளம் கவர்கள்வன்'' என்ற ஆழ்வார் திருவாக்கு ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

பதினேழாம் நாள்—குதிரை : உலகில் வாழும் உயிர்களின் உடலிலுள்ள சுவாசம் போன்றது குதிரை. யான் எனது என்ற அகங்காரமமகாரங் களையுடைய உயிர்களைத் தமது வீரத்திறல் ஆட் கொள்ளும் இறைவனது நிலையை இக்கோலத்தில் காணலாம். குதிரைமீது செல்பவன், குதிரையின் பல திசைகளிற் செல்லும் பார்வையை ஒருமுகப் படுத்தி அடக்கிச் செலுத்துவதுபோல் புலன்களைத் தன் விருப்பப்படி போகவிடாமல் தடுத்து நல்வழிப் படுத்தி இறைவன் உயிர்களை ஆட்கொள்ளும் தன்மையைக் குதிரை வாகனம் காட்டி நிற்கின்றது.

பதினெட்டாம் நாள்—திருத்தேர்: உடல் ஒரு தேர். அதில் வீற்றிருப்பது ஆன்மா. தேர்ப் பாகன் அறிவு. மனம் கடிவாளம். தேரில் பூட்டி யிருக்கும் குதிரைகள் புலன்கள். ஆன்மாவிற்குள் தேரோட்டிபோல அமைந்து இறைவன் உயிர்களைச் செலுத்தியருளுகிருன் என்பதை விளக்குகிறது தேர்த்திருவிழா. தேர் அண்டதத்துவமாயும் பிண்ட தத்துவமாயும் அமைக்கப்பட்டுள்ளது. பார்த்த சாரதியாக அவதரித்த எம்பெருமான் அனைத்துயிர் களுக்கும் சாரதியாகத் திகழும் தன்மையை உணர்த்தும்.

ஸ்ரீரங்கத்தில் சூரியப் பிரபை, அன்னம், சிங் கம், யாளி, சந்திரப் பிரபை, கருடன், சேஷன், அனுமான், கற்பகம், யானை, குதிரை, தேர் முதலிய வாகனங்களில் திருவிழாக்களில் பெருமாள் எழுந் தருளிச் சேவை சாதிக்கிருர். மற்ற விஷ்ணு ஆலயங்களிலும் சிற்சில மாறுதல்களோடு வாகனங் களைத் திருவிழாக்களில் உபயோகப்படுத்துகின்ற னர்.

செய்திகள்

மங்கைநல்லூர், இராமலிங்க சுவாமிகளின் 27-ஆவது ஆண்டு விழா 10-4-60 முதல் 12-4-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இசையரங்கும் நடை பெற்றன,

திருஇடவெந்தை, நித்தியகல்யாணசுவாமி கோயிலில் பிரம்மோற்சவ விழா 10-4-60 முதல் 20-4-60 வரை நடைபெற்றது.

சிதம்பரம், வடக்குவீதி 82-ம் நெம்பர் கிரகத்தில் ஸ்ரீராமநவமி மகோற்சவ ஸ்ரீமத் ஸ்ரீமத் ராமாயண உபன்யாச ஆருவது ஆண்டு விழா 5 4-60 முதல் 8-5-60 முடிய பல தமிழ் அறிஞர்களால் நடைபெறும்.

திருவுந்தியார்

[திரு. K. வச்சிரவேல் முதலியார் பி.ஏ., எல்.டி.,]

(முன் தொடர்ச்சி)

2. சாதனம்

நிராதார யோகத்தைத் தலைப்படுதற்குத் திருவைந்தெழுத்தின் பொருணிலையை உணர்ந்து, அது குறிக்கும் ஞான நெறிபற்றி நிற்க வேண்டும் என்பது முன்னர்க் கூறப்பட்டது.

அந்நெறிபற்றி நிற்கும்போது உடன் நிகழ வேண்டிய உணர்வு நிலைகளையும், அங்குத் தோன்றும் அனுபவங்களையும், அவற்றைப் படிமுறையிற் சார்ந்து மேற்செல்லுமாற்றையும் 13 முதல் 30 வரை உள்ள உந்திகள் குறிக்கின்றன.

ஐம்பொறிகள் உயிரின் அறிவால் செலுத்தப்பட்டுப் புலன்களை அறிந்து வருதல் போல, உயிரும் முதல்வன் திருவருளால் செலுத்தப்பட்டே மனம் முதலிய அந்தக் கரணங்களையும் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் என்னும் புறக்கருவிகளையும்பற்றி உலகப் பொருள்களை அறிந்தும் நுகர்ந்தும் வருகின்றது. ஆயினும், உயிரின் அறிவு புறப்பொருள்களையே நோக்கிச் செல்லும் பழக்கம் காரணமாகத் தன்னையும் அறிவதில்லை; தன்னை உடனிருந்து செலுத்தி அறிவிக்கும் திருவருளையும் அறிவதில்லை. திருவருளோ தன்னைக் காட்டாமலே உயிரின் அறிவில் கரந்து நின்று உபகரித்து வருகின்றது.

இதனால், திருவருள் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பினும், அதனை முதலில் ஒருவன் தலைப்பட வேண்டிய இடம் அவனது உள்ளம் எனப்படும் அறிவு வெளியே ஆகும். அங்ஙனம் தலைப்படுதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஒரு நெறிப்பட்ட உணர்வு. ஒரு நெறிப்பட்ட உணர்வு உலகப் பொருள்கள் எல்லாம் நிலையாதன எனவும், அவற்றால் முத்தி நிலைக்கண் ஆகக்கடவது ஒன்றும் இன்று எனவும் ஐயந்திரிபின்றி உணர்ந்து, பொருள் வரவு, புகழ் வரவு முதலியவற்றில் பற்று அற்றார்க்கே கூடுவது ஆம்.

இக் கருத்துக்களை

ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடம்சிவம் உந்தீபற
தேடும் இடமதன் றுந்தீபற (௧௫)

என்னும் பாட்டுக் குறிக்கின்றது.

உலகப் பொருள்களைப்பற்றிப் பல தலைப்பட ஓடாது ஒரு நெறிப்பட்ட உணர்வு, ஒருவனது அறிவின்கண் மறைந்து நின்று உணர்த்திவரும் பதிப்பொருளை எதிர்ப்பட்டுச் செயலற்று நிற்கும் நிலையே சிவம் வெளிப்படுதற்கு உரிய இடம் ஆகும்—என்பது இப்பாட்டின் பொருள். உயிரின் அறிவில் கலந்து மறைவாக உபகரித்துவரும் நிலையில் முதல்வன் பதி எனப்படுவன்.

இங்குக் குறிப்பிட்ட சாதனை தத்துவ சுத்தி எனப்படும். இதன் பயனாக இதுகாறும் மறைந்து உபகரித்து வந்த திருவருள் மறைத்தலைச் செய்யாது வெளிப்பட்டுத் தோன்றும். இத்திருவருள் வெளிப்பாடே வீட்டுநெறிக்கண் பின் உறுதுணையாக நிற்கற்பாலது.

இதனை,

கள்ளரோ டில்லம் உடையார் கலந்திடின்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடும் எளிதாமென் றுந்தீபற (௨௫)

என்னும் பாட்டுத் தெரிவிக்கின்றது.

வினைக்கீடாக உடம்பைப் பெற்று உடைய உயிர், தன் அறிவின்கண் தோன்றாது நின்று உபகரித்துவரும் கள்வனாகிய

முதல்வனைத் தன் அறிவின்கண் கண்டு கலந்துவிட்டால், முதல்வனது கள்ளத் தன்மை நீங்கி விடுதலால், தன் இயல்பும் முதல்வன் இயல்பும் நன்கினிது விளங்கும்; வினையினின்று விடுபடுதலும் எளிதாகும்—என்பது கருத்து.

இனிமேற்கூறியபடி முதல்வன் திருவருளைத் தன் உள்ளத்திற் காணும் ஒருவன் அத்திருவருளைச் சார்ந்து தன் உண்மை இயல்பாகிய வியாபகத் தன்மையை உணரப் பெறுவன். தத்துவ சுத்தியின் பின் நிகழும் இவ்வனுபவம் ஆன்ம ரூபம் எனப்படும். ஆன்ம ரூபமாவது தன்னை உணர்ந்து அருளை உணராமை.

இதனை,

> கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
> உடந்தை யுடனேநின் றுந்தீபற
> உன்னையே கண்டதென் றுந்தீபற (கச)

என்னும் பாட்டுத் தெரிவிக்கின்றது.

உயிரோடு கலந்து வேறு காணப்படாது உயிரேயாய் இருந்த திருவருளைச் சற்குரவன் அருளால் உன் அறிவில் விளங்கக் கண்டு, அவ்வுடந்தை உடனே கலந்து நின்று கண்டது **உன்னையே** என உணர்க—என்பது பொருள்.

திருவருள் பிறப்புநிலையில் உயிரின் அறிவில் மறைந்து நின்று உபகரித்தல்பற்றி அதனை அந்நிலையில் திரோதான சத்தி (மறைப்பு ஆற்றல்) என வழங்குவது மரபு. அம்மரபுபற்றி, இங்கு அது கிடந்த கிழவி எனவும், உடந்தை (உடன் இருப்பது) எனவும் குறிக்கப்பட்டது, திருவைந்தெழுத்து மறையில் ந என்னும் எழுத்துத் திருவருளின் இந்த இயல்பையே குறிப்பதாகும். அதனைக் கிள்ளி எழுப்புதலாவது ஆசிரியன் போதித்த நோக்கில் ஒருநெறிய மனம் வைத்து உணர்ந்து, அஃது அகண்ட ஞான ஒளியாய் மாறி விளங்கக் காண்டல்.

இனி, இவ்வாறு தனது வியாபக இயல்பு விளங்கப்பெற்ற ஆன்மா தன்னைக் கால தேசங்களுக்கு உட்பட்ட எல்லாப் பொருள்களுக்கும் மேலாக என்றும் உள்ளதாக அறிதலின், "தானே முதல்" எனவும், "தான் முதல்வன் செயல்கள் எல்லாம் செய்தல் கூடும்" எனவும் உணரும். இவ்விருவகை உணர்வும் "யான், எனது" எனப் பண்டு பழகி வந்த பழக்கத்திற்குக் காரணமாக இருந்த மாசு (மூலமலம் அல்லது பசுத்துவம்) முற்றிலும் நீங்காமையால் உள ஆவன; நிட்டை நிலையில் திருவருள் தனக்குச் சார்பாக உள்ளது என்பதையும், அவ்வருளே தன்னை இடமாகக்கொண்டு எல்லாச் செயலும் செய்யும் என்பதையும் நோக்கி உணராமையால் இவ்வுணர்வுகள் உள ஆகின்றன. இவை முறையே அகம்பிரமஞானம் எனவும், சிவசமவாத ஞானம் எனவும் கூறப்படும். இவை பசுத்துவ வாதனை காரணமாக ஆன்மநிட்டையினர் அகத்தே தோன்றுவன ஆகலின், இவை பசு ஞானம் எனப்படும். அருணோதயத்தில், ஞாயிற்றின் ஒளி காரணமாக ஆகாயத்தின் அளப்பரிய நிறைவு விளங்குதல் போல உயிரின் உண்மையியல்பாகிய வியாபக இயல்பு திருவருட் சார்பால்தான் விளங்குவது என உணரும் சிவரூபத்தால் நான் முதல் என்னும் உணர்வு கழியும்; பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சுடும்போது, சுடுவது நெருப்பேயன்றி இரும்பு ஆகாதவாறும், இரும்பு நெருப்புக்கு இடமாக மாத்திரம் அமையுமாறும் போல, முத்தான்மாக்களிடத்துக் காணப்படும் அரிய செயல்கள் அவர்களைப் பற்றித் தொழிற்படுத்தும் திருவருளுக்கு உரிய செயல்களே ஆம் என உணரும் சிவ தரிசனத்தால் சிவசமவாத உணர்வு கழியும். சிவரூபம், சிவதரிசனம் என வழங்கும் திருவருள் உணர்வு நிலைகள் ஆன்மாவின்கண் மேம்பட்டு நிகழும்போது அறியாமையாய்க் கழிவனவாய் உள்ள, மேற்கூறிய பசு ஞானத்தின் இருதிறனும் யான் எனது என்னும் செருக்கின்பாற்படுதலின், அவை அகப்பற்று எனப்படும்.

பசு ஞானத்திற்குக் காரணமாய், பசுத்துவவாதனை எனப்படும் இவ்வகப்பற்று எல்லாப்பற்றையும் அறுப்பதாகிய முதல்வன் திருவருளாகிய பற்றினை (பற்றப்படுவது)ப் பற்றித் தன்னை இழந்து நிற்கும் சாதகத்தால் முற்றக்கெடும் என்பதை அடுத்த பாட்டுக் கூறுகின்றது. அது

> பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
> பற்றை அறுப்பர்என் றுந்தீபற
> பாவிக்க வாரார்என் றுந்தீபற (கரு)

எனவரும் பற்றினைப்பற்றல் என்பது சிவரூப சிவதரிசனங்களில் உறைத்து நிற்றல். இதில் பாவிக்கவாரார் என்றது நான் என்னும் போதநாட்டம் உள்ள யோக பாவனைகளால் பேரின்ப நிலை எய்தவாராது என்றபடி.

மேலே குறித்த உணர்வு நிலைகளுள் நான் முதல் என நிற்கும் ஆன்ம ரூபம் என்பது நின்மல சாக்கிரம் (மாசறு நனவு) எனப்படும். திருவருளால் அன்றித் தனக்கு அறியும் தன்மை இன்று எனக் காணும் காட்சியாகிய சிவரூபத்தால், முன்னைய உணர்வு அறியாமையாய்க் கழிய, அருளினுல் நான்மேல் என நிற்கும் ஆன்ம தரிசனம் நின்மல சொப்பனம் (மாசறு கனவு) எனப்படும். முன்னையது யான் என்னும் செருக்கு நிலை; பின்னையது எனது என்னும் செருக்கு நிலை. இவ்விரண்டையும் கடந்த நிலை நின்மல சுழுத்தி (மாசறு உறக்கம்) எனப்படும். இம்மூன்றும் நிலை,

உழவா துணர்கின்ற யோகிகள் ஒன்ருேடும்
தழுவாமல் நிற்பர்என் றுந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற (கசு)

என்னும் உந்தியால் கூறப்படுகின்றது.

யான் எனது என்னும் செருக்கு நீங்கித் திருவருளால் எல்லாம் நடைபெறுவதைக் காணும் காட்சியாகிய சிவதரிசனத்தைப் பெறும் சிவயோகிகள், நிலத்தில் தாழ்ந்த மணியின் நா மணியின் விளிம்பைத் தொடாமலும் தன்னிடத்தும் அலைவுகள் (Vibrations) இன்றியும் நிலத்தைத்தொட்டு ஓசை இன்றி நிற்றல்போல, தத்துவங்களையும் பசுத்துவ வாதனையினையும் தழுவிப் பாச ஞான பசுஞானங்கள் தம் அறிவில் நிகழாதபடி தம்மையிழந்து திருவருளைச் சார்ந்து நிற்பர் என்பது கருத்து.

"எல்லாம் அறஎன் னைஇழந் தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே"

என்னும் கந்தர் அநுபூதி இந்நிலைபற்றி எழுந்தது ஆகும். முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தில் 'தன்னை மறந்தாள்' என்னும் தொடரால் குறிக்கப்படும் அநுபவ உணர்வுப் படிநிலை இதுவே ஆகும். இனி, "அற்றவர்க்கு அற்ற சிவன்" எனத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தபடி, அங்ஙனம் தன்னை இழந்தார்க்கு முதல்வன் தன் அருள் ஒளியால் சிவஞானத்தை உதிக்கச் செய்து, அவர் அம்மெய்யுணர்வால் தன்னை அடிமையாகத் தலைப்பட்டு உணரும்போது, யாரையும் எவற்றையும் சங்கற்ப மாத்திரையால் தொழிற்படுத்தி நிற்கும் செம்பொருளாக விளங்குவன். இது மேற் கூறிய மூன்று நிலைகளையும் கடந்த நான்காம் நிலை, இதனை நின்மல துரியநிலை எனவும், அருணிலை எனவும் நூல்கள் கூறும். இந்த நிலையைத் தலைப்பட்டோரே பிறப்பு அறுப்பர். இதனை,

திருச்சிலம்போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற (கஎ)

என்னும் பாட்டுக் குறிக்கின்றது.

திருச்சிலம்பு ஓசை ஒலி வழியேசென்று, அங்கே நேர்பட நின்று நிருத்தனைக்கும்பிடு—என முடிக்க. ஆன்ம உணர்வை விளக்கிப் பற்றுக்கோடாக நிற்கும் திருவருள்வழி, அவ்வருளேயாய் நின்று, இறைபணி நிற்க என்பது பொருள்.

இந்நிலையைத் துரிய அருணிலை எனப்படும் நான்காம் நிலை எனக் கூறுவது மரபு என்பதை,

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாம்என் றுந்தீபற
நாதற் கிடமதென் றுந்தீபற (கூசு)

என அணைந்தோர் தன்மை கூறுமிடத்து ஆசிரியர் ஓதினமைபற்றி அறியலாம். இதில், நாலாயபூதம் என்றது நான்காம் பூதமாகிய காற்றை, அஃதாவது, உயிரை. நாதம் என்றது திருவருளை. பாட்டின் பொருள் வெளிப்படை.

இங்குக் கூறிய நான்காம் நிலையாகிய, நின்மல துரிய அருணிலையே நிராதாரயோகத்தால் எய்த வேண்டும் எனக் கூறப்பட்ட மீதானம் ஆகும். மலவாதனை முற்றும் நீங்கி எய்துதற்குரிய இவ்வருணிலையில் ஆன்மாவுக்குச் சார்பாக, ஆன்ம அறிவைத் தன்னகத்தே அடங்கக் கொண்டு விளங்குவதாகிய அருள்வெளியே திருவைந்தெழுத்தில் வ என்னும் எழுத்தால் குறிக்கப்படுவது, இதுவே

பரமவியோமம், சிதம்பரம், சிதாகாசம், திருவம்பலம் முதலிய பெயர்களால் குறிக்கப்படுவது.

இவ்வாறு மீதானத்தைத் தலைப்பட்ட முத்தான்மா, அந்நிலையில். கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று நிலைகளிலும் உயிர்க்குயிராய் உடனிருந்து உணர்த்திவரும் முதல்வனது பேருபகாரத்தை மெய்யாக உணர்ந்து நிற்றலின், அவ்வருளை மறவாமையால் முதல்வன் மாட்டு இச்சைமீதூர்ந்து பேரன்பு செய்து நிற்கும். அங்ஙனம் அன்பு செய்து நிற்க முதல்வனும் அவ்வன்பே இன்பாய் அனுபவப்பட்டு, அவ்வான்மாவைத் தன் வண்ணமாக்கிச் சிவமேயாக அமர்ந்திருக்கச் செய்வன்.

இந்நிலையே நின்மல துரியாதீத நிலை, இன்புறுநிலை, ஞானநிட்டை நிலை என்னும் குறிகளால் வழங்கப்படும். இதுவே சைவ சித்தாந்துட் கூறப்படும் பரமுத்தி நிலை ஆகும்.

மீதானம் எனப்பட்ட அருணிலையில் ஊன்றி நின்று, பரமுத்தி நிலை எனப்படும் இன்புறு நிலையைத் தலைப்படும்பொழுது ஆன்மாவின் கண்நிகழும் அனுபவங்களை 18, 19-ஆம் உந்திகள் தெரிவிக்கின்றன.

அவை,

மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே உந்தீபற
அதுவேயிங் குள்ளதென் றுந்தீபற (கஅ)

எனவும்,

கருதுவ தன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன அரியன்என் றுந்தீபற (கசு)

எனவும் வருவன ஆகும்.

பாசத்தால் வரும் மருட்கை உணர்வினையும், பசுத்துவ வாதனையால் "நான் முதல்" எனவும், "நான் முதல்வனுக்குச் சமமாவேன்" எனவும் இருதிறப்பட வரும் பசு ஞானத்தினையும் கழித்தவழி சிவஞானத்திற்குக் கோசரம் ஆம்படி நின்றருளும் முதல்வனிடத்து, அவன் அநாதியாக உடனின்று ணர்த்திவரும் பெரியதோர் உதவியை மறவாது உணர்ந்து அன்பு செய்திரு; இப்பேரன்பு ஒன்றே இம்முத்தி நிலைக்கண் உள்ளதன்றி கருவிகாரணத் தொடர்பு நீங்காத நிலையில் மேற்கொள்ளப்படும் தியான சமாதி என்பவற்றுள் ஏதொன்றும் இல்லை' என்பது முதற்பாட்டின் பொருள்.

சேக்கிழார் நாயனார் திருப்பாசுரத்தின் தாற்பரியம் கூறுமிடத்து "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானமுண்டார்" என்றருளிச் செய்தமை இதனோடு ஒப்பு நோக்கத்தக்கது.

"பரம்பொருள் அருளே வடிவாக உள்ளது ஆகலின், மெய்யன்பு செய்யத் தலைப்படுவார் உளராயின், எத்துணையும் எளிய உயிரை எத்துணையும் அரிய, பெரிய தான் ஆகும்வண்ணம் செய்து பேரின்பத்தை அளித்துத் தலைப்படும். அது தியான சமாதிகளால் உன்னி எட்டுதற்கு அரிய பொருளே ஆகும்" என்பது இரண்டாம் பாட்டின் பொருள்.

இனி, பரமுத்தி நிலையாகிய இன்புறு நிலையில், அது நீ ஆகிறாய் என்பது போன்ற மகாவாக்கியப் பொருள்பற்றி, மாணக்கனுக்கு ஐயம் உண்டாகும். அது முத்தி நிலையில் ஆன்மாச் சிவமே ஆகிவிடுமோ, அன்றிச் சிவத்தை உணர்ந்து வேருக நிற்குமோ என்பது. இவ்வையத்தைப் பின்வரும் பாட்டுத் தீர்க்கின்றது.

இரவு பகலில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரைய நின்றுந்தீபற (உ०)

மூலமலத்தில் அழுந்துவதால் வரும் கேவலமும், மாயையில் அழுந்துவதால் வரும் சகலமும் நீங்கிய சுத்தநிலைக் கண்ணதாகிய பேரின்ப நிறைவில் (சிவத்தில்) நீ மிக விரைந்து, மிகக்கலந்து நில்—என்பது பாட்டின் பொருள்.

"இங்கு விரைதல் என்பது ஆன்மாவின் இச்சா சத்தியின் தொழிற்பாடும், விரவுதல் என்பது அதுதான் என்று ஒரு முதல் காணப்படாது ஒன்றி நின்று உணரும் கிரியா ஞான சத்திகளின் தொழிற்பாடும் குறித்து நிற்கின்றன. எனவே, முத்தி நிலையில் ஆன்மாத் தன் இருப்புக் கெடாது முதன்மை மாத்திரம் கெட்டு, (The soul while merging with the supreme loses its individuality while its identity is preserved) காண்

பான் காட்சி காணப்படுபொருள் என்னும் பகுப்புணர்வு தோன்ருமல் சிவத்தைச் சார்ந்து சிவமேயாய்ப் பேரின்பம் நுகர்ந்து நிற்கும் என்பது பெறப்பட்டது. வேறற உடனுகி நிற்றலே அத்துவிதம் என்பதன் பொருள் என்பது முன் கட்டுரையில் கூறப் பட்டது.

இப்பாட்டின் பொருளேப் பின்வரும் இரண்டு பாட்டுக்களின் பொருளோடு பொருந்த வைத்து உணர்தல் ஆசிரியர் கருத் தைத் தெளிவிக்கும்.

அதுஇது என்னுஅனேத்தறி வாகும்
அதுஇது என்றறிந் துந்தீபற
அவிழ்ந்த சடையானென் றுந்தீபற (௩௯)

அவனிவன் ஆன(து) அவனருளால்
[அல்ல(து)
இவனவன் ஆகான்என் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற (௪0)

என்பவை அவை.

ஆராய்ச்சி நிலேயில் முதல்வன் இயல்பை யும், ஆன்மாவின் இயல்பையும் தம்முள் மயங்காதவாறு அறிந்து, அநுபூதி நிலேயில் காண்பான் காட்சி காணப்படுபொருள் என் னும் விகற்ப உணர்வு தோன்ருமல் நிற்பதே மெய்யுணர்வின் முடி நிலேயாகிய ஞான நிட்டையாகும். இவ்வுண்மையை முதல்வன் அருந்தவக் கோலத்தினனுய் இருந்து காட்டும் மோன முத்திரையைப்பற்றி உணர்க - என் பது முன்னேயதன் பொருள் நிலே.

பிறப்பு நிலேயில் முதல்வன் உயிரேயாய் நின்று உபகரித்தது அவன் அருளால் என் பது யாவர்க்கும் உடன்பாடு. அதுபோல வீட்டு நிலேயில் உயிர் சிவமேயாய் நின்றின் புறுவதும் சிவனருளால் உள்ளதாம்; அன்றி இவ்வுயிர்தான் கெட்டுச் சிவம் ஆகிறது என் பதும், சிவத்துக்குச் சமமாகும் என்பதும் பொருந்தா. பிறப்பு வீடு என்னும் இரு நிலே களிலும் உயிர்முதற் பொருளின் அருள்வழி நிற்கும் அடிமையே ஆகும்–என்பது இரண் டாவதன் பொருள்நிலே.

ஞானமும் ஞேயப் பொருளும்—பற்றும்
ஞாதாவும் இல்லேஎன் பார்க்கரி யாராம்,

ஞானமும் ஞேயப் பொருளும்—பற்றும்
ஞாதாவு மாய்ப்பகுப் பார்க்கும் எட்டாராம்
—ஆநந்தம் ஆநந்தம் தோழி

என்னும் சிவஞான முனிவர் வாய்மொழி இங்குக் கூறிய பொருளின் தெளிவாகும்.

முத்தியில் ஒரு பொருளே உள்ளது என் பார்க்கு இன்புறு நிலேயை எய்துதல் கிடைக் காது; ஆன்மாவையும் முதற் பொருளேயும் இரண்டாகப் பகுத்துணருவார் உணர்வு நிலே யைக் கடந்து நிற்பதே இன்புறுநிலே என் பது ஆநந்தக் களிப்பின் கருத்து.

திருவைந்தெழுத்தில் உள்ள சி என்னும் எழுத்து இவ்வின்புரு நிலேயையும், இன்புரு வச் சிவத்தையும் குறிக்கும். அது பேசா எழுத்து எனப்படும்.

இங்ஙனம் சாதனத்தின் இயல்பையும் அதனே வாய்ப்பச் சாதிக்குமாறும் உணர்த் திய ஆசிரியர் தாம் விளக்கியருளிய அருள் நெறியின் உயர்வையும் அதன் பயனேயும் பின் கூறுகின்ருர்.

3. சிவநெறியின் சிறப்பு

இங்குக் கூறப்பட்ட திருவருள்நெறி முதல் நூல்களுள் கூறப்படும் முப்பத்தாறு தத்துவங்களேயும் பிற நூல்களுட் கூறப் படும் பொருணிலேயினேயும் தன்கண் அடங் கக்கொண்டு நிற்பது. ஆதலால் பிறபல நெறி களும் முடிவில் தன்கண் வந்து கூடும்படி நிற்கும் பெருநெறி இது. (௨௧)

யோகாந்தம் கலாந்தம் நாதாந்தம் என் பவையும் இதன்கண் வந்து கூடுவனவே ஆகும்; அவற்றை வேறுபடக்கொண்டு ஒழு கின் அவை பிறப்பு நிலேக்கண் செலுத்துவ னவாகவே முடியும். (௨௨)

இந்நெறி நிற்போர் முதல்வன் ஆணே யாகிய திருவருளேத் தம் அறிவின்கண் தலேப் பட்டுத் தம்மையும் தலேவனேயும் தெளிய உணர்தலாலும், உலகியலில் நிற்கும்போதும் அட்டமூர்த்தியைத் தொழுகின்றமையாலும் அவர்க்கு வினேப்பற்றும் மாயைப்பற்றும் உள ஆகா; அவர் தாமும் தம் கருவி கரணங் களும் முறையே சிவமும் சிவகரணமும் ஆக

நிகழப்பெறும் பேறுடையர் ஆதலால் மூல மல வாதனை அவர்களுக்கு இல்லை.
(௨௩, ௨௪, ௨௫)

மேற்கூறியவாறு மீதானத்தை அடைந்து இன்புறு நிலையைப் பெற்றவர் உள்ளும் புறமும் ஏகதேசக் காட்சி நீங்கி, முதல்வனது அகண்ட பரிபூரண சொரூப நிலையை இடையறாது உணர்ந்து, அன்பால் இன்பம் ஆர்வர். ஆதலால் அவர்க்குத் திரிவுக் காட்சியும் அது பற்றிப் பிறப்பும் உள ஆகா. (௨௬, ௨௭)

வேதாந்தங்களுட் கூறப்படும் ஆன்ம ஞானம் எனப்படும் மெய்யுணர்வு வித்துப் போன்றது. அம்மெய்யுணர்வின் பயனாக விளைவது மெய்யன்பு; அது வித்திற்றோன்றும் முளை போன்றது. அதன் பயனாக விளைவது சிவபோகம்; இது உணவாகப் பயன்படும் நெல் (கனி) போன்றது. இவ்வாறு கண்டு சிவபோகம் நுகரப் பெற்றோரே மெய்யுணர்ந்தோர் எனப்படுவர். இவ்வாறன்றி ஞானத்தின் பயனாகிய அன்பை உணராமையாலோ, பேணாமையாலோ புறக்கணித்தவர் பித்தேறினவர் எனவே கொள்ளப்படுவர் :

வித்தினைத்தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறினார்களென் றுந்தீபற
பெறுவதங் கென்பெண்ணே உந்தீபற (௨௮)

முதற்பொருளாகிய சிவத்தைத் தலைப்படும் இன்னதென்று கூறப்படாதது; சொல்லப்புகும் நிலையில் சொல்லும் ஆன்மாவும் அதன் உணர்வும் சொல்லப்படும் சிவத்தை விட்டு வேறுபட நிற்பவை ஆதலின், அந்நிலையே சிவத்தைத் தலைப்படும் இன்புறு நிலையின் எல்லை. ஆதலால் ஞானபோதகத்தின் மெய்ம்மை இருந்து காணப்படுவதன்றி சொல் நடை அன்று. (௨௯)

இல்நிலை, துறவு நிலை என்பவற்றுள் எந்நிலையில் நின்று எவ்வறத்தைச் செய்யினும் தற்போதம் என்னும் வாளைத் திருவருளாகிய உறையுள் சேர்த்தித் தன் முனைப்பும் தன் செயலும் இன்றி, சிவன் முதன்மையும் சிவன் செயலுமாக நிகழ இருக்க வேண்டும். (௩௦)

சாவிபோம் மற்றைச் சமயங்கள்
புக்குநின்(று)
ஆவி யராதேயென் றுந்தீபற
அவ்வுரை கேளாதே உந்தீபற (௩௧)

4. அணைந்தோர் தன்மை

அதீதம் எனப்பட்ட இன்புறு நிலையை எய்திய அன்பர்கள் உலக முகப்பட்டு நிற்கும் நனவு நிலையிலும் துரிய அருணிலையை உடையவராக ஒழுகுவர். இவர்களே துறந்தார் (சீவன் முத்தர்) எனப்படுவர். இவர்கள் உடம்பு முகந்துகொண்ட நுகர்வினைப் பயனாக உலக போகங்களை நுகர நேர்ந்தால், அவற்றை முதல்வன் திருவடியின்பமாகவே விளையப்பெற்று நுகர்வர். ஆதலால் அவர்களை உலக வின்பம் மயக்கத்தைச் செய்து பந்திப்பதில்லை. (௩௨, ௩௩)

இத்தகைய பெருமக்களை ஆண்ட முதல்வன் பேரின்ப சத்தியாகிய பெரியநாயகியோடு உடனாகி வரம்பில் இன்பம் உடையவன். அவன் அவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பன்; தான் யாதும் பயனைப் பெறுவதும் இல்லை, பெற அவசியமும் இல்லை. (௩௪)

முதல்வனைத் தலைப்பட்டுணர்வோர் தம்மையும் தலைவனையும் பெண்டிரும் அவரைக் கூடி இன்புறுத்தும் ஆண்மக்களும் போலவும், பேய் பிடிக்கப்பட்டோரும் பேயும் போலவும் அனுபவத்திற் காண்பர். அதாவது, முதல்வன் தம்மைக் கலந்து தன் வண்ணம் ஆம்படிசெய்து இன்புறுத்துதலும், தன் செயலைத் தம் கண் வைத்துச் செய்தலையும் உணர்வர். (௩௫)

முதல்வன் தன்னை அணைந்தோரைத் தானாம் வண்ணம் செய்து அவர் சென்ற நெறியே உலகத்துக்கு அறநெறியாக நின்று நிலவும்படி வைப்பன்; அதாவது, சீவன் முத்தர்களே உலகத்தார்க்கு நன்னெறி காட்டும் ஆசிரியர்களாவர். அவர்கள் துரிய அருள் நிலை, இன்புறு நிலை என்னும் இருநிலைகளுள் ஒன்றன்கண் நிற்றல் அன்றி, ஏனை ஆன்ம தரிசனம், ஆன்மரூபம், சகலம், கேவலம் என்னும் தாழ்நிலைகளைத் தலைப்படார். தலைப்படின், அது பொற்கொழுக்கொண்டு வரகுக்கு உழுவதுபோல் ஆகும் என்பதை உணர்வர். (௩௬, ௩௭, ௩௮)

ஆன்மா முத்தியாகிய பயனைப் பெறுதற்கு உரியது; அதனை அநாதியே மூலமலம் பற்றி மோகம் முதலாகிய தன் காரியங்களால் அதற்கு உடம்பாகிய அத்தியைக்

கொடுத்தது. அவ்வுடம்பைப்பற்றி உலக போகம் நுகராது திருவருளாகிய கத்தியால் மோகக் கொடியை அறுத்தால் முத்தியாகிய பழம் பழுக்கும். சீவன் முத்தர் அவ்வாறு மோகம் அறுத்து, ஏகதேசக் காட்சியைவிட்டு எல்லாப் பொருள்களும் முதல்வனிடத்திலும், முதல்வன் எல்லாப் பொருள்களிடத்திலும் இருப்பதை உணர்ந்து, சிவநிறைவே தம் நிறைவாக அனுபவித்து இன்புறுவர்.

(சுக, சுஉ)

உடம்பு உள்ளபோதே அனுபவமுள்ள தேசிகன் அருள்பெற்று மெய்ஞ்ஞானத்தால் இன்புறு நிலையைப் பெறுதல் வேண்டும்; அதனைப் பெறாதவர்கள் எல்லாரும் உடம்பைக்கொண்டு மாயா காரியமாகிய உலக போகத்தை நுகர்வர். அவர் வரட்டுப் பசுக்கள் போல யாருக்கும் பயன்படமாட்டார்

(சுங)

ஆசான் மூர்த்தியாக எழுந்தருளி வந்து சிந்தையில் தம் அருட்டிருமேனியைப் பதிவித்துத் திருவடிகளைத் தலைமேல் முதல்வன் தன் கருணையுருவாகிய அம்மையுடன் வாழ்க என வாழ்த்துவோமாக. (சச)

உய்ய வந்தான் உரையாகிய இந்நூல் உலகத்தார் அனைவர்க்கும் பாசநீக்கம் செய்து இன்பநிலையை எய்துவித்தற்கு உரியது. இதனை அநுபவம் உடைய தேசிகன்பால் கேட்டுச் சிந்தித்துத் தெளிவோர் மெய்யுணர்ந்தோர் ஆவர். (சரு)

என இந்நூல் முடிகின்றது.

குமாரவயலூர்—சுப்பிரமணிய சுவாமிகோயில் தண்ணீர்க்குழாய்த் திறப்புவிழா (10-4-60)

திருவல்லம்

தாயவன் உலகுக்குத் தன்னெப் பிலாத்
தூயவன் தூமதி சூடி யெல்லாம்
ஆயவன் அமரர்க்கும் முனிவர் கட்கும்
சேயவன் உறைவிடந் திருவல் லமே.
—திருஞானசம்பந்தர்.

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற பதிகள் முப்பத்திரண்டில் திருவல்லம் என்பது ஒன்று. இப்போது திருவலம் என்று வழங்கப் பெறுகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம் பகுதியிலுள்ளது. திருவலம் என்ற இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஒன்றரை கல் தொலேவில் இருக்கிறது. நிவா நதிக்கரையில் அமைந்திருக்கிறது. தீக்காலி வல்லம், வாணபுரம் என்றும் இப்பதிக்குப் பெயர்கள் உண்டு.

கோயில் கோபுரம் தெற்கு வாயிலில் இருக்கிறது. அவ்வழியேதான் கோயிலுக்குள் செல்ல வேண்டும். சுவாமி, அம்பிகை சந்நிதிகள் கிழக்கு நோக்கியே இருக்கின்றன. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. வெளியே தேர் ஓடும் தெருவும் உண்டு. கோபுரத்தின் உள்ளே நுழைந்ததும் வலது புறம் திருக்குளம் இருக்கிறது. அதைக் கௌரி தீர்த்தம் என்பர். பிறகு ஒரு சின்ன கோபுரமுடைய வாயில் வழியே உள்ளே செல்கிறோம். இடதுபுறம் நகரீசுவரர் சந்நிதி யிருக்கிறது. தென்மேற்கு மூலேயில் உற்சவமூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர்: மேற்குப் பிரகாரத்தில் சகஸ்ரலிங்கம், முருகன் இவர் சந்நிதிகள் இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் அம்பாள் சந்நிதியும், மீனட்சிசுந்தரேசர் சந்நிதியும் உள்ளன. கோயிலின் வடகிழக்கு மூலேயில் பைரவர், சூரியபகவான் இவர்கள் எழுந்தருளியுள்ளனர்.

இறைவன் சந்நிதிக்கு வலது புறத்தில் ஜலகண்டீசுவரர் அல்லது பாதாளீசுவரர் சந்நிதி யமைந்திருக்கிறது. இத்தலத்திறைவன் திருநாமம் வல்லநாதேசுவரர் என்பது; பில்வநாதர் என்றும் கூறப்படுகிறது. தேவியின் திருப்பெயர் வல்லாம்பிகை. துனுமத்யாம்பாள் (வில்லேப்போல் இடையுடையவள்) என்றும் கூறுகின்றனர். வல்லநாதர் சந்நிதிக்குத் தென்புறம் மேற்கிலும் கிழக்கிலும் திருமால் இருந்த திருக்கோலத்திலும், நின்ற திருக்கோலத்திலும் காட்சி யளிக்கிருர்.

இத்தலத்தின் தீர்த்தங்கள் இரண்டு. நிவாநதியொன்று; கௌரிதீர்த்தம் என்ற திருக்குளம் மற்ருென்று. தலவிருட்சம் வில்வம். பழைய பலாமரம் ஒன்றும் உள்ளேயிருப்பதைத் தலவிருட்சமாகவும் சிலர் கூறுகின்றனர். கோயிலில் இரண்டு காலபூசை நடைபெறுகின்றது. மாசி மாதத்தில் பிரமோற்சவம் நடக்கும். சித்திரை பௌர்ணமி, ஆனித் திருமஞ்சனம், கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை இந்த திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

திருஞானசம்பந்தர் பதினெரு பாசுரங்களேயுடைய ஒரு பதிகத்தை இப்பதி இறைவன்மீது பாடியருளியுள்ளார். "சார்ந்தவர்க்கின்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன் உறைவிடம் திருவல்லமே" என்று கூறுகிருர். திருநாவுக்கரசர் இத்தலத்திற்குத் தனிப்பதிகம் பாடவில்லே யெனினும் வேறு பதிகங்களில் குறிப்பிட்டுள்ளார். அருணகிரிநாதர் வள்ளிமலேயைப்பற்றிப் பாடும் திருப்புகழ் ஒன்றில் வல்லேநகர் என்று கூறி யிருப்பது இத்தலமேயெனக் கருதுகின்றனர். வள்ளி மலேயும் இப்பதியினின்றும் எட்டு கல் தொலேவில் இருப்பதால் வல்லேநகர் என்று அவர் கூறி யிருப்பது திருவல்லமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. மேலும், சம்பந்தப் பெருமான் "கரியவன் நான்முகன் காணவொண்ணுத் தெரியவன் வளநகர் திருவல்

லமே'' என்று கூறியிருப்பதில் இப்பதியை நகர் என்றே கூறியிருக்கின்றார். இங்குள்ள ஒரு இலிங்கமூர்த்திக்கு **நகரீசர்** என்று பெயர்.

இத்தலத்துப் பெருமானை நவக்கிரகங்களும், வல்லாளன் என்னும் மன்னனும் வழிபட்டுப் பேறு பெற்றதாகக் கூறப்படுகிறது. ஒளவைப்பிராட்டி நாவற்கனி பெற்றதும், விநாயகர் சிவபெருமானிடம் மாம்பழம் பெற்றதும், இறைவன் முருகனிடம் பிரணவ உபதேசம் பெற்றதும் இங்கே என்றும் சொல்கின்றனர். விநாயகர் இறைவனை வலம் வந்து மாங்கனி பெற்றதால் இவ்விடத்திற்கு **திருவலம்** என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறுகின்றனர். தேவாரத்திலும், கல்வெட்டுக்களிலும் **திருவல்லம்** என்ற பெயரே காணப்படுகிறது. **திருவலம்** என்று மக்கள் சாதாரணமாக வழங்கி வருவதைக்கொண்டு இவ்விதகதையொன்றைக் கற்பித்தனர் போலும்.

இவ்வூரிலிருந்து மூன்று கல்தொலைவிலுள்ள கஞ்சன்கிரி திருக்குளத்திலிருந்து திருவல்லநாதருக்குத் திருமஞ்சனம் கொண்டு வருவது வழக்கம். அப்படிக்கொண்டு வருபவனைக் கஞ்சன் என்ற அசுரன் துன்புறுத்தி வந்தான். திருமஞ்சனம் எடுத்து வருபவன் பெருமானிடம் முறையிட்டான். அவர் நந்தியெம்பெருமானை ஏவினார். நந்தீசர் அசுரனைக் கொம்பால் குத்தித் தூக்கியெறிந்து விட்டார். அவ்வசுரனுடைய இரத்தம் சிந்திய இடங்களில் மலைமேல் இலிங்கங்கள் இருக்கின்றனவென்றும், பௌர்ணமி இரவுகளில் 11-மணி சுமாருக்கு ஜோதி தோன்றுகிறதென்றும், அதிலும் சித்திரை, தை இந்த இரண்டு மாத பௌர்ணமி இரவுகளில் ஜோதி அதிகமாகத் தெரிகிறதென்றும் கூறுகின்றனர். இந்த கோயிலில் நந்தி இறைவனை நோக்கியில்லாமல், இறைவனைப் போலவே கிழக்கு நோக்கியிருக்கிறது. நந்திக்கும் இலிங்க மூர்த்திக்கும் இடையேயுள்ள பலிபீடம் ஆமைபோல் இருக்கிறது.

பல்லவ சிற்பங்கள் கோயிலில் காணப்படுவதால் மிகப் பழைய கோயில் என்பதில் ஐயமில்லை. இங்குள்ள துவாரபாலகர் உருவங்களும், இருந்த திருக்கோலத்தில் உள்ள திருமால் உருவமும் அதியற்புத சிற்ப வேலைப்பாடோடு அமைந்தவை. பலிபீடத்திற்குக் கீழே ஒரு சுரங்கம் இருக்கிறது.

இக்கோயிலில் பல தமிழ்-கிரந்த கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. நந்திவிக்கிரம பல்லவன், அவன் காலத்தவர்களான பாண மன்னன் விக்கிரமாதித்தன் I, கங்கமன்னன் பிருதிவிபதி I இவர்களுடைய கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில் ஜயங்கொண்ட சோழமண்டலத்து படுவூர்க்கோட்டம் பெரும்பாணப்பாடியிலுள்ள மீயரை அல்லது கரை வழிநாட்டுத் திருவல்லம் என்று குறிக்கப் பெறுகிறது. இராஜேந்திர சோழன் I, இராஜராஜசோழன் III, கோமாறவர்மன் வீரபாண்டியன், குலோத்துங்க சோழன் I, வீரசோழன், குலோத்துங்க சோழன் III, விக்கிரம சோழன், இராஜராஜசோழன் I, வீரராஜேந்திரன் I, நந்தி விக்கிரம பல்லவன், பாண மன்னன்-வாண வித்தியாதரன் முதலிய மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் அவை. கோயில் பூசை முதலியவற்றிற்குப் பொருள் வழங்கியது, நிலதானம் செய்தது, விளக்கெரிக்க நெய் கொடுப்பதற்காகப் பொன் கொடுத்தது, நிலவரி தள்ளுபடி செய்தது, முதல் இராஜராஜ சோழனின் அரசியல் அதிகாரி ஈராயிரவன் பல்லவரையன் என்பவன் இராஜராஜேசுவரம் என்ற கோயில்கட்டி, 2000 குழி நிலம் இரண்டு விளக்கெரிப்பதற்காகக் கொடுத்தது, கைத்தறிவரி, குற்ற தண்ட பணம் இவைகளைக் கோயிலுக்குக் கொடுத்தது, நில விற்பனை செய்தது, ஞான மூர்த்தி என்ற துறவியொருவர் மண்டபம் கட்டியது, சேனைத் தலைவர் ஒருவர் திருவல்லம் சபையாரிடம் 800 குழி நிலம் விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு வழங்கியது, அந்தணர் ஒருவர் அம்பிகை உருவத்தைக் கோயிலில் எடுப்பித்தது, மூன்று ஊர்களைக் கோயிலுக்கு வழங்கியது, இரண்டு ஊர்களின் நிலவரி வருவாயைக் கோயிலுக்கு அளித்தது, விளக்குக்காகத் தொண்ணூறு ஆடுகள் கொடுத்தது இன்னும் பல அரிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. விளக்கெரிக்க நெய்கொடுப்பதற்காக 25 கழஞ்சு பொன் கொடுத்து, ஒரு நாளைக்கு அப்படிக் கொடுக்கத் தவறினால் ஐந்து கழஞ்சு அபராதம் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. அமரா

பரணன் சீயகங்கன் என்ற மன்னனின் அரசியான அரியபிள்ளை யென்பவள் இரண்டு விளக்குகள் அளித்தாள். இந்த சீயகங்கனே, நன்னூலை எழுதிய பவணந்திமுனிவரை ஆதரித்தவன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. முதல் குலோத்துங்க சோழன், ஆறும் விக்கிரமாதித்தன், மூன்றும் ஜயசிம்மன் இவர்களுடன் போரிட்டு வெற்றி பெற்றதை ஒரு கல்வெட்டிலிருந்து காண்கிறோம். மதுராந்தக கண்டராதித்தனார் இந்த கோயிலுக்கு வந்து 1000 கும்பங்களைக்கொண்டு இறைவனுக்கு அபிஷேகம் செய்வித்ததையும், கோயிலின் வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்ததையும் ஒரு கல் வெட்டினால் அறிகிறோம். நந்திவிக்கிரம பல்லவன் காலத்திய கல்வெட்டில் திருப்பதியம் (தேவாரத் திருப்பதிகம்) குறிக்கப்படுகிறது. அவ்வாறு குறிக்கும் கல்வெட்டுக்களில் மிகப் பழையதென இது ஆராய்ச்சியாளர்களால் கருதப்படுகிறது.

அல்லயல டர்ந்த வில்லடல னங்கன்
அல்லிமல ரம்பு தனையேவ
அள்ளியெறி கின்ற பிள்ளைமதி தென்ற
லையமுது றுகின்ற அணையூடே
சொல்லுமர விந்த வல்லிதனை கண்டு
தொல்லைவினை வந்து முனியாதே
துய்யவரி வண்டு செய்யமது உண்டு
துள்ளியக டம்பு தரவேணும்
கல்லசல மங்கை எல்லையில்வி ரிந்த
கல்விகரை கண்ட புலவோனே
கள்ளொழுகு கொன்றை வள்ளல்தொழ அன்று
கல்லலற ஒன்றை அருள்வோனே
வல்லசுர ரஞ்ச நல்லசுரர் விஞ்ச
வல்லைநகர் வந்த மயில்வீரா
வள்ளிபடர் கின்ற வள்ளிமலை சென்று
வள்ளியை மணந்த பெருமாளே

—அருணகிரிநாதர்.



மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில் கோபுரத் திருப்பணி துவக்க விழா 26-3-60.

மன்னார்குடி, இராசகோபாலசுவாமி கோயில் இராசகோபுரத் திருப்பணி விழாவை 26-3-60-ல் ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் துவக்கிவைத்தார்கள். தஞ்சாவூர் அறநிலையத் துறை துணை ஆணையர் திரு. கே. சோமசுந்தர தேசிகர், எம்.ஏ. அவர்களும், திரு. டி. சுவாமிநாத உடையார், எம்.எல்.ஏ. அவர்களும் கலந்துகொண்டார்கள்.

ஏனாதிநாத நாயனார்

ஏனாதிநாதன்தன் அடியார்க்கும் அடியேன்
—சுந்தரர்.

பத்தனை ஏனாதி நாதனைப்
பார்நீடு எயினைதன்னுள்
அத்தனைத் தன்னேடு அமர்மலைந்
தானெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்விடு ஒழிந்தவன்
கண்டிப்ப நின்றருளும்
நித்தனை ஈழக்குலதீபன் என்பரிந்
நீள் நிலத்தே.

—நம்பியாண்டார் நம்பி.

இமயத்தில் புலிக்கொடி பொறித்த பேராற்றலும் பெருமையுமிக்க சோழர்கள் ஆட்சியிலுள்ள வளமிக்க சோழ நாட்டிலே எயினனூர் என்ற பழைய ஊர் ஒன்றுண்டு. அந்தப்பதியின் கண் ஈழக்குலச் சான்ருர் மரபின் வந்த ஏனாதிநாதர் என்ற பெரியார் இருந்தார். திருநீற்றுத் தொண்டிற் சிறந்தவர். மன்னர்களுக்கு வாள்படை பயிற்றுவிக்கும் தொழிலில் தலைநின்ருர். வாள்படை பயிற்றுவித்து அதனல் வரும் பொருளையெல்லாம் சிவனடியார்களுக்குப் பயன் படுத்தி வருவராயினர்.

பகைவரும் பாராட்டும் பண்புடன் ஏனாதிநாதர் ஒழுகிவந்தார். தங்கள் குலத் தொழிலில் தாயபாகமுடைய அதிசூரன் என்ற ஒருவன் இருந்தான்; வாட்போரில் தன்னை மிஞ்சியவர் யாரும் இல்லை என்ற செருக்குடையான்; தன்னைப் பெரியவனென்று தானே மதித்தான், வாட்படை பயிற்றுதலில் தனக்கு வரும் பொருள் வரவரக் குறைந்தது, ஏனாதிநாதருக்கு ஊதியம் பெருகிற்று. ஆகையால் அதிசூரன் பொருமையால் பகைமையை மேற்கொண்டான். சுற்றத்தார்களுடனும் போர்மள்ளர்களுடனும் ஏனாதிநாதர் இல்லத்தை அண்மி, "வாள் பயிற்றும் தொழில் உரிமை அதில் வலிமை உடையார்க்கே உண்டு" என்று அவர் கடைவாயிலினின்றும் அறைகூவினன். அது "வெங்கண் புலிகிடந்த வெம்முழையில் சென்று அழைக்கும் பைங்கண்குறு நரியே" போன்றிருந்தது. "யார் போர் செய்ய அழைத்தது" என்று கூறிக்கொண்டு வாள் கேடயங்களுடன் போர்க்கோலம் பூண்டு வந்தார் ஏனாதி நாதனர். அவ்வளவில் அவருடைய சுற்றத்தார்களும், அவரிடம் வாள் வித்தை பயின்றவர்களும் அவர் பக்கம் சேர்ந்தார்கள்.

"இந்த வெளியிடத்தே போர் செய்து யார் வெற்றிபெறுகின்ருரோ அவர்க்கே வாட்படைப் பயிற்றுவித்தலால் வரும் பொருள் உரியதாகும்" என்று அதிசூரன் உரைத்தான். நாயனுரும் சரியென்ருர். போர் தொடங்கியது. வில் வீரர், வேல் வீரர், வாள் வீரர் இவர்கள் அவ்வத்தகையாரோடு பொருதனர். தலைகள் உருண்டன; கைகள் துடித்தன; தோள்கள் வீழ்ந்தன; கால்கள் இற்றன; குருதி ஆறுகள் பரந்தன; குறையுடல்கள் ஓடியலைந்தன; குடல்கள் சொரிந்தன; வீரர்களுடலின் அற்ற துண்டங்கள் சிந்தின; கழுகுகள் நெருங்கின, இவ்வாறு இருதிறத்தினரும் கடும்போர் புரிய, இறந்தோர் ஒழிய எஞ்சி நின்ருேரைப் பின்னே நிறுத்தி ஏனாதிநாதர் முன்வந்தார். அவர் வாள் வீசி பகைவீரரின் தாள், தோள், சிரம் இவைகளைத் துணித்தார். அதுகண்டு மற்றையோர் ஓடிமறைந்தனர். அதிசூரன் நாயனுருடன் போர் புரியத் தலைப்பட்டான். அவருடைய வாள் வீச்சுக்கு அஞ்சி புறமுதுகிட்டு ஓடிப்போனன்.

இரவெல்லாம் உறக்கமில்லாமல் தன் தோல்வியை நினைந்து வருந்தினன். ஈன மிகு வஞ்சனையால் வெல்ல எண்ணினன். "நம் பொருட்டு நம்மவர்களைக் கொலை செய்யாமல் நாம் இருவரும் தனித்து இருந்து போர் செய்வதே பொருத்தம்" என்று நாயனருக்கு மறுநாட்காலை சொல்லியனுப்பினன். "அவ்வாறு செய்வதே அழகு" என்று சொல்லி. நாயனர் போர்க்கோலம் பூண்டு, யாருக்கும் தெரியாமல் தனியிடத்தே சென்று அதிசூரன்

வரவை எதிர்நோக்கியிருந்தார். தீயோ ஞகிய அதிசூரன் திருநீறு பூசி யோர்க்கு எவ்விடத்தும் தீங்கிழைக்கமாட்டார் நாயனுர் என்று அறிந்தவனுனபடியால் தன் நெற்றி நிறையத் திருநீறணிந்து அவரிடம் செல்லும் வரையில் அதைக் கைப் பலகைகொண்டு மறைத்துச் சென்ருன்; அவர் முன் நின்ருன். ஏனுதிநாதரும் முன் வந்தார். அதிசூரன் நெற்றியை மறைத்திருந்த பலகையை விலக்கினன். திருநீற்றைக் கண்டார். "அந்தோ! கெட்டேன்! முன்பு இவர்மேல் காணுத திருநீற்றுப் பொலிவைக் கண்டேன்; இவர் சிவபெருமான் சீரடியார் ஆய்விட்டார்; இவர் குறிவழி நிற்பேன்" என்று கூறி வாள், பலகை இவைகளைத் தம் கைகளினின்றும் நழுவ விட எண்ணினுர். ஆனுல் "ஆயுதமில்லாதவரைக் கொன்ருர்" என்ற பழி அதிசூரனைச் சாருமேயென்று கொண்டு அவைகளைக் கையேந்தி எதிர்த்துப்போர் செய்வார்போலக் காட்டினுர். "முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்." சிவபெருமான் உமாதேவியுடன் காட்சி தந்து நாயனுர் என்றும் தம்மைப் பிரியாத நிலையை அருளிச் செய்தார்.

சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் ஏனுதிநாத நாயனுர் வரலாற்றை 42 செய்யுட்களில் கூறியுள்ளார். திருநீற்றின் பெருமையையும், அதைப் பூசுவோர்க்குக் காட்டும் அன்பினையும் விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரலாறு போன்றதே மெய்ப்பொருள் நாயனுர், கழறிற்றறிவார் நாயனுர் இவர்களுடைய வரலாறுகளும் ஆகும், "அமங்கலமாம் சொற்கள் புணராது" என்று சேக்கிழார் பிள்ளைத் தமிழில் பாராட்டப் பெற்றபடி "முன்னின்ற பாதகனும் தன் கருத்தேமுற்றுவித்தான்" என்றனர் குன்றை முனிவர். மெய்ப்பொருள் நாயனுர் புராணத்தும் முத்தநாதன் "நினைந்த அப்பரிசே செய்"தான் என்று கூறினுர்.

ஏனுதிநாதர் வதிந்த எயினனூர் அரிசொல் ஆற்றின் தென் கரையில் இருக்கிறது. ஏனநல்லூர், ஏனனூர் என வழங்குகிறது. கும்பகோணம் இருப்புப்பாதை நிலயத்திலிருந்து தென்கிழக்கே சுமார் 5 கல் தொலைவிலுள்ளது. இவ்வூர்ச் சிவன் கோயிலில் நாயனுர், அவர் மனைவியார் இவர்களின் திருவுருவங்கள் உள்ளன. அதிசூரனுடன் போர் புரிந்த இடமும் இருக்கிறது. நாயனுர் பேரால் திருமடம் ஒன்றும் ஊரில் உண்டு. எட்டி, காவிதி என்பன போன்று அக்காலத்து அரசர் வழங்கும் பட்டப் பெயர்களில் ஏனுதி என்பதும் ஒன்று.

ஈழக்குலச் சான்ருர் எயினனூர்வாழ்
ஏனுதிநாதனுர் இறைவ னீற்றைத்
தாழத்தொழு மரபார் படைகளாற்றும்
தன்மைபெருவரி சூரன் சமரிற்ருேற்ற
வாழத்திருநீறு சாத்தக்கண்டு மருண்டார்
தெருண்டார் கைவாள்விடார் நேர்
வீழக்களிப்பார் போல்நின்றே யாக்கை
விடுவித்துச் சிவனருளே மேவினுரே.

—உமாபதிசிவாசாரியார்.

செய்திகள்

மதுரை, வடக்கு ஆடிவீதி, கூட்டுவழிபாட்டு மண்டபத்தில் திருவிளையாடற் புராணப்பிரசங்க தொடக்க உரையை 13-4-60ல் மதுரை அறநிலயத்துறை துணை ஆணையர் திரு. ஏ. சக்கரை சேர்வை, பி.ஏ., பி.எல்., அவர்கள் நிகழ்த்தினுர்கள். மதுரை தியாகராசர் நன்முறை உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழாசிரியர் திரு. தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள் 13-4-60 முதல் 20-4-60 வரை திருவிளையாடற் புராணம் மதுரைக் காண்டம் பற்றியும், சிவகாசி நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழாசிரியர் திரு. க. கொன்றையாண்டி அவர்கள் 21-4-60 முதல் 28-4-60 வரை கூடற்காண்டம் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினுர்கள். செங்கற்பட்டு செயின்ட் ஜோஸப் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. பூசை. ஆ. நமச்சிவாய முதலியார் அவர்கள் 29-4-60 முதல் 6-5-60 வரை திருவாலவாய்க் காண்டம் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்கள். 6-5-60ல் இராமநாதபுரம் மாவட்ட ஸ்பெஷல் டிப்டி கலெக்டர் திரு எஸ். இராமச்சந்திர பத்தர், பி.ஏ., அவர்கள் பாராட்டுரை வழங்குவார்கள்.

நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A.,B.L.

வசிட்டர் கூறுவார் :—

"சம்புத்தீவில் சம்புநதி தீரத்தில் சங்கன் என்ற ஒரு இருடி அரிய தவம் புரிந்து கொண்டிருந்தான். அவன் நாராயணனேடு பிற தேவதைகளையும் சமமாகக் கருதி அத் தவம் செய்தான். அத்தவத்தின் கோரத்தை யஞ்சி தேவதைகள் இந்திரனேடு கலந்து ஆலோசனை செய்தார்கள். எந்த தெய்வத்திடம் எப்பலன் கருதி அத்தவம் செய்தான் என்று புரியாமல் அவர்களும் இந்திரனும் தயங்கும் நேரத்தில் நாரத பகவான் உரைப்பார்,

தேவர்களே! உங்கள் ஐயம் எனக்கு விளங்கிற்று. எனினும் இச்சங்கன் யார் என்பது தெரிய வேண்டாமா? கேளுங்கள், இவன் முற்பிறவியிலே மதாந்தன் என்னும் பெயருடைய ஒரு வேடன். விந்திய மலைச்சாரலிலே உயிர்க்கொலையே பொழுதுபோக்காக வாழ்ந்து வந்த கொடியவன். இவன் ஒருநாள் மகாபாதகங்கள் பல புரிந்து பின் உடல் சோர்வுற்று ஒரு ஆலவிருக்ஷத்தடியிலே கிடந்து துயின்ருன். அப்படித் துயின்ற விடத்தின் மேன்மையை அவன் அறிந்தவனன்று. அம்மரத்தடிதான் முன் கேட்டீர்களே தாந்தன் என்ற பக்தன், அவன் பாத தூளி விசேஷமாகப் படிந்து கிடந்த இடம். அப்புண்ணியசாலி பாத தூளி மேலே கிடந்த ஒரே காரணத்தால் மதாந்தன் மறுபிறப்பில் அந்தணப் பிறவி பெற்ருன். எனினும் முன்னைய பாவப்பலனல் அவன் நாராயணன் பர தெய்வம் என்ற உண்மை யறியாமல் வறிதே தவம்புரிகிருன். இவ்வெண்ணம் பாவங்களிலெல்லாம் தலையாயது என்று அந்தணனுகியும் அவன் உணரவில்லை, பாவம் அவனை உணர்த்தித் திருத்துவாரும் இல்லை. நான் போய்ப் பார்க்கிறேன்.

இவ்வாறு கூறி நாரதர் சம்பு நதி தீரத்தில் உள்ள சங்கனுடைய குடிலுக்கு வந்தார். சங்கனும் அவரை வணங்கி, ஏற்று உபசரித்து நின்ருன். நாரதர் அவனை நோக்கி "சங்கா நீ தவம் பண்ணுகிருயே. எத்தெய்வத்தை நோக்கி? எப்பலன் குறித்து? எனக் கேட்டார். சங்கனும், "சுவாமி! எல்லா தெய்வங்களையும் நோக்கித்தான்" என்ருன். நாரதர் "அப்படிச் சொன்னல்? தெய்வங்கள் யாவையும் ஒன்றுபோல்வனவா?" என்று கேட்க, சங்கன் 'ஆம். நான் அப்படித்தான் கருதுகிறேன். விஷ்ணுமுதல் எல்லாத் தெய்வங்களும் சமமே. என் குறிக்கோள் ஒரு திசைக்காவலனக வேண்டும் என்பது' என்று கூறினன். இதைக் கேட்ட நாரதருக்குக் கோபம் பிறந்தது. அத்துடன் 'சங்கா நீ உவர்க்கடலிலே வலம்புரிச் சங்காகப் பிறக்கக் கடவாய்' என்ற சாபமும் பிறந்தது. கேட்ட சங்கன் நடுநடுங்கி அவர் கால்களில் வீழ்ந்து 'சுவாமீ நான் என்ன குற்றம் செய்தேன் என்னைச் சபித்து விட்டீர்களே' என்று பணிவுடன் கேட்க நாரதர் "சங்கா! நான் சூசகமாகக் குறித்துக் கேட்டும் நீ தழைத்த தண்துளவினேன் தேவர் தலைவன் என்று உணராமல் அவனைப் பிற தெய்வங்களோடு சமமாக்கிப் பேசினய், இது உன் தவவலிவால் வந்த அலட்சியம். ஆனல் நீ இப்போது மனம் வருந்திக் கேட்பதால் இது நீங்க வழி கூறுகிறேன். முற்பிறவியிலே நீ வேடனய் அனேக பாவங்களைப் பண்ணினய். இப்போது நாராயணனைப் பிறதெய்வத்தோடு சமமாக்கிப் பாவம் தேடினய். இப்பிறவியில் நீ செய்த தவப்பயனய் நீ பூர்வ ஜன்ம ஞானத்துடன் ஒரு சங்கு ஜன்மமெடுப்பாய். அதில் இப்பாவங்கள் நீங்கி பகவானுடைய மகிமையை யுணர்வாய். அப்பிறவியில் தாமிர பர்ணியின் தென்கரையில் காணுதற்கரியனய் நித்திய வாசம் செய்யும் பகவானைத் தரி

சித்து அவனருளாலே அவனை ஆயிரம் வருடம் பகலெல்லாம் வணங்கி வழிபட்டாயானல் அவனே நேரில் தோன்றி உனக்கு மோக்ஷமளிப்பார். அக்காலத்தில் உன் வேண்டுகோளுக்கிரங்கி அர்ச்சாமூர்த்தியாய்க் கண்ணுக்கிலக்காவார். முன்பே முதல் இருந்தவராதலின் அம்மூர்த்திக்கு ஆதிநாதர் என்றே திருநாமம் ஏற்படும். நீ தினமும் பொருனைநதி வழியாக கடலிலிருந்து மேலேறி வந்து பகலெல்லாம் பகவானை வணங்கி அந்தியில் அந்நதிவழியாகவே கடலிற்போய்ச் சேர்ந்துவிடு. நீ ஏறிய துறையாதலில் அந்தக் குருகாபுரித்துறைக்குச் சங்கணிதுறை என்று திருப்பெயருண்டாகும். அத்துறை பாவம் நீக்கும் புண்ணியத் துறையாய்ப் பெயர் பெறும் என்று கூறி மறைந்துவிட்டார்.

சங்கனும் இதுகேட்டு வியப்பெய்தினன் தன் தவறை உணர்ந்தான். தன் யோக பலத்தாலே சரீரத்தை விட்டான். கடலிலே வலம்புரிச் சங்காகப் பிறந்தான். நாரதமுனி கிருபையாலே உனக்கு பூர்வஜன்ம ஞானமுண்டாகி தன் தவறுக்கு வருந்தி முனி உரைத்தபடி குருகைக்கு வந்து பகவானை வழிபட உன்னி நதிவழியே பல்லாயிரம் சங்குகள் புடைசூழ வந்து கரையேறினன். ஏறியவன் வடகரையிலே ஒரு தோப்பைக் கண்டு அதுதான் தலமோ என்று ஐயுற்றான். பின் முனி தென்கரை என்று கூறியது நினைவிற்கு வர மீண்டும் ஒரு கூப்பிடு தூரம் மேற்கே போய்க் கரையேறி அதுதான் தலமா என்றறிய நாரதரை நினைத்தான். முனி அவன்முன் தோன்றி "சங்கா நீ முன் வடகரையில் கண்ட தோப்பு தாந்தன் பகவத்தியானத்திலிருந்து சித்தி பெற்றவிடம். அங்குதான் பகவான் அவனுக்கு நேரேகாட்சியளித்தார். ஆனல் இறைவன் உறைவிடமென்று நாம் சொன்னது தென்கரை. இவ்விடத்திலே தென்புறமுள்ள இடம் வராக க்ஷேத்ரம் என்று பெயருடையது. அதற்கு வடக்கே வகுளவிருக்ஷ சமீபமாய் புளிய மரங்களுக்குத் தலைமை தாங்கி ஒரு புளி நிற்கிறதே அது ஆதிசேஷன் அம்சமானது. அதனடியிலே பின்னல் பகவானே சடகோபன் என்ற ஒரு பக்தன் வடிவில் திருவவதாரம் செய்யப் போகிறர். எனவே நீ இம் மூன்று தலங்களையும் தினமும் வலம் வந்து வணங்கு' எனக் கூறி மறைந்தார்.

அதுமுதல் சங்கராஜன் பரிவார சங்கங்களோடு தினமும் நதி வழியே வந்து இறைவனை வழிபட்டு வந்தான். அதன் பலனாக உயிர்நிலை, இறைநிலை, தக்கநெறி, ஊழ்வினை, வாழ்வு இவற்றின் தன்மை யறிந்து தன்னோடொத்தமற்ற சங்கங்களுக்கும் அதைபோதித்தான். பரிசுத்த ஜன்மமான அச்சங்கங்களும் அதை யுணர்ந்து இறைவனைச் சரணடைந்து அவனை வணங்கி வருகின்றன. இன்னும் இரண்டு மாதங்கள் கழிந்தால் இவற்றின் விரதம் முடிவடையும். அவை மோக்ஷமடையும் வைபவத்தை நீங்களும் ஸேவித்து மகிழுங்கள் என்று கூறி வசிஷ்டர் மறைந்தார்.

இந்த அற்புத வரலாற்றைக் கேட்ட முனிவர்கள் வேட்கையும் வியப்பும் கொண்டவர்களாய் அன்றைப் பகல் கழிய இரவில் நித்திரை போனர்கள். இரவில் கனவில் ஆதிவராகப் பெருமான் பூமிதேவியை மடியே வைத்தவராய் அவர்களுக்கு ஸேவை சாதித்து "இப்படியேதான் இங்கே ஆதிகாலந் தொடங்கி வசிக்கிறோம். இவ்வுருவிலேதான் முன் பூமிக்கு ஞானஉபதேசம் செய்தோம். இத்தலத்தில் வாழும் எவருக்கும் பூமிதேவியின் அருளால் ஞானோதயம் உண்டாகும் என்று அருளி மறைந்தார். முனிவர்கள் பகவத் க்ருபையை வியந்து அங்கே தங்கி அவனை ஆராதித்துவந்தனர். சிலநாள் செல்ல ஒரு பகல் சங்கராஜன் ஆராதனம் முடிந்ததும் பகவான் கருடாரூடனய் ஸ்ரீ பூமி நீளா சகிதம் தோன்றி சேவை சாதிக்க சங்கனும், சங்கங்களும் முனிவர்களும் ஆனந்தக் கூத்திட்டு அவனை வணங்கினர். சங்கராஜன் தன் உளத்திலே பகவான் லோக க்ஷேமத்திற்காக அப்படியே அர்ச்சையில் அங்கே நித்திய வாசம் செய்ய வேணுமென்று வேண்டிக் கொண்டான். இறைவனும் சங்கராஜனை நோக்கி, "சங்கா, உன் வழிபாட்டை உவந்தோம். உனக்கும் உன்னைப் பின்பற்றி நிற்கும் மற்றச் சங்கங்களுக்கும் மோக்ஷம் தந்தோம். உன் மனேபீஷ்டப்படி இங்கே அர்ச்சாவதாரமாய் என்றும் தங்குகிறோம். நீ ஏறிய துறை இனி சங்கணிதுறை என்று பெயர் பெறுவதாக" என்று அருள சங்கரராஜனும், மற்ற சங்கங்களும் தங்கள் சரீரங்களை விட்டுச் சோதி ரூபமாய் இறைவனை யடைந்தன.

இத்தலத்தில் பிறப்பார் விஷ்ணுபக்தி மிக்குள்ளவரா யிருப்பார்கள். இத்துறை மிகவும் தூயது, எத்தகைய பாவத்தையும் பரிகரிக்கவல்லது, என வேத வியாசபகவான் சுகப் பிரம்ம ரிஷிக்கு அருளிச் செய்தார்

''விச்வசனே! இன்னும் கேள்'' என்று சனகர் கூறலானார். ''முன்னொருகால் இந்திரன் தன் பத்தினியுடன் மதுபான மயக்கம் மிகுந்தவனு யிருக்க காசியபரும் அதிதிதேவியும் அங்கே வந்தனர். இந்திரன் மதுமயக்கில் அவர்களை உபசரியாமல் இருக்க காசியபர் நீ வாலிபத்தையும் செல்வத்தையும் இழப்பாய் எனச் சினந்து கூறிச் சென்றனர். உடனே இந்திரன் கிழவனுனன். மனம் நடுங்கியவனுய் அவன் காசியபரை வணங்கித் தன் பிழையைப் பொறுத்து சாப விமோசனம் அருளுமாறு வேண்டினுன். அதிதிதேவியும் இந்திரனுக்குப் பரிந்து கூறினுள். காசியபர் மனம் இரங்கி. ''நீ தாம்ரபர்ணி தீரத்தில் குருகாபுரியில் ஆதிநாதரை ஸேவித்து வந்தால் சில காலத்தில் உன் கிழத்தனம் போகும். உன் செல்வமும் மீளும்'' என்று அருளினர். இந்திரன் அவ்வண்ணமே இந்த க்ஷேத்ரத்துக்கு வந்து ஆதிவராக நயினரிடம் தன் குறையை விண்ணப்பித்து அவர் அநுமதி பெற்று திருச்சங்கணிதுறையில் நீராடி மாலடியை மலரிட்டு அருச்சித்துவர ஒரு சித்திரை வளர்மதிப் பன்னிரண்டாம் நாளில் ஆதிநாதன் அவன் முன் தோன்றி அவனைத் தன் கையால் தடவ இந்திரனது கிழத்தனம் நீங்கிவிட்டது. அவன் செல்வமும் முன்போல் அவனை அடைந்தது. இந்திரன் பகவானைப் பலவிதமாகத் துதித்து மனக்களிப்புடன் தன்னுலகம் சென்ருன்.

இன்னொரு அதிசய வரலாறு உண்டு. இராவணவதத்தின் பின் இராமபிரான் சில காலம் ஆட்சிபுரிந்து, பின் ஸீதையை வனத்திற்கு அனுப்பிய சிலகாலத்துக்கு அப்பால், தன் ஏகாந்தத்திலிருக்கையில் வெளியிலே இராம னுத்தரவால் வாயிலைக் காத்தான் இலக்ஷ்மணன். அப்போது துர்வாஸர் உள்ளே வர இலக்ஷ்மணன்பாடு மிக கஷ்டமாய் கடைசியில் அவன் இராமகோபத்துக்காளாக நேர்ந்தது. கோபம் கொண்ட இராமன் இலக்ஷ்மணனை நீ ஸ்தாவரமாகுக என்ன இலக்ஷ்மணன் வணங்கிப் பிரார்த்தித்தார். பெருமாள் இலக்ஷ்மணனை நோக்கி, 'வருந்தாதே. தாம்ரநதிதீரத்தில் வராக க்ஷேத்ரத்தில் புளியமரமாக நீ ஆவாய் நாமும் சடகோபன் என்றும் பெயர் தாங்கி உன் நிழலிலே ஒதுங்கி உலகுய்யத் தமிழ் மறையை அருளுவோம். இதோ இம்மோதிரத்தை அணிந்துகொள். இது எங்கே உன் விரலிலிருந்து நழுவி விழுகிறதோ அங்கே நீ திருப்புளியாவாய் என்று கூற இலக்ஷ்மணனும் தமையனுக்கு மீண்டும் கைங்கர்யம் செய்யப் போகிறேம் என்ற மனநிறைவோடு சென்ருன். அவன் சஞ்சரிக்கும் நாளில் ஒரு நாள் மோதிரம் காணுமல் போக அங்கே புளியமரமாயினுன். அப்புளி இன்றும் உளது. என்றும் இருக்கும். இதனடியில்தான் பின்னுல் சடகோபர் அமர்ந்து தமிழ் மறை அருளினர். இதன் பெருமை நான் சொல்லும் நீர்த்தன்று. முன் சொன்ன சங்கணிதுறைத் தீர்த்தம் மிகவும் பாவனமானது. புலி முதலியவற்ருல் கலக்குண்ட செந்நாய் ஒன்று மிக வருந்தி இத்துறையில் நீரருந்திற்று. உடனே ஒரு தேவனுய் சுவர்க்க மடைந்தது.

[பெருமான் திருநாமங்கள் ஆதி நாதப் பெருமாள், பொலிந்து நின்றபிரான்; தாயார் ஆதிநாதவல்லி; கோவிந்த விமானம் - தாம்ரபர்ணி நதி; பிரமதீர்த்தம் திருச்சங்கணி துறை, நின்ற திருக்கோலம்; பிரமனுக்கும் நம்மாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம்.]

(தொடரும்)

திருவெண்காடு : சுவேதாரண்யேசுவரசுவாமி கோயிலில் 9-4-60ல் சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களால் சிவஞானபோதத் திருப்பாடற் கல்வெட்டுத் திறப்பு விழாவும், சிவஞானபோத வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

✳ கிருஷ்ணுவதாரம் - 3 ✳

கண்ணன் கதை :

ஒரு முழு நோக்கு

[பி. ஸ்ரீ.]

அழியா அழகு இராமனுக்கு வடிவமாக அமைந்திருந்தது என்று கம்பன் பாடுகிருன். அழியா அழகு தன் பரிபூர்ண நிலையில் கண்ணனுக அவதரித்தது என்பது ஸ்ரீ கிருஷ்ணுவதார தத்துவசாரம் என்று கூறுவதுண்டு. கண்ணன் கதைகளைப்போல் இந்திய மக்களின் இதயத்தை ஒருமுகமாக வசீகரித்தவை வேறு எந்தக் கதைகளும் இல்லை என்று கூறலாம். இந்திய சனுதன தர்மத்தின் முழு அழகுடன் முழு நோக்கையும் இக் கதைகளில் காணலாம் என்பர்.

கண்ணனைக் குறித்த கதைகளும் கதைத் துணுக்குகளும் எண்ணிறந்தன. அவை இன்னும் வளர்ந்த வண்ணமாய் இருக்கின்றன. கண்ணனைப்பற்றிய நூல்களும் கணக்கற்றவை; கருவிகளும் அனந்தம். தமிழகத்திலோ ஆழ்வார்களின் பாடல்கள் பெரும்பாலும் கிருஷ்ணபக்தியை உட்பொருளாகக் கொண்டிருக்கின்றன. பாகவதம் விஷ்ணு புராணம், ஹரிவம்சம், மகாபாரதம் முதலான வடமொழி நூல்களில் காணப்படும் கண்ணன் கதைகளுடன் தமிழகத்திற்கே சிறப்பாக உரிய சில கண்ணன் கதைகளையும் சேர்த்துப் பார்க்கும்போதுதான் ஸ்ரீகிருஷ்ண சரித்திரத்தின் முழு நோக்கையும் நாம் கண்டு கொள்வது சாத்தியமாகும்.

ஆழ்வார்கள் கண்ட கிருஷ்ணுவதாரம்

பெரியாழ்வார் பாடல்களில் கண்ணன் பிறந்த அந்த ஆதி ஸ்ரீஜயந்தி வைபவத்தையும் காண்கிருேம். அந்த நாளிலே ஆய்ப்பாடி என்ன பாடுபடுகிறது! ஆயர்கள் ஓடுகிருர்கள், ஆடுகிருர்கள், விழுகிருர்கள், மறுபடியும் எழுந்து நந்தகோபரின் அரண்மனையை நோக்கி ஓடுகிருர்கள், முற்றங்களில் பாற் கலசங்களையும் தயிர்க்கலசங்களையும் நெய்க் கலசங்களையும் உரிகளோடு அறுத்து உருட்டுகிருர்கள். எங்கும் ஒரே குதூகலவெறி! 'ஒரு குட்டி மகராசா தங்களுக்காகப் பிறந்திருக்கிருர்!' என்று அவர்களும் ஆய்ச்சிகளும் குதூகலிக்கிருர்கள். அந்த வைபவங்களைப் பாடும்போதே பெரியாழ்வார் கண்ணனுடைய தெய்வ நிலையையும் நமக்கு நினைவூட்டுகிருர். குழந்தையின் அசாதாரண பலத்தைச் சமாளிக்க முடியவில்லையாம். யசோதைத் தாய்க்கு தூளித்தொட்டில் கிழிய உதைக்கும் கால்கள் துஷ்ட அசுரர்களுக்கும் மறக்கருணையால் அருள்புரியப் போகின்றன என்பதை அந்த அம்மாள் அப்போது அறிந்து கொள்ளவில்லை. 'ஒக்கலில் எடுத்துக்கொண்ட குழந்தை இடுப்பை முறித்து விடுகிறது!' என்று கொஞ்சிப் பேசும் தாய் அதே குழந்தை உலக ரட்சகனுகப் பிறந்திருப்பதை எப்படி அறிவாள்? 'ஆசையோடு தழுவிக் கொள்ளும்போதே வயிற்றிலே பாய்ந்து விடுகிருன்!' என்று குழந்தையின் பராக்கிரமம் பேசி, 'மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன், நங்காய்!' என்று தன் தோழியிடம் உரையாடும் யசோதை கண்ணனுடைய மிடுக்கும் துடுக்கும் விளையாட்டும் அவதாரமூர்த்தியின், திருவிளையாடல்களே என்பதை அறிந்திருக்க முடியுமா?

இப்படிக் கண்ணன் பிறப்பைப் பாடி வரும் பெரியாழ்வார் 'வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே!' என்று கண்ண

னுடைய தெய்வத்தன்மையை யசோதையும் அந்தக் குழந்தைப் பருவத்திலே கண்டு கொண்டதாகக் கூறுகிருர். 'ஒவ்வொரு தாய்க்கும் குழந்தை தெய்வம்தான், ஒரு கிருஷ்ணவதாரம்தான்!' என்ற மனப்பான்மையுடன், பக்தமணியின் தெய்வீக மனப்பான்மையையும் இந்த வாக்கிலே காண்கிருேம்.

கண்ணனைத் தம் திருமொழிகளில் தாலாட்டிச் சீராட்டி வளர்க்கிருர் பெரியாழ்வார். கண்ணனுக்கு மானசிக யசோதை இந்தத் தமிழ் நாட்டுப் பக்தமணி. இந்தப் பெரியாழ்வார் யசோதைக்குக் கண்ணன் பிள்ளை மட்டுமல்ல, தெய்வமும்தான். பெரியாழ்வாரின் கிருஷ்ண பக்தியில் தாயுள்ளம் அதிமுக்கிய அம்சமாகும். பெரியாழ்வார் சொல்லும் கதைகள் பாகவத புராணத்திற்கும் முற்பட்ட கண்ணன் கதைகள் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர்.

குலசேகர ஆழ்வார் முதலானவர்களும் கிருஷ்ணலீலைகளைப் பாடியிருக்கிருர்கள். கண்ணன் வெண்ணெய் திருடியுண்ட கதையில் இந்த ஆழ்வார்கள் பரம்பொருளின் பரம எளிமை நிலையைக் காண்கிருர்கள்; கண்டுகண்டு பரவசமாகிருர்கள். இவர்கள் பாகவதகிருஷ்ணனையும் பாரதகிருஷ்ணனையும் பாடுவதுடன், தங்கள் உள்ளத்தினுள்ளே அருள்கூர்ந்த தரிசனம் அளித்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவையும் சிறப்பாகப் பாடியிருக்கிருர்கள். இந்தப் பாடல்களில் கண்ணன் கதைகளைப்பற்றிய ஒருமையுணர்வும் முழுநோக்கும் நமக்குக் கிடைத்து விடுகின்றன எனலாம்.

கிருஷ்ணபக்தியின் சிறப்பியல்பு

இந்து தருமத்தின் சாரமாகவும், சர்வ சமய சமரச நூலாகவும், உள்ள பகவத்கீதையின் ஆசிரியன் என்று கருதப்படும் நிலையில் கண்ணனை நாம் பெரும்பாலும் ஆழ்வார்களின் பாசுரங்களில் காண்பதற்கில்லை. ஆனல் ஆயர்பாடிக் கண்ணனை எல்லா மக்களுக்கும் எல்லாக் குடும்பங்களுக்கும் உரிய கண்ணனுக இப்பாசுரங்களில் காண்கிருேம். தெய்வப்பண்பை மானுடப் பண்பு பெரும்பாலும் மறைப்பதையும் இங்கே காண்கிருேம்; சில சமயங்களில் தெய்வப் பண்பு மானுடப் பண்பைப் பீறிக்கொண்டு வெளிப்படுவதையும் காண்கிருேம். குழந்தையாகவும் தீராத விளையாட்டுப் பிள்ளையாகவும் மக்கள் உள்ளங்களை வசீகரிக்கும் கண்ணன் காதலனுகவும் ஆண்களோடு பெண்களையும் வசீகரிக்கக் காண்கிருேம். இந்த வசீகர நிலையின் சிகரத்தை ஆண்டாள் பாசுரங்களில் காணலாம். எந்தக் காதல் மோட்ச விரோதி என்று வேதாந்திகளால் கருதப்படுகிறதோ, அதே காதல் தன் மகத்தான சக்தியைப் பக்திக் காதலாகித் தூய்மை செய்துகொண்டு வானேறவழி தரும் அதிசயத்தைக் காண்கிருேம், ஆண்டாளை உள்ளிட்ட ஆழ்வார்களின் கிருஷ்ண பக்தியிலே.

கிருஷ்ணபக்தியில் காதல் இன்பம் காண்பதுபோல் பொதுவாக வாழ்க்கை இன்பம் அனைத்தும் கண்டு கொள்ளலாம் என்று கருதுவோர் உண்டு. சங்கீதமும் சிரிப்பும் சமய விரோதிகள் அல்ல, ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வாழ்க்கை நடத்தி மோட்ச சாம்ராஜ்யத்திலும் பங்கு கொள்ளலாம் என்ற கொள்கையை வற்புறுத்துவது கிருஷ்ணபக்தியின் சிறப்பியல்பு எனலாம்.

'ஸ்ரீகிருஷ்ணனை நினைத்துப் பார்க்கும் போது காட்டில் இலைகள் சலசலப்பதையும், மேய்ச்சல் தரையில் மாடுகள் 'அம்மா' என்று கத்துவதையும், காட்டாறு சலசலத்து ஓடுவதையும், கேட்பதுபோலத் தோன்றுகிறது' என்று 'அவதாரங்கள்' என்ற தமது நூலில் டாக்டர் பெஸண்ட் அம்மையார் குறிப்பிடுகிருர். பெற்ருேரைச் சுற்றிக் கூத்தடிக்கும் குழந்தைகளின் சிரிப்பொலியும் கேட்பது போலத் தோன்றுகிறதாம் பெஸண்ட் அம்மையாருக்கு. இத்தகைய உணர்ச்சிகளை ஆழ்வார்கள் பாடும் கண்ணன் பாடல்களில் நாம் அனுபவிக்கிருேம்.

தெய்வப் பண்பும் மானுடப் பண்பும் கூடிக் குலாவுகின்றன கிருஷ்ண பக்தியில். வேதம் ஓதிப்பெறுகின்றபேறு மாடு மேய்க்கும் தொழிலிலும் கிடைத்து விடுகிறது. தொட்டிலாட்டிக் குழந்தையைத் தூங்கப் பண்ணிவிட்டு அந்தக் குழந்தையைக்குனிந்து பார்க்கும் அமைதியான தாயன்பையும் அனுதாபத்தையும், கிருஷ்ணபக்தியில் பார்ப்பது போல் காதலின் சூருவளியையும் இங்கே காண்கிருேம். முனிவர்கள் தவத்தால் காணும் கண்ணனை அன்பர்கள் சிறுபிள்ளை விளை

யாட்டிலும், காதலர்களின் காதல்—பேச்சிலும், மணப்பெண் மாப்பிள்ளை நிலைகளிலும் கண்டு களிக்கிறார்கள். இத்தகைய கிருஷ்ண பக்தியின் சிறப்பியல்புகளை ஆழ்வார் பாசுரங்கள் இனிது புலப்படுத்துகின்றன.

இச்சிறப்பியல்புகளை உணர்ந்து கொள்வதற்குக் கண்ணனை இராமனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் நலமாகும். இருவரும் திருமாலின் அவதாரங்கள், பெரிய அவதாரங்கள். எனினும் இராமன் தொலைதூரத்தில் இலட்சிய புருஷனாக நின்றுகொண்டே நம்மை ஆட்கொள்வதுபோலத் தோன்றுகிறது. கண்ணனையோ தெய்வம் என்றோ, இலட்சிய புருஷன் என்றோ அஞ்சத் தேவையில்லை.

தாயிலானைத்
தழுவும்என் ஆவியே

என்று அப்பர் சுவாமிகள் கூறும் அந்தக் காதல் உணர்ச்சி இராமபக்தியைக்காட்டிலும் கிருஷ்ணபக்திக்கு மிகவும் எளிதாகி விடுகிறது. எத்தனை தலைமுறைகளாக இந்துக்களின் இதயங்களைக் கட்டித் தழுவிக் கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது கிருஷ்ண பக்தி?

குழந்தை இராமனைக் குறித்து நமக்கு என்ன பிரமாதமாகத் தெரிந்திருக்கிறது! அம்புலி வேண்டி அழுதான் இராமன் என்பது குறித்து வழங்கும் கதைத் துணுக்கைப் போல் வேறொன்றைக் கேட்க முடியவில்லை. கோசலை தவழ்ந்துவரும் இராமனை நோக்கிக் கொஞ்சியதாகத் திருப்புகழில் அருணகிரியார் ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார். ஆனால் வால்மீகி இராமாயணத்திலோ, கம்பராமாயணத்திலோ இராமனுடைய குழந்தைப் பருவம் குறித்து இரசிகர் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்றும் காணப்படவில்லை. சாது இராமனாகவோ மரியாதை இராமனாகவோதான் குழந்தை இராமனும் வாழ்ந்து வந்திருக்க வேண்டும் என்று தான் ஊகிக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் கண்ணனுடைய குழந்தைப் பருவத்தைத்தான் எத்தனை கதைகள், எத்தனை கவிதைகள் வருணிக்கின்றன! துஷ்டக் குழந்தைகள் அசாதாரணமாகத் தொந்தரவு கொடுக்கும்போது, பண்பட்ட தாயுள்ளத்திற்கு யசோதை அன்று பட்டபாடு நினைவிற்கு வருகிறது. குழந்தை - இராமனைப்பற்றியோ கோசலையைப்பற்றியோ நினைவு வருவதில்லை துஷ்டப் பிள்ளைகளின் தாய்மாருக்கு.

பிருந்தாவனத்தில் நடந்த கிருஷ்ணலீலைகளுக்கோ, இராமசரிதத்திலோ வேறு எந்த அவதாரமூர்த்திகளின் சரித்திரத்திலோ ஒப்பு ஒன்றும் காண முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக கண்ணன் குழலூதி நிற்கும்போது அந்த இசையைக் காதலித்து, அந்தச் சிறுவனைக் காதலித்து எல்லாவற்றையும் துறந்து ஓடிவரும் பெண்களைப் பாருங்கள்! பரமாத்மாவுக்காக பற்றுகளை முற்றத் துறந்த முனிபுங்கவர்களின் நிலைதான் அந்தப் பெண்களின் நிலையும் என்பது இந்தக் கிருஷ்ண சரிதப் பகுதியின் புதை பொருள். பகவத்கீதையின் உபதேசமும் வித்தில் விருட்சம் போல் இந்த வேய்ங்குழல் ஊதும் சிறப்பில் அடங்கி விடுகிறது.

'எல்லாவற்றையும் விட்டு என்னையே சரணமாக அடை; விசனிக்க வேண்டாம்; நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்' என்று கீதாசிரியன் கீதையின் சரம சுலோகத்தில் கூறுகிறான் அல்லவா?' 'எல்லாப் பாரங்களையும் என் மேல் போட்டுவிட்டு, நீ கவலையற்று இரு' என்றும் தன்னுடைய நண்பனும் சீடனும் ஆன அர்ச்சுனன் வாயிலாக உலக மக்களுக்குக் கண்ணன் உபதேசிப்பதையும் கீதையின் இறுதிப் பகுதியில் காண்கிறோம். இவ்வளவு உபதேசத்தையும் கண்ணன் குழல் சொல்லால் சொல்லாமல் இசைவாயிலாகவே உணர்த்தி விடுகிறது. இந்த அதிசயத்திற்கு ஒப்பான ஒரு நிகழ்ச்சி இராமாவதாரத்திலோ, வேறு அவதார புருஷர்களின் கதைகளிலோ காண முடியாது என்பது கிருஷ்ண பக்தர்களின் கருத்து.

கண்ணனைப்பற்றிக் காடாக வளர்ந்திருக்கும் கதைகளும் அதிசயமானவை, கவிதைகளும் அற்புதமானவை. இந்தக் கவிதைகளை இயற்றியவர்கள் சாதாரணக் கவிகள் அல்லர்; இவர்களைப் பக்த கவிகள் என்று குறிப்பிட்டாலும் போதாது: இவர்களைக் கலாயோகிகள் என்றும், கவியோகிகள் என்றும் குறிப்பிடுவது பொருந்தும். இத்தகைய கவியோகிகளில் பெரியாழ்

வாரைப் போன்ற ஆழ்வார்கள் தலை சிறந்தவர்கள் ஆவர்.

இக்கதைகளும் கவிதைகளும் சென்ற காலத்தைச் சேர்ந்தவைதாமே என்று இலேசாகக் கூறி அவற்றை ஒதுக்கிவிட முயல்வதும் இயலாத காரியம்தான். பாரதியாரின் கண்ணன் பாடல்களிலும் ஆழ்வார்களின் பிரேம பக்தி அப்படியே இறங்கி வந்திருப்பதுபோலத் தோன்றுகிறதல்லவா? ஆனல் எது பழம் பாட்டு; எது புதுப்பாட்டு. பாரதியாரின் கண்ணன் பாடல்களில் ஆழ்வார்களின் அந்தப் பழைய மணம் கமழ்கிறது என்ருல், இந்தப் புதுமை மணத்தையும் இதைக் காட்டிலும் புதுமை மணம் என்று சொல்லத்தக்க 'என்றும் புதுமை' மணத்தையும் ஆழ்வார் பாடல்களில் காணத்தானே செய்கிருேம்.

முழுச்சித்திரம்

பல இந்திய மொழிகளிலும் கண்ணனைக் குறித்துச் சுமார் பத்தாயிரம் நூல்களுக்குமேல் உண்டு என்று திரேந்திரநாத் பால் கூறியுள்ளார். இத்தனை நூல்களிலிருந்தும், பாகவதம், விஷ்ணு புராணம், ஹரி வம்சம், பாரதம் ஆழ்வார்களின் தமிழ்ப் பாடல்கள் ஆகியவற்றிலிருந்தும், கண்ணனுனுடைய முழுச்சித்திரம் ஒன்றை அகக்கண்ணுக்கு இலக்காக்கிக் கொள்வது இரசிகர்களுக்கு இயலாத காரியமன்று. இந்தச் சித்திரத்திலே சரித்திர மூலங்களும் உண்டு. சரித்திரம் கடந்த கவிதை அம்சங்களும் பாவனு சக்தியின் அம்சங்களும் உண்டு. கண்ணன் பிறந்த இடம் இன்றும் ஒரு கோயிலாகக் காட்சி அளிக்கிறது. இக்கோயிலுக்கு அருகில் ஒரு கிணறு இருக்கிறது. தெய்வக் குழந்தையின் உடைகளை தாய் இந்தக் கிணற்று நீரில் தான் தோய்த்தாள் என்பது இந்தப் பிரதேசத்தின் மக்களுடைய நம்பிக்கை. இந்தக் கிணற்றை 'பாதாளகுண்டம்' என்ற பெயரால் குறிப்பிடுகிருர்கள். இந்தப் புனித நீரில் யாத்திரிகர்கள் குளிப்பதும் உண்டு. ஆனல் இத்தகைய வரலாற்றுப் பேச்சைக் காட்டிலும் கண்ணனைக் குறித்து வழங்கும் பக்திப் பேச்சுக்களும் கவிதைப் பேச்சுகளுமே ஸ்ரீ கிருஷ்ண சித்திரத்தை ஒரு முழுச் சித்திரமாகக் காட்டக்கூடும்.

கிருஷ்ண சரித்திரத்திலே சரித்திர மூலங்களைக் காட்டிலும் கற்பனை விசித்திரங்களும் கவிதைச் சித்திரங்களும் அதிக அளவில் இடம் பெற்றிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ஆனல் இந்த கிருஷ்ண சரித்திரம் இந்தியாவின் இதயத்திலும் மனேபாவத்திலும் ஆழ்ந்து பதிந்து அழியாத அழகுச் சித்திரமாகப் பதிவு செய்யப் பெற்றிருக்கிறது என்று கலையுலக ஆராய்ச்சி மேதையாகிய டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி கூறியுள்ளார். கிருஷ்ணசரித்திரம் இந்திய சரித்திரத்தின் அழியாத பகுதியில் இடம் பெற்றிருக்கிறது என்பதிலும் ஐயப்பாடு இல்லை.

சரித்திர ஆராய்ச்சியைக் காட்டிலும் அவதார புருஷர்களின் சரித்திரங்களில் பக்தி மனப்பான்மைக்கும் கவிதை உள்ளத்திற்குமே ஒரு முழுப்பார்வை கிடைப்பது சாத்தியமாகும். இந்த முழுநோக்கிற்குப் பாகவதம் முதலான புராணங்களைக் காட்டிலும் கூட ஆழ்வார்களின் கிருஷ்ணபக்திப் பாடல்கள் அரும்பெருந்துணையாகும் என்று கருதலாம். ஜயதேவரின் கீதகோவிந்தம் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள காதலை இராதாகிருஷ்ணரின் காதல் நாடகமாகச் சித்திரித்துக் காட்டுகிறது. ஸ்ரீகிருஷ்ண கர்ணமிருதத்திலும் இராதாகிருஷ்ணரின் காதலைக் காண்கிருேம். இதே காதலை வித்யாபதி முதலான வங்காட்டுக் கவிகளும் பாடி யிருக்கிருர்கள். மீராபாயும் பாடியிருக்கிருள். பிருந்தாவனம் ஒரு காடல்ல கிராமமல்ல, மக்கள் மனம்தான் என்று பக்தர்கள் உட்பொருள் கொள்ளும் முறையில் கவிதைகளும் கீதங்களும் பாடப் பெற்றிருக்கின்றன.

இப்பாடல்களிலெல்லாம் மிகையுமில்லாமல் குறையுமில்லாமல் ஸ்ரீகிருஷ்ண சித்திரத்தை ஒரு முழு நோக்காகக் காண்பதற்கு வழி காட்டுவன நம் தமிழிலக்கியத்தின் இன்றியமையாத பகுதியான ஆழ்வார் பாசுரங்களே என்று துணிந்து கூறலாம்.

சோலிங்கபுரம் : இலட்சுமிநரசிம்மசுவாமி கோயிலில் பக்தோசித சுவாமி திருக்கல்யாண மகோற்சவ விழா 10-4-60, 11-4-60, தேதிகளில் நடைபெற்றது.

— செய்திகள் —

சைதாப்பேட்டை : சுந்தரவிநாயகர் கோயிலில் பிரம்மோற்சவ விழா ஏப்ரல் 1-ம் தேதி முதல் 10-ம் தேதி முடிய நடைபெற்றது.

சென்னபுரி : அரங்கநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 31-3-60 முதல் 11-4-60 வரை நடைபெற்றது.

சென்னை : சென்ன மல்லீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவ விழா 1-4-60 முதல் 14-4-60 வரை நடைபெற்றது. மேலும் விடாயாற்றி உற்சவம் 14-4-60—23-4-60 வரையிலும் நடைபெற்றது.

சென்னை : சென்னகேசவப்பெருமாள் கோயிலில், பிரம்மோற்சவ விழா 10-4-60 முதல் 20-4-60 வரை நடைபெற்றது. விடாயாற்றி உற்சவம் 21-4-60 முதல் 29-4-60 வரையிலும் நடைபெற்றது.

திருக்குற்றாலம் : திருக்குற்றாலநாதசுவாமி கோயிலில் சித்திரை விசுத் திருவிழா 4-4-60 முதல் 13-4-60 வரை நடைபெற்றது.

அம்பாசமுத்திரம் : காசிபநாதர் கோயிலில் பங்குனித் திருவிழா 4-4-60 முதல் 13-4-60 முடிய நடைபெற்றது.

சென்னை : திருவல்லிக்கேணி, பார்த்தசாரதிசுவாமி கோயிலில் பிரம்ம உற்சவ விழா 11-4-60 முதல் 20-4-60 முடிய நடைபெற்றது. பார்த்தசாரதி சுவாமி கோயிலில் எழுந்தருளி யிருக்கும் நரசிம்ம சுவாமியின் இராஜகோபுரம் சம்ப்ரோக்ஷண மகோற்சவம் 6-4-60ல் நடைபெற்றது.

திருபுவனம் : கம்பகரேசுவரசுவாமி கோயிலில் உருத்திரபாதத் திருநாள் 1-4-60 முதல் 14-4-60 முடிய நடைபெற்றது. 1-4-60 முதல் 10-4-60 முடிய சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப் பெற்றன.

திருநெல்லிக்காவல் : நெல்லிவனநாதசுவாமி கோயிலில் சுமார் ஒரு மாத காலமாக நடந்த இலட்ச்சார்ச்சனைப்பூர்த்தி விழா 1-4-60ல் நடைபெற்றது.

மதுரை : கள்ளழகர் தேவஸ்தானத்தில் சுந்தரராஜப் பெருமாளின் திருக்கல்யாண மகோற்சவ விழா 7-4-60 முதல் 11-4-60 முடிய நடைபெற்றது. இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன.

சேலம் : கோட்டை, அழகிரிநாதசுவாமி கோயிலில் ஸ்ரீராம நவமி உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீமத் ராமாயண உபந்யாசம் 5-4-60 முதல் 14-4-60 வரை பிரதி தினமும் மாலை 6-30 முதல் 8-30 வரை நடைபெற்றது.

பெரம்பலூர் : மதனகோபால்சுவாமி கோயிலில் பிரம்மோற்சவ விழா 2-4-60 முதல் 15-4-60 வரை நடைபெற்றது.

வைஷ்ணவம்

(பி. ஸ்ரீ.)

158339

விசுவரூப தரிசனம்

கண்ணனுடைய விசுவரூப தரிசனம் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் சிறப்பாக வருணிக்கப் பெற்றிருக்கிறது. ஆதாரம் வடமொழியிலுள்ள வியாச பாரதம்தான். தமிழ்ப் புலவரான பெருந்தேவனார், கி. பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் இயற்றிய காப்புப் பாடல்கள் நற்றிணை முதலான தொகை நூல்களில் காணப்படுகின்றன. நற்றிணையின் கடவுள் வாழ்த்துப் பாட்டிலேயே பெருந்தேவனார் தாம் பாரதத்தில் பாடப்போகும் விசுவரூப தரிசனத்திற்கு வித்திட்டிருக்கிறார்.

வித்தும் விருட்சமும்

"மாநிலம் சேவடியாக" என்று தொடங்கும் நற்றிணைக் காப்புச் செய்யுளை 'நற்றிணையும் திருமாலும்' என்ற முந்திய கட்டுரையில் ஆராய்ந்தோம். இந்த வித்திலிருந்து ஒரு மகா விருட்சம்போல் வளர்ந்திருக்கிறது இவர் பாரதத்து விசுவரூப வருணனை.

'பூவில் வண்டு உறைந்தாற் போலத் தன் திவ்விய சக்தியினை மேலொடுக்கி மற்றவன் இட்ட பொய்யாசனத்திடை எழுந்தருளியிருக்கும் அளவில் இருந்த ஆசனம் கீழே தாழ்ந்து நெறுநெறென நிலன் நெளியப் புகுதல் கண்டு, திருப்புன்முறுவல் செய்து யாது செய்தான் ஸ்ரீ வாசுதேவன்'

என்ற வசன பீடிகையுடன் தொடங்குகிறது வருணனை.

வஞ்சனை என்று அறிந்து கொண்டதும், "அஞ்சனவண்ணன்......பொன் முடிபோய் அண்டமுற நீண்டான்; விழித்தான் நெருப்பு" என்கிறார் பெருந்தேவனார். 'விசும்பு மெய்யாக' என்று வானத்தை உடம்பாகக் கூறி,

வளைநரல் பௌவம்
உடுக்கை யாக

என்று நற்றிணை காப்புச் செய்யுளில் திருமாலின் விசுவ ரூபத்திற்கு, கடலை உடையாகவும் பெருந்தேவனார் வருணித்திருக்கிறார் அல்லவா? தமது பாரதத்து விசுவ ரூபத்தின் 'கருங்கடல் ஓதமும் விசும்பும் உடனுற நிமிர்ந்தது' என்று இவர் வருணிப்பதைக் காண்கிறோம்.

சூரிய சந்திரர்களைக் கண்களாகவும், நாலு திசைகளையும் நாலு கைகளாகவும் குறிப்பிடுகிறது நற்றிணை காப்புச் செய்யுள். பாரதத்து விசுவரூப வருணனையோ,

ஆயிரம் தடக்கை
திசைமுகம் பொடியச்
செறிந்தன!

என்று திசைகளையும் கைகளையும் தொடர்பு படுத்துகிறது. இந்தக் கைகளின் செயல்கள் விவரமாக வருணிக்கப்படுகின்றன. கண்களைப் பற்றியோ,

நிமிர்ந்தன புருவம்;
மலர்ந்தன நாட்டம்;
நெற்றித் தனிக்கண்
நெருப்பொடு பிறங்கிற்று;
மற்றைச் செங்கண்
மயங்(கு)எரி உமிழ்ந்தன,
பாயிருள் நீக்கும்
பல்கதிர்த் திரளென

என்று வருணிக்கிறது பெருந்தேவனார் பாரதம்.

'இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய வேத முதல்வன்' என்று விசுவரூபத் திருமாலைக் குறிப்பிடுகிறது நற்றிணைக் காப்புச் செய்யுள், பெருந்தேவனார் பாரதமோ,

நீல மேனி

நிமிர்ந்தெழுந் ததுவே

என்று பொதுவாகக் கூறியபின்,

நீலச் சோதி

நிலையுற நிமிர்தலின்

என்று நினைப்பூட்டி, அந்த நிமிர்தலின் 'ஊழிக்கூத்து' விளைவுகளை வருணித்துக் கொண்டே போகிறது.

நற்றிணைக் காப்புச் செய்யுள் 'தீதற விளங்கிய திகிரியோனே' என்று முற்றுப் பெறுகின்றது. பாரதத்தின் விசுவரூப அக வலோ,

கூருகிர் வாய்ந்த

கொடுந்தொழி லோனே

[கூருகிர் - கூர்மையான நகங்கள்]

என்று பூர்த்தியாகிறது.

தீமையைப் பேர்க்கும் சக்கராயுதபாணி என்று அந்த விசுவரூப வருணனை முடிவதை யும், நரசிங்கமாகி இரணியன் மார்பைக் கிழித்த கொடுந்தொழிலுடன் இந்த வருணனை முடிவதையும் காண்கிறோம்.

விருட்சத்தின் வேர்

பெருந்தேவனார் பாரதத்தில் வரும் விசுவ ரூப வருணனைக்கு வித்து நற்றிணைக் காப்புச் செய்யுளில் காணப்படுகிறது என்றால், வேர் வியாச பாரதத்தில் இருக்கிறது என்று சொல்லலாம். வியாச பாரதத்தின் விசுவ ரூப வருணனையின் சாரம் வருமாறு :

'துரியோதனன் சிறப்பாக அலங்கரிக்கப் பெற்றிருந்த ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டி யதும் கண்ணன் புன்னகை புரிந்துகொண்டே அந்த ஆசனத்தில் அமர்ந்தான். உடனே நெறுநெறு என்ற சத்தம். சபையெல்லாம் கிடுகிடுத்துப் போகிறது. புன்னகை இடிச் சிரிப்பாகிறது. அந்தச் சிரிப்போடுதான் எத் தனை மின்னல்கள்!

'அந்த ரூபம் இப்போது ஒரே அக்கினிப் பிரளயமாகத் தோன்றுகிறது. எல்லா உலகங் களும் சூரிய சந்திர நட்சத்திரங்களும் அங்கே காணப்படுகின்றன. மும்மூர்த்திகளும் ஒரே உருவில் தோன்றுகிறார்கள். முகங்கள் எத் தனை! புயங்கள் எத்தனை! அகிலலோக சக்தி களும் ஆயுதங்களாகிப் புயங்களை அலங்கரிக் கின்றன.

'ஆயிரம் கண்கள் ஏககாலத்தில் எல்லா வற்றையும் துருவிப் பார்க்கின்றன. மூச்சுக் காற்று ஒருசமயம் மந்தமாருதமாகவும், ஒரு சமயம் சண்டமாருதமாகவும் வீசுகிறது. அந்த அதிபயங்கர ரூபம் ஒன்றா, பலவா?— தெரிந்து கொள்ள முடியவில்லை.

'பிறவிக்குருடான திருதிராஷ்டிரனுக் கும் அந்த உருவம் தெரிந்தது. திடீரென்று ஒரு திவ்ய திருஷ்டி பெற்றவனைப்போல் அவன் அந்தப் பயங்கர சௌந்தரியங்களைப் பார்த்துப் பிரமித்துக்கொண்டிருந்தான். துரோணர் பீஷ்மர் முதலானவர்களும் பிர மித்துப் போனார்கள். மற்றவர்களெல்லாம் நடுநடுங்கிக் கண்களை மூடிக்கொண்டார்கள். தேவதுந்துபிகள் முழங்கின. வானம் பூமாரி பொழிந்தது.

'உருவமோ வளர்ந்துகொண்டே இருந் தது—மேலும் கீழும் திசைகளிலும். பூமி சலித்தது; வானமும் சலித்தது. மேலும் மேலும் முடிவில்லாமலே வளர்ந்துகொண் டிருப்பது போலத் தோன்றியது அந்த விசித் திரமான சரீரம். "ஓ பகவானே! பிரபுவே! கோபத்தை அடக்கும், அந்தக் கோரமான ரூபத்தை ஒடுக்கும்; உலகமெல்லாம் நாச மடைவதற்கு முன்னமே அடக்கிக்கொள் ளும்!' என்று பிரார்த்தித்தார்கள் லோக பாலர்களெல்லாம்.

'விரிந்து கொண்டே வந்த சரீரம் திடீ ரென்று ஒடுங்கிவிட்டது. புருஷோத்தமனை கிருஷ்ணன் விதுரரைக் கையால் பிடித்துக் கொண்டு புன்னகை புரிந்தான். அப்பொழுது திருதராஷ்டிரனுடைய திருஷ்டியும் மறைந்து போயிற்று. "ஆம், அந்த விசுவரூபத்தைப் பார்த்த பின் மற்றொன்றையும் பார்க்க வேணுமா?' என்று தனக்குள் தானே சொல் லிக் கொண்டான்'.

இந்த விசுவரூப வருணனையை உள்ளத் தில் கொண்டு பெருந்தேவனார் நற்றிணைக் காப்புச் செய்யுளில் ஒரு 'புனையா ஓவியம்' தந்திருக்கிறார். அந்த ஓவியம் இவரது பாரதத் தில் வரும் விசுவரூப வருணனையில் இவரது மனோபாவ சிகரத்தையே எட்டிப் பிடிக்கும் பேரோவியமாக வளர்ந்திருப்பதைக் காண் கிறோம்.

ஆச்சரிய வருணனைகள்

வானும் திசையும் இருள் பரந்தது என்று சொல்லிவிட்டு, அந்தப் பின்னணியில் நீலஜோதி நிமிர்ந்தெழுந்து விசுவரூபம் கொள்ளும் அதிசயத்தைக் கலைத்திறனுடன் வருணிக்கிறார். நிலவறைக்குள் கண்ணனைக் கட்டிச் சிறைப்படுத்த வேண்டுமென்று துரியோதனன் பதுக்கிவைத்திருந்த மல்லர்களையும் அரக்கர்களையும் விசுவரூப பாதங்கள் உதைத்துப் பாதாளத்தில் வீழ்த்துகின்றனவாம். கோபம் மேலும் பொங்குகிறது இந்தக் கோபம்,

பொடித்தன மயிரே;
பொங்கின புகையே;
கடித்தன எயிறே;
மடித்தன வாயே

என்றவாறு பொங்கிக் கொண்டிருப்பதைப் பாருங்கள்.

சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணையும் இந்த விசுவரூபத்தில் காண்கிறோம். "மற்றக் கண்களும் நெருப்பு உமிழ்கின்றன!" என்று அதிசயிக்கிறோம், அஞ்சுகிறோம். செந்தாமரைக்கண்கள் மலர்ந்து நெருப்பைக் கக்கி விசுவரூபத் தோற்றத்தால் திடீரென்று இருண்ட அந்த இருட்டைப் போக்குகின்றனவாம்.

எத்தனை சூரியர்கள் இப்போது பிரகாசிக்கிறார்கள்! எத்தனை கைகள் திசைதொறும் கிளைத்து, வில்லை வளைத்து அம்பு போடுகின்றன! அந்த அம்பறாத்துணியில்தான் எத்தனை வெங்கணைகள்! எத்தனைவாள்கள், சூலங்கள், கேடகங்கள், வேலாயுதங்கள், மழுக்கள், தண்டாயுதங்கள்! வலம்புரிச் சங்குகள், முரசுகள் இடிக்குரலில் அறிவிக்கின்றன இந்தப் பயங்கர வாசுதேவனை. அன்புக் கண்ணன் கொடுமை கண்டதும் எப்படிச் சீறி வளர்கிறான்!

அழகையும் கோபத்தையும் எவ்வளவு அதிசயமாய்க் காட்டுகிறார் புலவர்.

பொலங்கழல் விரிப்பன;
பொன்முடி திருத்துவ;
வசைஎழப் புகைப்பன;
புகையெழப் பிசைவன
பூங்கச்சு வரிப்பன;
பூங்கழல் எடுப்பன;
தூங்(கு)எழில் மணிவிரல்
சுட்டிக் காட்டுவ;
பூங்கழல் அடிகொடு
புரள மிதிப்பன!

என்று மேலே போகிறது வருணனை.

ஆம்; மேலே மேலே பொங்கிப் பெருகிய வண்ணமாய் இருக்கும் கோபமாகிய தருமாவேசத்தை வருணித்துக் காட்ட வேண்டாமா?

பிடிக்கலுற்(று) அடர்ப்பன;
புடைக்கலுற்(று) ஒச்சுவ;
தோளொடுதோள் கொட்டுவ;
தாளொடுதாள் அடிப்பன

என்ற வாக்கின் 'கெடுபிடி'யைத் தான் பாருங்கள்! சூரியன் முன் விளக்கைப்போல் ஆகிறது சூரியன் நீலஜோதிக்கு முன்!

பகலொளி இழந்தது
பரிதிமண் டிலமே

[பரிதி மண்டிலம் - சூரிய வட்டம்]
என்று சூரியன் படும்பாட்டைக் காட்டுகிறார் கவிஞர்.

இந்த நிலையில் அந்தர வானத்தில் சஞ்சரிக்கும் தெய்வ கணங்கள் மயங்கிப் புலம்புகின்றனவாம்:

புகலிடம் இலையெனப்
புலம்பினின் றனரே!

ஊழிக்காற்று வீசுகிறது. நட்சத்திரங்கள் சுழல்கின்றன; எரிகின்றன. ஆகாய கங்கை சுழிக்கிறது. தேவேந்திரனுடைய கற்பகச் சோலைகளும் பொற்பழிந்து போகின்றனவாம்.

பாதாளமும் தேவருலகமும் ஒருங்கே நடுங்குகின்றன. நடுக்கம் மயக்கமாகிறது. பம்பரமாடுகிறது பிரபஞ்சம்:

பம்பரம் போல
அவனி நடுங்க!
[அவனி - பூமி.]

'ஊழியின் இறுதி வந்துவிட்டது போலும்' என்று எங்கும் ஒரே தவிப்பு - ஒரே குருட்டாட்டம்!

குருடு விழித்தது

இந்தக் குருட்டாட்டத்திலே தேவர்களும் திக்குப் பாலகர்களும் காளியும் முனிவர்களும் கின்னரர்களும் விஞ்சையர்களும் - அவுணரும் அரக்கரும் கூட—'கோபிக்க வேண்டாம், கோபிக்க வேண்டாம், என்று கூக்குரலிடு கிறார்கள்.

மாதவா! முனியேல்:
மாயா! முனியேல்;
மூவகை உலகின்
முதல்வா! முனியேல்;

என்று கதறுகிறார்கள், பதறுகிறார்கள்.

பீஷ்மர் துரோணர் விதுரர் முதலானவர் களும்—கர்ணனும் கூட —'வாட்டமுற்ற மனத்தினராக' வருந்தித் திகைத்து நிற்கிறார் கள். இத்தகைய பயங்கர அழகைப் பார்க்க ஆசைப்படுகிறானும் பிறவிக் குருடனை திருதராஷ்டிர மகாராஜன்.

ஐயனே, அழகனே.
ஆயிரம் பெயரனே,

கைகுவித்து இறைஞ்சுகிறான். 'எங்கும் பரந்து உயர்ந்த உன் திருவடிவைக் காணும்படி எனக்குக் கண்களை அருளவேணும் என்று பிரார்த் திக்கிறான். ஆதிநாயகன் பேரருளால்,

கதுமென விழித்தது
காவலன் கண்ணே!

என்கிறார் பெருந்தேவனார்.

விசுவரூப ஆச்சரிய வரிசைகளில் இதை யும் ஓர் ஆச்சரியமாகக் குறிப்பிட்டுவிட்டு, திருதராஷ்டிரனின் பக்தி பரவசத்தையும் சுட்டிக் காட்டுகிறார். அகக்குருடும் கதுமென விழித்து ஒளிக்கடலாடுகிறது; அழகுக் கடலாடுகிறது.

பூதலம் நெருக்கிப்
பொலிந்த மேனியைப்
பார்க்கும், பணியும்,
பரவச மாகி,
வேர்க்கும், கண்ணீர்
வீழ்த்தும்!

வேந்தரும் வேதியர் குழாமும் தனித் தனி எழுந்து விசுவரூபத்தை வணங்குவதை யும் வருணிக்கிறார்,

தொழுத கையினர்,
துளங்கிய நெஞ்சினர்

என்றும்,

தலைமிசை ஏறிய
கையின ராகி

என்றும்,

'போற்றி, போற்றி' என்று ஆயிரம் போற்றிகள் சொல்லுகிறார்கள். ஆயிரம் தோளுடன், ஆயிரம் தாளுடன், ஆயிரம் பொன் முடிகளுடன் வளர்ந்துகொண்டிருக் கும் ஆயிரம் பெயர்—அதிசயத்திற்கு! அகக் குருடர்களெல்லாம்—துரியோதனன் தவிர— இன்று, இப்போது, விழித்துக் கொள்கிறார் களாம்.

ஒடுங்குகிறது உருவம்

அப்பனைக் காண்கிறார்கள்; தலைவனைக் காண்கிறார்கள். தலைவிக்குத் தலைவன் போல வும் பார்க்கிறார்களாம். பரம தரித்திரனுக்குப் பெருஞ் செல்வம் போலவும் தோன்றுகிற தாம் இப்போது விசுவரூபத் தோற்றம். ஒடுங்கிவரும் நிலை இது.

எந்தாய் போற்றி;
இறைவா! போற்றி

என்கிறார்கள்.

மன்னு! போற்றி;
மணாளா! போற்றி

என்கிறார்கள்.

தீவினை கெடுக்கும்
செல்வா! போற்றி

என்கிறார்கள்.

இப்படி யெல்லாம் மண்ணும் விண்ணும் போற்றிப் புகழச் சீற்றம் மாறுகிறதாம் திரு நெடுமாலுக்கு.

அண்டமும் விசும்பும்
அகிலமும் அனைத்தும்
போக்கற நிமிர்ந்த
ஆக்கையைச் சுருக்கினன்.
[ஆக்கை - உடம்பு]

என்று விசுவரூப ஒடுக்கத்தைச் சொல்லி முடிக்கிறார் பெருந்தேவனார்,

நீண்ட (விசுவரூப) வருணனையை முடித்துக் கொள்ளுகிறார் பெருந்தேவனார்'

கண்மூன்றும் தீப்பிறக்க,
கைகள்ஓர் ஆயிரமாய்
விண்ணார வெய்யோன்
ஒளிமறைக்க,—மண்வேண்டித்
தூதுவனாய்ப் போந்து
துரியோத தனனிடைக்கே
மாதவனார் தாம்
செய்த வாறு

என்று. பிறகு மானிட வேஷத்தனாய் வீற்றிருந்தான் தேவதேவன் ஸ்ரீ வாசுதேவன் என்று வசனப் பகுதியும் முடிகிறது.

பெருந்தேவனார் பாரதத்திலுள்ள விசுவரூப வருணனை. அகவல் தமிழ் இரசிகர்களுக்கு ஓர் அருமந்த விருந்து.

செய்திகள்

காட்டுமன்னார் கோயில், வீரநாராயணப்பெருமாள் கோயிலில், கடலூர் அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. ரா. அ. வரதராஜய்யர் அவர்கள் தலைமையில் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியம் அவர்கள் கம்பராமாயணமும் ஆழ்வார்களும் என்னும் பொருள் பற்றி 16-4-60ல் சொற்பொழிவாற்றினார்கள்.

✦ ✦ ✦ ✦

குமாரவயலூர் : சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருச்சி மயிலஞ்சந்தை திரு. என். சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களால் மின்விசைப் பொறியுடன் நன்கொடையாக அமைத்துக்கொடுத்த தண்ணீர்க் குழாயை சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் 10-4-60ல் துவக்கிவைத்தார்கள்.

✦ ✦ ✦ ✦

சிதம்பரம் : கோதண்டராமசுவாமி கோயிலின் ஸ்ரீராமநவமி உற்சவ விழா 10-4-60ல் நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

திருவெண்காடு : சுவேதாரண்யேசுவர சுவாமி கோயிலில் சிவஞான போத சொற்பொழிவு விழா 11-4-60 முதல் 22-4-60 வரை திரு. சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

✦ ✦ ✦ ✦

திருப்புகலூர் : அக்கினீசுவரசுவாமி கோயிலில், திருநாவுக்கரசு சுவாமிகளின் மகோற்சவ விழா 12-4-60 முதல் 21-4-60 முடிய நடைபெற்றது. 19-4-60 முதல் 21-4-60 முடிய திருமுறை மகாநாடு நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன. 15-4-60ல் தெப்ப விழாவும் நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

ஸ்ரீபெரும்பூதூர் : ஸ்ரீபாஷ்யக்காரசுவாமி கோயிலில் சைத்ரோற்சவம் 22-4-60 முதல் 2-5-60 வரை நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

சென்னை : முல்லாசாகிப் தெரு, அரங்கநாதர் ஆலயத்தில் 8-3-60ல் கனம் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் முன்னிலையில் சம்ரோக்ஷண விழா நடைபெற்றது

பள்ளிகொண்டை

பச்சை மாமலைபோல் மேனி
பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்
கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே
—தொண்டரடிப்பொடியாழ்வார்.

திருமால் அர்ச்சாவதாரமாய்க் காட்சி தருவது மூன்று திருக்கோலங்களில் என்பர். அவை நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்கள். கிடந்த திருக்கோலமாவது பாம்பணை மேல் பரமன் பள்ளிகொண்டிருப்பது. திருவரங்கம் பெரிய கோயில் அரவணைமேல் அறிதுயில் அரங்கநாதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா. பள்ளிகொண்ட திருக்கோலத்தில் பரமன் விளங்கும் கோயில்கள் பல நம் நாட்டிடை உண்டு. அவைகளில் ஒன்று பள்ளிகொண்டை என்பது. இப்பதி வடஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் வட்டத்தில் இருக்கிறது. பாலாற்றின் தென்கரையில்அமைந்துள்ளது. சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் நெடுஞ்சாலையில் நூறுவது கல்லில் இருக்கிறது. குடியாத் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து தெற்கே மூன்று கல் தொலைவிலுள்ளது. இவ்வூருக் கண்மையில் உச்சிக்காழ்மலையிருக்கிறது.

பள்ளிகொண்ட பெருமானின் திருநாமத்தையே இவ்வூருக்கிட்டிருப்பது தனிச் சிறப்பு வாய்ந்தது. பள்ளிகொண்டான், பள்ளிகொண்டா, பள்ளிகொண்டை என்று வழங்குகின்றது. விச்சூர் என்றும் ஒரு பெயர் உண்டு. காவிரிக்கரையிலுள்ள திருவரங்கத்தினின்றும் பிரித்துக்காட்ட இத்தலத்தை 'உத்தரரங்கம்' என்று கூறுகின்றனர்.

சோலைகள் நடுவே கோயில் அமைந்திருக்கிறது. கிழக்குக்கோயில் வாயிலை நூறு அடி உயரமுள்ள ஒரு கோபுரம் அழகு செய்கிறது. கோயிலின் பிரகாரங்களில் தாயார், கண்ணன், இராமன், ஆண்டாள், ஆழ்வாராதியர், ஆஞ்சநேயர் சந்நிதிகள் இருக்கின்றன. ஓங்கார (பிரணவாகார) விமானத்தில் எம்பெருமான் பள்ளிகொண்டிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இறைவனின் திருநாமம் உத்தரரங்கநாத சுவாமி. நாச்சியார் திருப்பெயர் அரங்கநாயகித் தாயார். இக்கோயிலில் கஸ்தூரிரங்கநாதர் சந்நிதியொன்றும் இருக்கிறது.

இங்கு எம்பிரான் அம்பரீஷ மகாராஜனுக்குப் பிரத்தியட்சம். இத்தலத்தின் தீர்த்தம் வியாச புஷ்கரிணி. சந்நிதித் தெருவில் இருக்கிறது. தலவிருட்சம் பவளமல்லி.

இப்பதியை ஆழ்வார்கள் பாடவில்லை. காஞ்சி மகாத்மியம் இரண்டாவது அத்தியாயத்தில் உத்தரங்கக்ஷேத்திரத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சடாயுவின் உடன் பிறந்த சம்பாதி எம்பெருமானை நோக்கித் தவம் செய்ய, அவனருளால் தாமரை மலரில் ஒரு பெண் மகவு தோன்ற, அதையெடுத்து செங்கமலவல்லி என்ற நாமம் சூட்டி வளர்த்து வடரங்கப்பெருமானுக்கு மணம் செய்வித்ததாக ஒரு வரலாறு வழங்குகிறது. சம்பாதி இருந்ததாகச் சொல்லப்படும் உச்சிக்ககாழ் மலைக்கு ஆண்டுக்கு ஒருமுறை தைமாதம் முதல் நாளில் பெருமாள் எழுந்தருளி திருவிழா நடைபெறுவது இதைக் குறிக்கும். மார்கழி வைகுண்ட ஏகாதசியிலும் பெருந்திருவிழா நடைபெறுகிறது. இக்கோயிலில் மக்கள் வந்து மணம் செய்து கொண்டு போகிற வழக்கம் இருக்கிறது.

கோயில் மிகவும் பழமையானது. திருவரங்கத்திலிருப்பது போலவே ஓங்கார

விமானம் இங்கு இருப்பதால் பல்லவர்கள் காலத்தில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படு கிறது. விஜயநகர மன்னர்கள் மண்டபங் கள், மதில்கள், கோபுரம் இவைகளைக் கட்டி ஞர்கள். கோயில் கோபுரத்திற்குத் தெற்கே யுள்ள நாலுகால் திருவந்திக்காப்பு மண்டபம் அழகிய சிற்ப வேலைப்பாடமைந்தது. வியாச புஷ்கரிணியின் மேல்கரையில் கண்ணன் கோயிலிருக்கிறது. அங்கே தூண்களில் எட்டு விதமான நரசிம்ம உருவங்கள் செதுக் கப்பட்டிருக்கின்றன. அதனுல் அதற்கு "அஷ்டநரசிம்மம்" என்ற பெயர் உண்டு.

பாரமாய பழவினை
பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி
என்னுள் புகுந்தான்
கோரமா தவம்செய்தனன்
கொலறியே னரங்கத்தம்மான் திரு
ஆரமார்பதன்றே அடியேனை
யாட் கொண்டதே.

—திருப்பாணுழ்வார்

செய்திகள்

குரங்கணி : முத்துமாலை அம்மன்கோயிலில் 4-3-60 முதல் திரு. மு. பொன்னு நாடார் அவர்களால் கம்பராமாயணம் வாசிக்கப்பட்டு 11-4 60ல் பூர்த்தியாயிற்று. அன்று திரு. ந, அரசகுமார் நாடார் அவர்கள் தலைமையில் திரு. மு. ஆதிநாராயண நாடார், திரு. த. ச. முத்துமாலை நாடார் ஆகியவர்களால் இராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற் றது. 11-4-60 முதல் திரு. த. ச. முத்துமாலை நாடார் அவர்களால் பெரியபுராணம் தொடர்ந்து வாசிக்கப்பெற்று வருகிறது.

சென்னை : இராயப்பேட்டை, சித்திபுத்தி விநாயகர், சுந்தரேசுவரர் கோயிலில் 16-4-60ல் அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ ஏ.எஸ்., அவர்கள் "ஓம் முருகா" மின்சார விளக்கை ஏற்றிவைத்தார்கள். திருப்பதிகத்தைத் திறந்துவைத்த வர்கள் : தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள், திரு. எஸ். சிவ குமாரன், திரு. டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை முதலியவர் கள் ஆவார்கள்.

சென்னை : சிந்தாதிரிப்பேட்டை, ஆதிபுரீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 1-5-60 முதல் 16-5-60 வரை சிறப்பாக நடைபெறும்.

திருவள்ளூர் : வீரராகவசுவாமி கோயிலில் சைத்ர பிரம்மோற்சவம் 1-5-60 முதல் 10-5-60 வரை நடைபெறும்.

சங்ககிரி : சோமேசுவரசுவாமி கோயிலில் விழா 2-4-60 முதல் 12-4-60 முடிய நடைபெற்றது.

சென்னை : முத்தியாலுப்பேட்டை, கச்சபேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 30-4-60 முதல் 11-5-60 முடிய நடைபெறும்.

திருக்கழுக்குன்றம் : வேதகிரீசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 29-4-60 தொடங்கப்பெற்று 10-5-60 வரை நடைபெறும்.

மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

முன்னிதழில் திருக்காட்கரைப்பதியைப் பெரும்பாலுமநுபவித்து முடித்தோம். அத் திருப்பதியை யநுபவிக்கின்ற நம்மாழ்வாருடைய பதிகத்தில் "வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னை யொழிய என்னின் முன்னம் பாரித்துத், தானென்னை முற்றப்பருகினன். காரொக்கும் காட்கரையப்பன் கடியனே" என்னும் பத்தாவது பாசுரத்தை யெடுத்துக் காட்டி, சேதநன் எம்பெருமானைப் பெறுவது என்பதிலுங் காட்டில் எம்பெருமான் சேதனனைப் பெறுவது என்பதுவே பரமபுருஷார்த்தமென்றும், இதுதான் வைணவ சம்பிரதாயத்தில் மிகச் சீரியபொருளென்றும், இதுவே இப்பாட்டில் விளங்கக் காட்டப்பட்டுள்ளதென்றும், இதனை அடுத்த இதழில் விரிவாக விளக்குவோமென்றும் சொல்லி நிறுத்தினோம். அதனையே ஈண்டு விளக்குகின்றோம்.

நாம் எம்பெருமானைப் பெறுதற்குப் பல வகைப்பட்ட முயற்சிகளைச் செய்கிறோம். அப்பெருமானை நாம் கிட்டுவதற்கு பகவத்கீதை முதலிய நூல்களில் பலவகைப்பட்ட வழிகள் காட்டப்பட்டுள்ளன. கருமயோகம் ஞானயோகம் பக்தியோகம் பிரபத்தியோகம் இவை முதலான ஸாதனங்கள் எம்பெருமானைப் பெறுதற்கு உறுப்பாக உபதேசிக்கப்பட்டிருப்பதால் நாம் நமது உரிமைக்குத் தக்கபடி இவற்றுள் ஏதேனும் ஒருபாயத்தை யனுட்டித்து அப்பெருமானைப் பெறுவதாகப் பாரிக்கின்றோம். முடிவில் அவனைப் பெற்றுக் களிப்பதாகவும் உபநிடதம் முதலிய நூல்களினால் உணருகின்றோம்.

மிக்கவிறை நிலையும் மெய்யாமுயிர்நிலையும் என்று தொடங்கும் திருவாய் மொழித் தனியனில் தெரிவிக்கப்பட்டுள்ள அர்த்த பஞ்சகத்தில் முதலிரண்டு அர்த்தங்கள் பரமாத்மஸ்வரூபமும் ஜீவாத்மஸ்வரூபமுமாகும். இவற்றைச் சொல்லுமிடத்து "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந:" என்று சொல்லிற்று. இதனால் பகவான் அடையப்படுகிறவனென்றும் சேதநன் அடைபவனென்றும் தேறிநின்றது. இதற்கெல்லாம் சிகரமாகத் தைத்திரியவுபநிஷத்தில் "ப்ரஹ்மவித் ஆப்நோதி பரம்" என்று ஓதிற்று. பரம்பொருளை யுணர்ந்தவன் அப்பரமாத்மாவைச் சென்று அடைகிறான் என்பது இதன் பொருள்.

ஆழ்வார்களும் நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே என்றும், நானே யெய்தப் பெற்றேன் என்றும், அடியேனடைந்துய்ந்து போனேனே என்றும் இங்ஙனே பல நூறு பாசுரங்களினால் பரமபுருஷனைத் தாம் சென்று பற்றுவதாகவே பேசி யுள்ளார்கள். பல சொல்லி என்? பகவானைப் பற்றுவதற்கு ஏற்பட்ட மந்திரம் 'மந்த்ரரத்னம்' என்று சொல்லப்படுகிற த்வய மந்த்ரம். அதில் "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே" என்பது பூர்வ வாக்கியம். அதில் சேதநன் தான் பற்றுவதாகவே ஐயமறப் பேசப்பட்டுள்ளது. உண்மை இங்ஙனே யிருக்க [அதாவது பற்றுகிறவன் சேதநனா யிருக்க] பெறுபவனும் இவனாகவேயன்றோ இருக்கத் தகுதியுள்ளது. எம்பெருமான் பற்றுபவனாக இருந்தால் அவன்றான் பெறுபவனாக இருக்கத் தகுதியுண்டு. அங்ஙனமில்லையே. ஆக 'பேறு சேதநனுடையதன்று, ஸர்வேச்வரனுடையது' என்று சொல்லுவதற்குத் தகுதியில்லையே யென்று சங்கை தோன்றக் கூடும். இதைப் பற்றித் தெளிவிப்போமிங்கு.

ஞானிகளை நூற்பொருளுணர்ந்தவர்களென்றும் ஆழ்பொருளுணர்ந்தவர்களென்றும் இருவகையாகப் பிரிப்பர் நம் ஆசிரியர்கள். சேதநனைப் பெறுபவனாகவும் எம்பெருமானைப் பெறப்படுபவனாகவும் உணருமவர்கள்

நூற்பொருளுணர்ந்தவர்கள். சேதநலாபத்தைப் பேருகக் கொண்டு களிப்பவன் எம்பெருமான் என்று உணருமவர்கள் ஆழ்பொருளுணர்ந்தவர்கள். முந்தினவர்களான நூற்பொருளுணர்ந்தவர்களின் கொள்கையைப்பற்றி முன்னம் விவரித்தாய்விட்டபடியால் அதில் இன்னமும் விவரிக்க வேண்டியதொன்றுமில்லை. இனி, ஆழ்பொருளுணர்ந்தவர்களின் கொள்கையைப்பற்றியே விவரிக்க வேண்டியதுள்ளது. மேலே யெடுத்துக் காட்டிய திருக்காட்கரைப் பாசுரத்தினுலேயே இக்கொள்கை நன்கு விளங்கா நின்றதெனினும் மற்றும் பல உபபத்திகளுடன் இப்பொருளை விளக்கிவிட்டுப் பின்னர் பாசுரத்தையும் விவரிப்போமாக.

சேதநன் ஸம்ஸார மண்டலத்தை விட்டு அகன்று முக்தி பெற்றவாறே "அஹமந்நம் அஹமந்நம் அஹமந்நம்" என்று ஸாமகானம் பண்ணுவதாக தைத்திரீயோபநிஷத்து ஓதுகின்றது. 'நான் உணவாகிறேன், நான் உணவாகிறேன், நான் உணவாகிறேன்' என்று மூன்று வரிசை சொல்லுகிறுன் முக்த புருஷன். தன்னைப் பெறுவதற்கு நெடுநாள் பலவாறு க்ருஷிகள் பண்ணியிருந்தும் பெருமல் பசித்துக் கிடக்கின்ற பரம புருஷனுக்கு இப்போது பசி தீருகிறது காண்மின் என்று சொல்லுவான் போலே "அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்" என்று பாடுகிறுன். 'பசித்திருக்கின்ற பகவானுக்கு நான் அன்னமாகிறேன்' என்பது இதன் பொருள். இதனுல் ஈச்வரன் போக்தா என்பதும், சேதநன் போக்யன் என்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது.

இதற்குமேல் ஒரு சிறு சங்கை தோன்றும்; (அதாவது) 'அஹமந்நம்' என்று பாடின முக்த புருஷன்தானே உடனே 'அஹமந்நாத: அஹமந்நாத: அஹமந்நாத:' என்றும் மூன்று விசை பாடுவதாக அவ்வுபநிஷத்தே ஓதியிருக்கையிலே இவ்விரண்டையும் எங்ஙனே பொருந்த விடுவதென்று சங்கைதோன்றும். கேண்மின். இந்த முக்த புருஷன் முந்துற முன்னம் எம்பெருமானுடைய பசியைத் தணித்துவிட்டுப் பின்னர் தன்னுடைய பசியையும் தணித்துக் கொள்ளுகிறுன். இப்புருஷன் மண்ணும் மரமாயுமில்லையே. இவனும் அறிவுள்ள சேதனனுதலால் எம்பெருமானையநுபவிக்க வேணுமென்கிறவிருப்பம் இவனுக்குமுள்ளதேயன்றே. இவனுடைய பசியைக் காட்டிலும் அவனுடைய பசியே அதிகமென்பதும், அதுவே முந்துற முன்னம் தணிக்கப்படுகிறதென்பதும் முக்கியமாக அறியத்தக்க விஷயம்.

இதற்கும் அடுத்தபடியாகவுள்ளவொரு வாக்கியம் மிகவுமுற்று நோக்கத்தக்கது. முக்தபுருஷன் முதலில் (அஹமந்நம்) என்றுன்; பிறகு (அஹமந்நாத:) என்றுன். அதற்கும் பிறகு (அஹமந்நம் அந்நமதந்தம் அத்மி) என்கிறுன். இதுவும் ஸாமகானத்திற் சேர்ந்தது. இந்த வாக்கியத்தின் கருத்து என்னவென்றல்; என்னைப் பெறுவதற்குப் பசித்திருந்த பகவானுக்கு நான் அன்னமானேன்; என்னையுண்டு பசிதீர்ந்த அப்பெருமானை நானும் உண்டு பசி தீருகிறேன் என்பதாம். பசிதாஹமொன்றுமில்லாதவனுகவோதப்பட்டுள்ள எம்பெருமானுக்குப் பசியிருந்ததென்றும், அஃது இந்த க்ஷுத்ரசேதநனுல் தணிக்கப்படுகிறதென்றும் சொல்லுவதற்கு இன்னது கருத்தென்பதை உய்த்துணரவேணும். உலகில் பயிரிடுபவன் பயிர்செய்வது தானியம் விளைவதற்காகவன்றே. அதுபோல எம்பெருமான் ஜகத்ஸ்ருஷ்டியாகிற க்ருஷி செய்வது ஞானிகளான ஆன்மாக்களைப் பெறுவதற்காகவே யென்பது நூற்கொள்கை. அப்பகவான் ஞானிகளைத் தேடுகிறுனென்பதும், தேடியும் கிடையாதவளவில் வருந்துகிறுனென்பதும் பகவத்கீதை முதலிய நூல்களினுல் அறியக்கிடக்கின்றது. கீதையில் ஏழாமத்யாயத்தில் பகவான் தன்னை வந்து பணியாதவர்களை "ந மாம்துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா;" என்கிற சுலோகத்தாலே நிந்தித்து உடனே "சதுர்விதா பஜந்தேமாம்ஜநாஸ் ஸுக்ருதிந:" என்று, பணியுமவர்களைக் கொண்டாடத் தொடங்கி, "வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுதுர்லப:" என்று தலைக்கட்டுகிறுன். உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன் என்று கொண்டிருக்கும் மாஞானியைத் தான் தேடுவதாகவும், அப்படிப்பட்ட ஞானி தனக்குக் கிடைக்கவில்லையே யென்று வருந்திக் கூறுவதாகவும் ஸ்பஷ்டமாகவுள்ளது. இத்தகைய பகவானுடைய காதல்தான் பசியாகக் கூறப்படுகின்றது. அவனது காதல் அதிகமா? அவனிடத்து இச்சேதநன்கொண்ட காதல் அதிகமா? என்று பார்த்தால், அங்குச் சென்று அவனிருக்குமிருப்பைப் பார்த்த

வாறே தன்னுடைய அவா ஒரு சிறுகுட்டை போலவும் அவனது அவா பெருங்கடல்போல வுங்காணப்படும். அங்ஙனம் கண்டவாறே முன்னம் 'அஹமந்நம்' என்று சொல்லி அவனது பெரும் பசியைத் தணித்துவிட்டுப் பிறகு 'அஹமந்நாத:' என்று சொல்லித் தன் பசியைத் தணித்துக்கொண்டு பிறகு ஆன்மாவுள்ள வரையில் பகவானை யநுபவித்துக் கொண்டே வாழ்வன்.

இனித் திருக்காட்கரைப் பாசுரத்தை யெடுத்து கொள்வோம்.

"வாரிக் கொண்டுன்னை
விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னையொழிய
என்னின் முன்னம்
பாரித்துத் தானென்னை
முற்றப் பருகினன்
காரொக்குங் காட்கரை
யப்பன் கடியனே."

உன்னைக் காணில் வாரிக்கொண்டு விழுங்குவன் என்று ஆர்வுற்ற என்னை யொழிய, காரொக்கும் காட்கரையப்பன் கடியன் என்னின் முன்னம் பாரித்துத் தானென்னை முற்றப் பருகினன் என்று இயைத்துக்கொள்வது. எம்பெருமான் கண்ணுக்குப் புலப்படாமலேயன்றோ இருக்கிறன்; புலப்பட்டானாகில், 'எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே' என்னும்படியும் 'ரஸோ வை ஸ:' என்னும் படியும் இன்சுவைப் பொருளாயிருக்கின்ற அவனை வாரி விழுங்கிவிட வேணுமென்று ஆசைகொண்டிருந்தாராமாழ்வார். இவர் தம் மாசை இங்ஙனே யிருக்க, அப்பெருமானுடைய ஆசை இன்று நேற்று அன்றிக்கே நெடுங்காலமாகத் தொடர்ந்துவருவதொன்றுதலால் முந்துறமுன்னம் அவனுடைய ஆசைக்கே பலன் கைபுகுந்ததாயிற்று. "தானென்னை முற்றப் பருகினன்" என்பதனால் அது காட்டப்பட்டது.

திருநாங்கூர்ப்பதிகளுள் ஒன்றான திருவெள்ளக்குளமென்னும் அண்ணன்கோவிற் பதியை யநுபவிக்கின்ற திவ்விய கவி பிள்ளைப் பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியில்

"நானடிமை செய்ய விடாய்
நானுனே னெம் பெருமான்
தானடிமை கொள்ளவிடாய்
தானுனன்—ஆனதற்பின்
வெள்ளக் குளத்தே
விடாயிருவருந் தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை
யொத்து"

என்று பணித்ததும் இங்கே நினைக்கத்தக்கது. எம்பெருமானுக்குத் தொண்டு செய்தாலன்றித் தரித்திருக்கவொண்ணுத நிலைமை தமக்கு உண்டானபடியையே தமக்கு விடாயாகத் தெரிவித்தார். எம்பெருமானும் திருப்பதிகள் தோறும் எழுந்தருளியிருந்து எப்போது சேதநலாபம் தனக்கு நேருமோ வென்று பேராவல்கொண்டு எதிர்பார்த்திருப்பதையே அவனுடைய விடாயாகத் தெரிவித்தார். தாம் அங்குச் சென்று அப்பிரானுக்கு ஆளாகி அடிமை செய்யவே அவனும் வந்து தம்மை யாட்கொள்ள அதனால் இருவரும்விடாய் தீரப்பெற்றதாகக் கூறி முடித்தார் ஐயங்கார். இது நம்மாழ்வாருடைய அநுபவத்தை அநுசரித்துக் கூறியவாறு.

இனி, திருக்காட்கரைப் பதிகத்தின் பதினோராம்பாட்டு - இப்பதிகம் கற்றார்க்கு இப்பிறவி முடிந்து அதுக்கடியான ஸம்ஸாரமும் தொலையுமென்று பயனுரைத்துத் தலைக்கட்டிற்று. இப்பாட்டில் "கடியனாய்க் கஞ்சனைக் கொன்றபிரான் தன்னை" என்றவுடனே "கொடிமதிள் தென்குருகூர்ச் சடகோபன்" என்றுள்ளது; இந்தச் சேர்த்தியைக் கணிசித்துப் பேராசிரியர்கள் உரை வகுத்த வழகு காண்மின் ;

"கம்ஸவிஜயத்துக்குக் கொடி கட்டிற்று திருநகரியிலேயாயிற்று. ஸ்வாமி விஜயத்துக்கு உரியவடியாரிருந்த விடத்தே யன்றோ கொடிகட்டுவது" என்று.

கண்ணபிரான் கஞ்சனைக் கொன்றது வட மதுரையிலே. அந்த வெற்றிக் கொடி கட்ட வேண்டியது அவ்விடத்தேயா யிருக்க, ஆழ்வார் தமக்குண்டான உவப்பின் மிகுதியினுல் தாமிருக்குமிடமான திருக்குருகூரிலே கொடிகட்டி மகிழ்ந்தாரென்றும் அதனைப் பாசுரத்திலே கூறினரென்றும் ஆசிரியர்கள் உரை வகுத்தது சிறந்த புத்திசமத்காரமென்க.

திருக்காட்கரைப்பதியநுபவம் முற்றிற்று.
அடுத்தவிதழில்
திருவண்வண்டூர்ப்பதியநுபவம் நிகழும்.

திருவிரிஞ்சிபுரம்

மருவுமஞ்சு பூத முரிமைவந்தி டாது
    மலமிதென்று போட   அறியாது
மயல்கொளிந்த வாழ்வு அமையுமெந்த நாளும்
    வகையில் வந்தி ரரத   அடியேனும்
உருகியன்பி னேடு உனைநினைந்து நாளும்
    உலகமென்று பேச   அறியாத
உருவமொன்றி லாத பருவம்வந்து சேர
    உபயதுங்க பாத   மருள்வாயே
அரிவிரிஞ்சர் தேட அரியதம்பி ரானும்
    அடிபணிந்து பேசி   மறைமூலம்
அருளுகென்ற போது பொருளிதென்று காண
    அருளுமைந்த ஆதி   குருநாதா
திரியுமும்பர் நீடு கிரிபிளந்து சூரர்
    செருவடங்க வேலை   விடுவோனே
செயலமைந்த வேத தொனிமுழங்கு வீதி
    திருவிரிஞ்சை மேவு   பெருமானே

—அருணகிரிநாதர்.

"திருவாரூர்த் தேரழகு,
திருவிடைமருதூர்த் தெருவழகு,
கும்பகோணம் கோயிலழகு,
மன்னார்குடி மதிலழகு"

என்ற பழமொழி யொன்று சோழ நாட்டிடை வழங்கி வருகிறது. தொண்டை நாட்டிலும் "திருவிரிஞ்சை மதிலழகு" என்ற ஒரு பழமொழியைக் கேள்விப்படுகிறோம். திருவிரிஞ்சை என்பது விரிஞ்சிபுரம் என்ற ஊர். வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ளது. இது வேலூரிலிருந்து மேற்கே எட்டுகல் தொலைவிலிருக்கிறது. விரிஞ்சிபுரம் என்னும் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து தெற்கே மூன்று கல்லில் உள்ளது.

இப்பதியில் ஒரு பழைய சிவன் கோயில் இருக்கிறது. தேவாரப் பாடல் பெறவிடினும் வைப்புத்தலமாக வைத்தெண்ணப்படுவது. இது பாலியாற்றுத் தென்கரையில் பாங்ுற அமைந்திருக்கிறது. இயற்கை யெழிலின் நடு நாயகமாய் இலங்குகிறது. இத்தலத்திற்கு கௌரிபுரி, விண்டுபுரி, கரபுரி, கரபுரம், விரிஞ்சை, விரிஞ்சைப்பதி என்ற பெயர்களும் உண்டு. கோயிலிலுள்ள சுயம்பு இலிங்கமூர்த்தியின் பேரில் பங்குனி மாதத்தில் பகலவனின் கதிர்கள் விழுகின்றமையால் இதைப் பாஸ்கர க்ஷேத்திரம் என்றும் கூறுவர்.

ஊருக்கு வெகு தொலைவிலேயே வானுற நிமிர்ந்து நிற்கும் அழகிய கோபுரம் காட்சியளிக்கும். கோயிலையடுத்து மாட வீதிகளும், தேரோடும் தெருக்களும் அமைந்திருக்கின்றன. உயர்ந்த மதில்சுவர்கள் கம்பீரமான தோற்றத்தை யளிக்கின்றன. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கி யிருக்கிறது. கிழக்குக் கோபுர வாயில் வழியேதான் கோயிலுக்குள் போகிறோம். மற்ற மூன்று பக்கங்களிலும் வாயில்கள் இருக்கின்றன. கோயிலுக்குள்ளே ஐந்து பிரகாரங்கள் உள்ளன.

கிழக்கு வாயிற் கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் இடது கைப்புறம் ஒரு பெரிய சிங்கவாய்ச் சிற்பம் நம் கவனத்தை இழுக்கின்றது. இது ஒரு நடைபாவிக்கிணறு. சிங்கதீர்த்தம் என்ற பெயருடையது. ஆதிசங்கரர் இதில் யந்திரப் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகிறது. கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில், சிறப்பாகக் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் பெண்கள் இந்தக் கிணற்றில் நீராடி இறைவன் சந்நிதியில் படுத்துறங்குவார்கள். பெருமான் கனவில் தோன்றி அவர்களுக்கு வேண்டியதை அருள்புரிவான். பிள்ளைப்பேறு இல்லாதவர்கள், பேய் பிசாசு இவைகளால் பீடிக்கப்பட்ட பெண்கள் இந்த தீர்த்தத்திலாடி பல நலன்களைப் பெறுகிறார்கள். கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கு சென்று காண்போருக்கு இவ்வுண்மை விளங்கும்.

வெளிப்பிரகாரம் தென்கிழக்கு மூலையில் பதினாறுகால் மண்டபமும், தென்மேற்கு வடமேற்கு மூலைகளில் திருக்கலியாண மண்டபங்களும், வடகிழக்கு மூலையில் நூற்றுக்கால் மண்டபமும் இருக்கின்றன.

வெளிப்பிரகாரத்தை யடுத்து உள்ளே இருக்கும் இரண்டாம் பிரகாரத்தில் தென்

பக்கம் பிட்சாடனர் எழுந்தருளி யிருக்கிறார். சுதையாலான அழகிய உருவம். அதே பிர காரத்தின் தென்மேற்கு மூலையில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். வடக்குப் பிரகாரத்தில் இறைவியின் சந்நிதி யிருக்கிறது. தேவியின் திருப்பெயர் மரகதவல்லி என்பது.

மற்ற இரண்டு பிரகாரங்களையும் வலம் வந்து மகாமண்டபத்தைத்தாண்டி ஐந்தாவது பிரகாரத்தில் அர்த்தமண்டபத்தைக் கடந்து கர்ப்பக்கிரகத்தை யடைகிறோம். இறைவன் சுயம்பு இலிங்கமூர்த்தியாகக் காட்சி யளித் தருளுகிறார். இறைவன் திருநாமங்கள் வழித் துணைநாதர், மார்க்கசகாயர், மார்க்கபந்து சுவாமி என்பன.

விரிஞ்சீபுரஸ்தல மகாத்மியம், ஸதருத்ரீக ஸம்ஹிதையில் 23 சருக்கங்களில் வடமொழி யில் இருப்பதை மாதஜோதிடம் என்னும் மாத இதழில் தமிழ் மொழி பெயர்த்து வெளி யிடப் பெற்றிருக்கிறது. இதைச் செய்தவர் விரிஞ்சிபுரம் திரு. V. M. முனிரத்தினம் அய்யர்.

தமிழில் செய்யுட்களால் ஆக்கப்பட்ட திருவிரிஞ்சைப் புராணம் என்ற ஒரு நூலும் உண்டு. இதை இயற்றியவர் அருணாசல புரா ணம், திருவெண்காட்டுப் புராணம், திரு வருணைக் கலம்பகம் முதலியவைகளை ஆக்கிய பெரும்புலவர் சைவ - எல்லப்ப நாவலர். அவ ருடைய சொல் நடையும், பொருள் நயமும் இந்த நூல்களைக் கற்றோர்க்குத் தெற்றென விளங்கும். திருவிரிஞ்சைப் புராணத்தில் 8 சருக்கங்களும், 370 பாடல்களும் உள்ளன. முதல்சருக்கம் நைமிசாரணியச்சருக்கம். அதில் வசிஷ்டர் மற்ற முனிவர்களுக்குத் தலமகிமை கூறிய செய்தியைச் சொல்லப்படுகிறது. இரண்டாவது கௌரீபுரச்சருக்கத்தில் பராசத்தி இங்கு தவமியற்றி இறைவனை வழிபட்ட வர லாற்றைத் தெரிந்து கொள்கிறோம். இதனால் தான் இத்தலத்திற்கு கௌரிபுரி என்ற பெய ரும் ஏற்பட்டது. மூன்றாவது விண்டுபுரிச்சருக் கத்தில் திருமால் இங்கு எழுந்தருளியதைக் குறிக்கப்படுகிறது. நான்காவது கரபுரிச்சருக் கத்தில் கரன் என்னும் அசுரன் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றதைக் கூறப்படுகிறது. ஐந்தாவது விரிஞ்சைபுரிச்சருக்கத்தில் இத்தலத் தில் பிரமன் தவமிருந்து சிவபெருமானை வழி பட்ட வரலாறு சொல்லப்படுகிறது. விரிஞ்சன் என்பது பிரமதேவனுக்கு ஒரு பெயர். அக் காரணத்தால்தான் இத்தலத்திற்கு விரிஞ்சி புரம் என்ற பெயர் உண்டாயிற்று. ஆறாவது வழித்துணைச் சருக்கம். குந்தளதேசத்திலிருந்து வணிகன் மிளகுப் பொதிகளை எடுத்துக் கொண்டு இவ்வழியாகக் காஞ்சிபுரத்தில் விலைக்கு விற்பதற்காக வந்தான். வழிப்பறிக் கொள்ளைகாரர்கள் மிளகுப் பொதிகளைக் கவர்ந்து சென்றார்கள். வணிகன் இறைவனை வேண்டி வருந்தினான். பெருமானும் ஒரு குதிரைமேல் ஏறிவந்து திருடர்களிடமிருந்து மிளகுப் பொதிகளை மீட்டுக் கொடுத்து வணி கனைக் காஞ்சிபுரம் வரையில் கொண்டு போய் விட்டு வந்தான். அதனாலேயே இத்தலத்துப் பெருமானுக்கு வழித்துணைநாதர் என்ற பெயர் ஏற்பட்டது. ஏழாவது பரலோகச் சருக்கத்தில் சாவித்திரன் என்னும் மறையவன் பேறுபெற் றதைக் கூறப்படுகிறது. எட்டாவது பாலனுக் குத் திருமுடி வளைத்த சருக்கம். விரிஞ்சைப் பதிப் பெருமானுக்குத் தொண்டு செய்யும் சிவநாதன் என்ற ஆதிசைவ வேதியன் ஒரு வன் இருந்தான். தன் மகன் சிவசருமன் என் பவனைச் சிறுவனாகவிட்டு இவ்வுலக வாழ்வை நீத்தான். சிறுவனை இறைவனுக்குப் பூசை முதலிய தொண்டுகள் செய்யாவண்ணம் தாயாதிகள் தடுத்தார்கள். தாய் வருந்தி இறைவனிடம் முறையிட்டாள். கனவில் கட வுள் தோன்றி "நாளை ஒரு அற்புதம் நிகழ்த்து வேன். உன் குழந்தையைத் தீர்த்தத்தில் நீரா டச் செய்து கோயிலுக்கு அழைத்து வருவா யாக" என்று கட்டளை யிட்டார். அவ்வாறே தாயும் மகனும் சென்றனர். தாயாதிகளும் தொடர்ந்து போயினர். அந்தணச் சிறுவன் இறைவனைத் திருமுழுக்காட்ட திருமஞ்சனக் குடத்தையெடுத்தான். இறைவன் திருமுடி உயர்ந்து நின்றது. திருமஞ்சன மாட்டத் தனக்கு எட்டவில்லையே என்று மனம் வருந் தினான். அவ்வளவில் இறைவன் தன் திரு முடியை வளைத்தார். இதை,

அலைவளைந்திடும் புவியிடத்
துடலுயி ரனைத்தும்
தலைவளைந்தன வளைந்தன
இமையவர் தருவும்
சிலைவளைந்திடும் செயலெனத்
திசைதிசை செறிந்த
மலைவளைந்தன வழித்துணை
யவர்முடி வளைக்க

என்று திருவிரிஞ்சைப் புராணத்தில் சைவ - எல்லப்ப நாவலர் அழகுபடக் கூறியுள்ளனர். இலிங்கமூர்த்தியின் திருமுடி சிறிது சாய்ந் திருப்பதை இன்றும் காண்கிறோம்.

இப்பதி முருகன் பேரில் அருணகிரிநாதர் பதினைந்து திருப்புகழ்ப் பாடல்களை அருளி யுள்ளார். விரிஞ்சை என்று மூன்று பாடல்களி லும், கரபுரம் என்று இரண்டு பாடல்களிலும், கரபுரி என்று பத்துப் பாடல்களிலும், இத் தலத்தின் பெயரைக் குறிக்கிறார். "கழனி நெடுவாளை கமுகொடியமோதும் கரபுரியில் வீறும் பெருமாளே" என்று பத்துப் பாடல் களின் ஈற்றிலே கூறுகிறார். ஒரு பாட்டில்

கமுகினிற் குலையறக் கதலியிற் கனியுகக்
கழையின்முத் தமுதிரக் கயல்குதித் துலவுநற்
கனவயற் றிகழ்திருக்கரபுரத் தறுமுகப்
பெருமாளே

என்று சொல்கிறார். மற்றொன்றில், "திசை தொறும்பர பூபதிதிசைமுகன் பராவிய திரு விரிஞ்சை மேவிய பெருமாளே" என்று பிர மன் இங்கு வழிபட்டதைக் குறிக்கிறார்.

மார்க்கசகாயதேவர் என்பவர் "திரு விரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்" என்ற சிறந்த நூலைச் செய்திருக்கிறார். பாடல்கள் பக்திச் சுவைமிக்கவை. பின்வரும் பாடலை அடிக்கடி பாட நாம் கேட்டிருப்பதிலிருந்து இந்த நூலின் பெருமை விளங்கும்:—

கண்ணுலுனது திருவடியைக்
கண்டா தரவு பெருகியிரு
கையால் தொழுதுன் திருக்கோயில்
காலால் வலம்செய் துனதுபுகழ்
பண்ணு லுருகிப் புகழ்ந்து கண்ணீர்
பாயா எனையும் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதிவாழும்
அண்ணல்வருக உலகமுழு தாண்டாய்வருக
கதிதருமெம் ஐயாவருக
ஆறுமுக அப்பா வருக
விளங்கு கதிர் வண்ணவருக
மயிலேறு மன்னவருக அடியார்கள்
வாழ்வேவருக தெய்வசிகாமணியே
வருக வருகவே.

இன்னும் இரட்டைப் புலவர்கள் இத்தலத் திறைவன்மீது சில பாடல்களைப் பாடி யிருக் கின்றனர். அவர்கள் நகைச்சுவைப் பாடல்களை நயம்பட உரைப்பதில் வல்லவர்கள். எடுத்துக் காட்டாக ஒரு பாடல்.

தேன்பாயும் சோலைத் திருவிரிஞ்சை மார்க்கேசா
நான்பாவி வந்துஉன்னை நாடினல்—ஏன் பாவி
என்று பேசாமலிருந்தாய் தலைவளைத்து
இன்றுதுணை யாரு மிலையே.



திருவிரிஞ்சிபுரம் சிங்கக் கிணறு

அப்பைய தீட்சிதர் மார்க்சகாயமூர்த்தி யின்மேல் ஒரு சுலோகம் பாடி யிருக்கிறார். இன்னும் நவநீத கவி யென்பவர் "விரிஞ்சி புரநாதசரிதா" என்ற நூலை எழுதி யிருக் கிறார்.

இத்தலத்தின் தீர்த்தங்கள் சிம்மதீர்த் தம், பிரமதீர்த்தம், கரதீர்த்தம், சந்திரதீர்த் தம், பாலிநதி என்பன. கோயிலில் நாலுகால பூசை நடக்கிறது. பங்குனி உத்திரத்தில் பிர மோற்சவம் நடைபெறுகிறது. கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் பெருந்திர ளான மக்கள் வந்து வழிபடுகின்றனர்.

இக்கோயிலில் கிரந்த - தமிழ் கல்வெட் டுக்கள் காணப்படுகின்றன. ஜயங்கொண்ட சோழமண்டலத்துத் திருவிரிஞ்சிபுரம் என்று கூறப்படுகிறது. இறைவன் பெயரை வழித்துணை நாயனர் என்று குறிக்கப்படுகிறது. நந்திவிக் கிரமபல்லவன், இராஜேந்திர சோழன், பராந் தகசோழன் I, விஜயநகர-இம்மடி நரசிம்ம ராயர், அச்சுதராயர், தேவராயர், கிருஷ்ண தேவராயர், கர்நாடக - வெங்கடபதிதேவன் இம்மன்னர்களின் காலத்திய கல்வெட்டுக்கள்

அவை. கோயில் இறைவனுக்கு தானம் வழங்கியது, நிலம் கொடுத்தது, கிராமங்கள் அளித்தது, எரமநாயக்கன் மண்டபம் கட்டியது, பிரகார தளவரிசை போட்டது, நந்தவனத்துக்கும் விளக்கெரிப்பதற்கும் நிலம்விட்டது, முதலிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. ஒரு கல் வெட்டில், எல்லா வகுப்பு அந்தணர்களும் கோயில் சந்நிதியில் கூடி மணம் செய்வதற்கு வரதட்சிணை கொடுப்பதோ வாங்குவதோ கூடாதென முடிவு செய்யப்பட்டதைக் காணலாம். மற்றொன்றில் குருநமசிவாயமூர்த்தியின் மாணவர் ஆனந்த நமசிவாய பண்டாரத்துக்கு மடத்திற்காக ஒரு வீடு கொடுக்கப்பட்டதைச் சொல்லப்படுகிறது. திருவண்ணாமலை குகை நமசிவாயரின் சீடர் குருநமசிவாயர் என்பது ஈண்டு நினைவுறற்பாலது.

முளைத்தவரை முனையிடத்தின் முழுத்தவரை
மகிழ்ந்தவரை முருகன் வேலால்
துளைத்தவரை யெனவெனது பழவினையையலைத்
தவரைச் சுடர்க்குன்றாகக்
கிளைத்தவரை வளைத்தவரை ஒருசிறுவன்
சிலையோடு கிளரச் சென்னி
வளைத்தவரை வணிகனுக்கு வழித்துணையாய்
நடந்தவரை வழுத்துவோமே.

—திருவிரிஞ்சைப்புராணம்.

பழனி—ஸ்ரீ பழனியாண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரிக்
கட்டிடக்கால்கோள் விழாவை
13—4—60-ல் அறநிலைய ஆணையர் நிகழ்த்திவைத்தல்

திரு அறையணிநல்லூர்

விரவுநீறுபொன் மார்பினில்
விளங்கப்பூசிய வேதியன்
உரவுநஞ்சமு தாகவுண்
டுறுதிபேணுவ தன்றியும்
அரவுநீள்சடைக் கண்ணியர்
அண்ணலார்அறை யணிநல்லூர்
பரவுவார் பழிநீங்கிடப்
பறையுந்தாஞ்செய்த பாவமே
— திருஞானசம்பந்தர்.

நடுநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் இருபத்திரண்டில் ஒன்று திருஅறையணியநல்லூர். இது தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ளது. திருக்கோவலூர் இருப்புப் பாதை நிலையத்திற்கு அண்மையில் தென் கிழக்கில் கால்கல் தொலைவிலுள்ளது. இவ்வூரை மக்கள் அறகண்ட நல்லூர் என வழங்குகின்றனர். தென் பெண்ணையாற்றின் வடகரையில் ஒரு சிறு குன்றின்மேல் கோயில் அமைந்திருக்கிறது,

ஆற்றை நோக்கித் தெற்கு வாயிலில் இராஜகோபுரம் அமைந்திருக்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. தென்மேற்கு மூலையில் பல்லவத் தூண்கள் நிறைந்த திருவிழா மண்டபம் இருக்கிறது. சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியும், அம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கியும் இருக்கின்றன. வெளிப் பிரகாரத்தில் அருணசலேசுவரர், அம்பிகை இவர்கள்சந்நிதிகள் இருக்கின்றன. மேற்குப் பிரகாரத்தில் ஒரு பீடத்தின்மேல் இரண்டு பாதங்கள் இருக்கின்றன. திருஞானசம்பந்தர் கோயிலை வலம் வரும்போது இவ்விடத்திலிருந்து திருவண்ணமலையைக் காட்டினார்களாம். உடனே "உண்ணுமுலை உமையாளொடும்" என்ற திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கிவிட்டார் என்று கூறப்படுகிறது. அந்த இரண்டு பாதங்களின் இடைவெளிவழியே பார்த்தால் திருவண்ணமலை நன்ருகத் தெரிகிறது.

இறைவன் திருப்பெயர்கள் ஒப்பிலா மணீசுவரர், அறையணிநாதேசுவரர் என்பன. வடமொழியில் அதுல்யநாதர் என்பர். இறைவியின் திருநாமங்கள் அழகிய பொன்னம்மை, அருள் நாயகி, சௌந்தரியகனகாம்பாள் என்பன. தலவிருட்சம் வில்வம் என்று கூறப்படுகிறது. தீர்த்தங்கள் தென் பெண்ணையாறு, பீமதீர்த்தம், சுனை தீர்த்தம் முதலியவை. கோயிலுக்கு வெளியில் பாறைகளின் நடுவே பீமதீர்த்தமும், சுனை தீர்த்தமும் இருக்கின்றன. தீர்த்தங்களுள்ள பாறைகளின்மேல் திரௌபதியம்மன், கங்கையம்மன் கோயில்கள் இருக்கின்றன.

கோயில் அமைந்திருக்கும் பாறையின் தென் கிழக்குப் பக்கத்தில் அடிப்புறம் ஐந்து அறைகளையுடைய குகைக்கோயில் அமைந்திருக்கிறது. இது பல்லவ மன்னர் காலத்தில் குடையப்பட்டது. இதற்குள் விநாயகரின் அழகிய உருவம் சுவரில் செதுக்கப்பட்டிருக்கிறது.

இத்தலத்திற்கு, திருஞானசம்பந்தர் பதினெரு பாடல்களையுடைய திருப்பதிகம் ஓதியுள்ளார். அதில்,

...... அண்ணலார்
அறையணி நல்லூர்
தலையினல்தொழு தோங்குவார்
நீங்குவார்தடு மாற்றமே"

"......அண்ணலார்
அறையணி நல்லூர்
பரவுவார்பழி நீங்கிடப் பறையுந்
தாஞ்செய்த பாவமே"

"......அண்ணலார்
அறையணிநல்லூர்
வாரமாய்நினைப்பார்கள்தம்
வல்வினையவை மாயுமே"

என்று அறையணிநாதரைத் தொழுவோர் அடையக்கூடிய பெரும்பயன்களைத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இக்கோயில் மிகப் பழைய கோயில். பல்லவர்காலக் குகையையும் சிற்பங்களையும் இங்கே காண்கிறோம். கோபுரம், கர்ப்பக் கிரகம், திருச்சுற்றுமாளிகைச் சுவர்களில் தமிழ்க்கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை, இராஜேந்திரசோழன், குலோத்துங்க சோழன், கோப்பெருஞ்சிங்கன், விக்கிரம பாண்டியன், விஜயநகர தேவராய மகா ராயன் முதலிய மன்னர்களின் காலத்தவை. பெருச்சாளிநல்லூரை ஆதிசண்டேசுவர ருக்குக் கொடுத்தது; இடங்கை வலங்கையார் களுக்கு நிலம் வழங்கியது; பெரும்பாடி காவல் என்ற ஊரைப் பட்டர்களுக்குத் தானம் செய்தது; வரிப்பணத்தைக் கோயி லுக்கு அளித்தது; பாண்டிய நாட்டினர் ஒருவர் கோயிலுக்குச் சில திருப்பணிகள் செய்தது; விளக்கெரிக்க நிலம் விட்டது; செம்பியன்மகாதேவியூரைக் கோயிலுக்குக் கொடுத்தது முதலிய பல அரிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. **திருஅறை யணிநல்லூர் — ஒப்பொருவருமில்லாத நாயனார்** என்று இறைவன் பெயரைக் கல்வெட்டுக் கள் குறிக்கின்றன.

பெண்ணையாற்றின் தென்கரையில் பாடல்பெற்ற பதிகளான திருக்கோவலூர் வீரட்டமும், திருவிக்கிரமப் பெருமாள் கோயிலும் திகழ்கின்றன.

தக்கனுர்பெரு வேள்வியைத்
தகர்த்துகந்தவன் தாழ்சடை
முக்கணுன்மறை பாடிய
முறைமையான்முனி வர்தொழ
அக்கினுடெழில் ஆமைபூண்
அண்ணலார்அறை யணிநல்லூர்
நக்கனுரவர் சார்வலால்
நல்குசார்விலோம் நாங்களே

— திருஞானசம்பந்தர்.

வேண்டுகோள்

தென் இந்தியாவைப்பற்றிய சரியான முழுச் சரித்திரம் எழுதுவதற்கு ஆதாரங்கள் இன்னும் தேவைப்படுகின்றன. சரித்திராசிரியர்களும் மற்றும் இத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும் தங்களுக்கு உதவக்கூடிய ஆதாரங்களைப்பெறுவதற்கு ஆர்வமுள்ளவர் களாக இருக்கின்றனர். ஆகமச்சுவடிகளும் பலரிடம் இருக்கலாம். இத்துறையில் ஓலைச் சுவடிகள், செப்பேடுகள், கை ஏட்டுப்பிரதிகள், முதலியன பெரும் மதிப்பு வாய்ந்தனவாகும். பழம் பெருந்தனக்காரர்களின் குடும்பத்தைச்சார்ந்த சந்ததியார்களிடத்திலும், மதநிறுவனங் களிடத்திலும், பிற பலரிடத்தும் இவ்வாதாரங்கள் இருக்கக்கூடும். அவைகளை வைத்திருப் பவர்களின் அறியாமையினுலும், கொடுப்பதற்கு விருப்பமின்மையினுலும் அவைகள் சரியானபடி பயன்படுத்தப்படவில்லை. அவைகள் ஆராய்ச்சியாளர்களுக்கும் சரித்திராசிரி யர்களுக்கும் கிடைக்கப்பெறுமாயின் நல்ல விதத்தில் பயன்படுத்த இயலும். அழிந்து போகக்கூடிய இவ்வாதாரங்கள் அச்சிடப்பட்டு நிலைத்து இருக்கும்படி செய்யலாம். இம் மாதிரியான சரித்திரசம்பந்தமான ஆதாரங்களை வைத்திருப்பவர்கள் சரித்திர ஆதார வட்ட ஆராய்ச்சிக் குழு அமைப்பாளர் (திரு. டி. பாலகிருஷ்ணநாயர், எம்.ஏ. (இலண்டன்), அரசினர் கல்லூரி, சென்னை (Presidency College, Madras) அவர்களுக்கு அல்லது திருக்கோயில் ஆசிரியருக்குத் தெரிவிக்கலாம். இவ்விதம் செய்வது அவைகளை அழிவின்றித் தவிர்க்கவும், பயன்படுத்தவும், வெளியிடவும் ஏதுவாக இருக்கும். இம்மாதிரியான ஓலைச் சுவடிகள் முதலியன எங்கு யாரிடமிருக்கின்றன என்ற தகவலும் பெரிதும் வரவேற்கப் படும்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்

[திரு. C. J. அமலநாதன், M. A.,]

அறிஞர்களையும், அனுபூதிமான்களையும் அருளியவை கன்னித்தமிழ் நாடும் வான் புகழ் வங்காளமும். தண்டமிழ் நாட்டில் ஆழ்வார்கள் தோன்றி வைணவத்தைக் காத்தவாறே வங்கநாட்டிலும் சைதன்ய மகாபிரபு தோன்றி வைணவ நெறியினை வையக முழுமையும் பின்பற்றப் பெரிதும் பாடுபட்ட பெருமகனுவார்.

பிறப்பு

கி. பி. 1486-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் தேதி (சக 1407—பங்குனி 23) வங்கத்திலுள்ள நவதீபத்தில், புரந்தர மிஸ்ரர், சசிதேவி என்பாருக்குப் பத்தாவது மகனுக அவதரித்தார். அவர் தம் தாய் சிறந்த சோதிடர் மகளானதால் சோதிடம் பார்த்து இவருடைய எதிர்காலம் ஏற்றமானதென்பதை எவருமின்புற எடுத்துரைத்தார். மேலும் சைதன்யரின் பாதங்களில் ஆத்மீகத் துறையில் ஆற்றல் மிக்காருக்கு இருக்கவேண்டிய அங்க அடையாளங்களான கொடி, மின்னல், சங்கு, மீன் ஆகியவை இருந்ததாகக் கூறினர். பொன் போன்ற வண்ணத்துடன் திகழ்ந்த காரணத்தால் கௌரா என்னும் பெயர் பெற்ருர். பில்லி, சூன்யம், துர்தேவதை முதலியவற்றிலிருந்து இவரைக்காப்பான் வேண்டி ஸ்ரீ அத்வைதரின் மனைவியான சீதாதேவி சைதன்யருக்கு நிமாய் என்றே பெயரிட்டழைத்தார். அவர் துறவு கொள்ளும்வரை இந்தப் பெயரையே வழங்கி வந்தனர்.

குழந்தைப் பருவம்

விளையும் பயிர் முளையிலே தெரியும் எனுமாபோல, சுறு சுறுப்புடனும், துறுதுறு என்று எதையாவது செய்கின்ற தன்மையராயிருந்தார். அக்காலத்தில் நாமகரணம் செய்யுங்கால், குழந்தையின் முன்பு புத்தகம், நெல், சாதம், கறி, தங்கம், வெள்ளி முதலியவை வைத்தல் மரபு. அஞ்ஞான்று அக் குழந்தை எதை எடுக்கிறதோ அதனை ஒட்டி அதன் எதிர்காலமிருக்குமென்பர். நிமாயியான குழந்தை ஆண்டு வைத்திருந்த ஸ்ரீமத் பாகவதத்தையே கையில் எடுத்தது. அவணிருந்த அந்தணப் பெரியாரனைவரும் இக் குழந்தை எதிர்காலத்தில், ஆத்மீகத் துறையில் ஆற்றல் படைத்ததாயிருக்குமென்றனர். பின்னர் அட்சரங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அதிலுள்ளவாறே பிழையேதுமின்றிக் கூறக் கேட்ட பெரியோரனைவரும் பெருவியப்பிலாழ்ந்தனர் எனில் அவர் தம் அறிவாற்றல் என்னென்றுரைப்பது!

நிமாயின் தாய் சஸ்ட்டி தேவதையை வணங்க எடுத்துச் சென்ற பிரசாதத்தை நிமாயி தட்டில் பறித்து உண்டதைக் கண்டு மனம் வருந்தி கடிந்தனள். அதற்குப் பின்வருமாறு விடையளித்தார். "மரத்தின் வேருக்குத் தண்ணீர் ஊற்றுவதன் மூலம், கிளைகளும், இலைகளும் வளர்ச்சி பெறுவது போல, எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான விஷ்ணுவிடம் செலுத்தும் அன்பும், ஆராதனையும், மற்றத் தெய்வங்கட்குச் செய்தது போலாகும்" என்று வைணவத்தின் தலையாய கொள்கையைத் தாய்க்குக் கூறினர். வைணவத்தின் அவசியமும், அடிப்படையுமான ஏகாதசி விரதத்தைப் பின்பற்றும்படி தாயை வேண்டினர் என்ருல் அவருடைய வைணவ மதப்பற்று அச்சிறு வயது முதலே இருந்தது என்பதற்கு சான்று வேறு வேண்டுமோ? அஃதோடல்லாது குழந்தைப் பருவத்தில் அழுதால், அரி, அரி என்ற நாமத்தைக் கேட்டவுடன் அழுகை நின்றுவிடும் எனில் அளப்பரிய அன்பை அரியின்மீது வைத்திருந்தார் என்பது அறியப் பெறுகிறது.

இவர் 5 அல்லது 6 வயது குழந்தையாகயிருக்குங்கால், அவருடைய தாயார் இனிப் புப்பண்டம் வழங்கினர். நிமாயி அதனை உண்ணுமல், மண்ணை உண்டார். அது கண்டு வருந்திய அன்னைக்கு, மனம் மாறுபாடு அன்றி பொருள்களுக்கு வேறுபாடு இல்லை என்று விளக்கி விவரித்தார்.

ஒருநாள் அந்தணத்துறவி ஒருவர் அதிதியாக வந்திருந்தார். அவர் பொருட்டு வைத்திருந்த சோற்றை மும்முறை நிமாயி எடுத்து உண்டுவிட்டார். "பாலகிருஷ்ணனின் நிவேதனத்துக்காக வைத்திருந்த உணவாயிற்றே" என்று சந்நியாசி வினவியதற்கு "நானேபால கிருஷ்ணன்" என்றுரைத்து, சந்நியாசிக்குத் தம் மெய்யுருவைக் காட்டினார் நிமாயி.

நிமாயியின் அண்ணன் இயற்கையில் துறவு மனத்துடன் பாகவதத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டதாலும், இளம் வயதிலேயே துறவு பூண்டார். இதனைக் கண்ட இவர் தம்பெற்றோர்கள் நிமாயியும் சாத்திரம் படித்தால் துறவு கொள்வானோ என அஞ்சி அதைப் பயில்வதை நிறுத்தினர். இதனைக் கண்டு நிமாயி மனம்வெகுண்டு அசுத்தமான இடத்தில் போய் அமர்ந்து இல்லம்வர இயலாதெனக் கூறினார். அதனால் பெற்றோர் நிமாயின் விருப்பப்படியே சாத்திரம் படிக்க ஒப்புக்கொண்டனர்.

கங்காதாசர் கல்லூரியில் பயின்ற ஞான்றே கல்பவியாகரணம் என்ற நூலுக்கு உரை கண்டார். இந்நூல் வங்காளம் முழுமைக்கும் இன்றும் பாட புத்தகமாக, வைக்கப்பட்டிருக்கிறதென்றால், இதன் பெருமையை நவில்தற்கியலுமோ? திடீரென நிமாயின் தந்தையின் மறைவு ஏற்பட்டது. மனம் வருந்தி, தாய்க்கு ஆறுதல் கூறினார். பின்னர் குடும்பப் பொறுப்பை இவர் ஏற்கவேண்டியிருந்ததால், வருவாயின் காரணமாக மாணவர்கட்குக் கல்வி கற்பித்தும்,இலக்கியப் புத்தகம் வரைந்தும், பொருளீட்டலானார். நாராயணனை நம்பியே குடும்ப பாரத்தை ஏற்று, எளிய வாழ்வை இனிதே நடாத்தி வரலானார். இவரே ஒரு கல்லூரி தோற்றுவித்து ஆயிரக் கணக்கில் மாணவர்கட்குப் பாடம் பயிற்றுவித்தார். இதனை அறிஞர் பலரும் பாராட்டினர்.

திருமணம்

தக்க பருவம் வந்ததும், இல்லத்தருகில் வதிந்த வல்லபாசாரியார் என்பாரின் மகளான இலக்குமிதேவிமீது காதல் கொண்டு, மனம்போல மணவினையை மகிழ்ச்சியுடன் முடித்துக்கொண்டார். அக்கால அறிஞருடன் அடிக்கடி அளவளாவி அகமகிழ்வார். ஈசுவரபூரி யாத்த கிருஷ்ணலீலாம்ருதம் என்ற நூலில் பிழையுளதெனச் சிலர் கூற அதனை நிமாயி மறுத்து பிழையற்றது என்றுரைத்தும், பிழை கூறல் பாவம் எனவும் கூறினர்.

திக்விஜயியை வெல்லுதல்

இந்தியாவிலேயே மிகச்சிறந்த அறிவாளியான காஷ்மீர் பண்டிதர் கேசவபட்டர் பற்பல பாகங்களில் பலரைவென்று நிமாயின் ஊரான நவத்வீபத்திற்கு வந்தார். ஆண்டிருந்த அறிஞர் பலர் கேசவபட்டரைக் கண்டு அஞ்சினர். அறிவாற்றல் படைத்த நிமாயி, கேசவப்பட்டருடன் வாதிட்டு அவரை வென்றார். ஆனாலும் பட்டரின் பாண்டித்தியத்தைப் பாராட்டாமலில்லை. "அறிவின் குறிக்கோள் உலகை வெல்வதல்ல; அறிவைக்கொண்டு ஆண்டவனைப் பணியும்போதுதான் அது நிறைவைப் பெறுகிறது" என்றும், "மாயனை மனமாற மனத்தகத்தே வழிபடல் வேண்டும்" என்றும் பட்டருக்குக் கூறினார். பட்டரை வென்றது முதல் பாரத தேச முழுமையும் பட்டரை வென்ற பாவலர் என்று நிமாயின் புகழ் பரவா நின்றது.

நிமாயியும், பத்திராசல இராமதாசர் போன்றே, விருந்தோம்பி, பொருளனைத்தையும் இழந்தார்."வீட்டுக்கு வந்த விருந்தினரை ஓம்பி அன்னமளிக்காதவன், உணர்ச்சியற்ற மிருகத்தைவிடக் கேவலமானவன் என்றே கருதுவேன்" என்று நிமாயி அடிக்கடி சொல்வதுண்டு. தொடர்ந்து தான, தர்மம் செய்யத் தேவையான செல்வத்தைத் தேட,கிழக்கு வங்காளம் சென்றார்.

கிழக்கு வங்காளத்தில் நிமாயி

இருபதாவது வயதில் கிழக்கு வங்காளம் சென்றார். மாணவர்களும், நிதி மிகப் படைத்தோரும், அடியாரும், அன்புடன் வரவேற்று, பெருஞ் செல்வத்தைக் கொடுத்தனுப்பினர். நிமாயியின் பிரிவாற்றாமையால் அவர் மனைவி இலக்குமிதேவி இறைவன் இணையடி எய்தினர். இதனை நிமாயி அறியார். இல்லம் திரும்பியதும் இதனையறிந்து பெரிதும் மனம் வருந்தினர். அடுத்து இலக்குமிதேவிக்கு இளையவளான விஷ்ணுப்பிரியையே இரண்டாவது முறையாக மணமுடித்துக்கொண்

டார். பின்னர் தொடர்ந்து கல்லூரியை நடத்தினர். மாணவர்கள் நெற்றியில் திலக மிடுமாறு கட்டளையிட்டார்.

கயை யாத்திரை

தந்தை, மூதாதையர், ஆகியோருக்குப் பிண்டம் அளித்து கர்மம் செய்ய கயைக் குச் சென்றார். அவர் வந்து சென்ற இடத் தில் முதன் முதலாக அவருடைய பாத அடை யாளங்களையும், ஸ்ரீ சைதன்ய மடத்தையும், கௌடியா மடத்தையும், பிரபுபாத ஸ்ரீபக்தி சித்தாந்த சரஸ்வதி டாகுர் நிறுவினர்.

கயையில் உபதேசம்

ஈஸ்வரபூரி என்பாரிடம் உபதேசம் பெற்றார். "உடனே இல்லம் திரும்புக" என்று அசரீரி கூறியது. அதற்கேற்ப இல் லம் திரும்புகையில் பீகாரிலுள்ள கனய்நட் சாலாவில் எழுந்தருளியுள்ள கிருஷ்ணன் கோயிலில் மாயக்குழலை இசைத்துக்கொண் டிருக்கும் பாலகிருஷ்ணனின் தரிசனத்தைக் கண்டார். நவத்வீபத்திற்கு முற்றும் புதிய மனிதராக வந்து சேர்ந்தார்.

பக்தி பரவசம்

எந்நேரமும் நாராயணன் நாமத்தை நவிற்றியதால், நிமாயியின் இல்லத்தவர் இவ ருக்குக் குணக்கோளாறு என எண்ணிப் பின் உண்மையை உணர்ந்தனர். கல்லூரியில் மத போதனையை மாணவர்கள் உற்சாகத்துடன் ஏற்க மறுத்ததால் கல்லூரியை மூட நேரிட் டது. அடியார் தொண்டே ஆண்டவன் தொண்டென எண்ணி ஸ்ரீவாசர், அத்வைதர் ஆகியோருக்கு எல்லா பணிவிடைகளையும் செய்தார். இப்படி செய்ததால் "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற தற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார் என லாம். பக்தர்கட்கு மச்ச, கூர்ம, நரசிம்ம அவதாரங்களைக் காட்டினர். நிமாயி துறவு பூண எண்ணியதைக் குறித்து ஊராரனை வரும் வருந்தினர். அன்னை சசிதேவிக்கு ஆறுதல் கூறினர்.

துறவும் பூரி யாத்திரையும்

துறவின் காரணமாகப் பூரிக்குப் புறப் படுகையில், நிமாயியின் மனைவி விஷ்ணுப் பிரியை வருந்த, "கண்ணனையே தெய்வமாகக் கருதித் துதி செய்" என்றியம்பிச் சென்றார். இவருடைய துறவு நிலை பின்னர் வைணவ இயக்கத்திற்குப் பெரிய வெற்றியைத்தந்தது. சக 1432 மாசி மாதம் வளர்பிறை உத்தரா யண புண்ணிய தினத்தன்று கேசவ பாரதி என்பாரிடம் சந்நியாசம் பெற்றார். தாயின் கட்டளைக்கிணங்க பூரியில் தங்கினர். சிவன் கோயிலையும், சாட்சி கோபாலரையும் வணங்கிப் பூரியை அடைந்தார், பூரி ஜகந் நாதரை வணங்கிப் பெரிதும் மகிழ்ந்தார்.

கிருஷ்ண சைதன்யர்

சார்வபௌமரின் சித்தாந்த மாற்றம்

அக்காலத்தில் இந்தியாவின் கிழக்குப் பாகத்தில் மாயாவாதத்தைப் பின்பற்றும்

அறிஞர்களிலே மிகவும் சிறந்தவராக விளங்கியவர் சார்வ பௌமர். சைதன்யரை சார்வ பௌமர் மாயாவாத கொள்கைக்குத்திருப்ப எண்ணிப் பல்வேறு வாதங்களை நடத்தித் தோற்றார். ஸ்ரீ சங்கரரின் சித்தாந்தத்தை ஏற்கப் பல்வேறு காரணங்களைக் காட்டி மறுத்தார் சைதன்யர். அதே நேரத்தில் ஸ்ரீ சங்கரரிடம் எவ்வித குறைபாடையும் காணாது, அவரைச் சிறந்த ஆசாரிய புருடராகவே மதித்தார். சார்வர் சித்தாந்த மாற்றம் ஒரிஸ்ஸாவில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதற்கும் சைதன்யர் இயக்கத்திற்குப் பெரிதும் வெற்றியைத்தந்தது. சித்தாந்தத்தினைப் பின்பற்றி சார்வபௌமர், முக்தி என்ற சொல்லைக் கூறப்பயந்து பக்தி என்றே சொல்வாரெனில் அவருடைய சித்தாந்தத்தின் பற்றை எவ்வாறெடுத்தியம்புவது? சார்வபௌமர் வைணவத்தை ஏற்ற பிறகு மக்களனைவரும் சைதன்யரைக் கிருஷ்ணபகவானாகக் கருதத் தொடங்கினர். ஒரிஸ்ஸாவின் இராஜகுரு காசிமிஸ்ரரும் இன்னும் பூரியிலிருந்த பலரும் சைதன்யரைத் தஞ்சமடைந்தனர்.

தென்னிந்திய யாத்திரை

சந்நியாசம் பெற்ற ஒரு மாதத்தில் (பங்குனியில்) பூரி அடைந்தார். சித்திரையில் வாதாடி வென்றார். வைகாசியில் தென்னிந்தியா வந்தார். கிருஷ்ணதாசர் அவர் உடன் வந்தார். கி. பி. 1510-ல் புறப்பட்டு இன்றைய ஆந்திர மாகாணத்திலுள்ள ஸ்ரீகாகுளத்திலுள்ள கூர்மாசலத்தில் ஸ்ரீ ராமாநுஜர் எழுந்தருள்வித்த கூர்மதேவரை வணங்கினார். ஈண்டு பாகவதத்தில் சிறந்த பண்டிதரும் தொழுநோயருமான வாசுதேவர் சைதன்யரைக் காணவந்த காலத்து அருகிலிருந்தோர் அருவருப்பால் சற்று விலகினர். சைதன்யர் வாசுதேவரை ஆலிங்கனம்செய்ய, வாசுதேவர் தொழுநோய் நீங்கியது. பின்னர் சைதன்யர், வாசுதேவாம்ருதர் என்றழைக்கப்பட்டார். சிம்மாசலம், ஸ்ரீசைலம், அஹோபிலம், சித்தவட்டம், திருப்பதி ஆகிய திருத்தலங்களைத் தரிசித்து விட்டு, காளத்தியைக் கண்டு களித்துவிட்டு அலைமகளும், கலைமகளும், மலைமகளும் வழிப்பட்ட காஞ்சியம் பதியை அடைந்தார். திருக்கழுக்குன்றம், விருத்தாசலம் முதலியவற்றைப் பார்த்துப் பரவசமடைந்தார். தமிழ் நாட்டின் இப்பகுதியில் தான் வாதிட்டுப் பலரைவென்று வைணவத்தைப் பின்பற்றச் செய்தார்.

சிதம்பரம், சீர்காழி, வேதவனம், தஞ்சை, கும்பகோணம், பாவநாசம், முதலிய சிவதலங்களைத் தரிசித்து, அவணிருந்த சைவர் பலரை வைணவராக்கினார்.

பின்னர் பொன்னிசூழ் அரங்கனுள்ள இடமான ஸ்ரீரங்கத்தை வந்தடைந்து நான்கு மாதம் தங்கியிருந்தார். இந்தியாவில் உள்ள கோயில்களிலேயே செல்வச் சிறப்பும், புகழும் வாய்ந்த ஸ்ரீரங்கநாதர் எனப் புகழ்ந்தார். அடுத்து திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, காளையார் கோயில், தர்ப்பசயனம், இராமேசுவரம், திருநெல்வேலி, தென்காசி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, நாகர்கோயில், குற்றாலம், கன்யாகுமரி, ஆகிய தலங்களிலுள்ள தீர்த்தங்களில் நீராடி, மூர்த்திகளை வணங்கி வந்தார். திருவாங்கூர், திருவனந்தபுரம், மைசூர் முதலிய ஊர்களிலுள்ள ஆலயங்களையும் தரிசித்தார். தென் இந்தியாவில் இரண்டாண்டுகளுக்கு மேலாக யாத்திரை செய்தார்.

வட இந்திய யாத்திரை

வங்காளம் சென்று அன்னையையும், கங்கையையும் தரிசித்தார். ஒரிஸ்ஸா இராச்சியத்தின் நவாப் ஒற்றன் மூலம் சைதன்யரின் பெருமையை உணர்ந்து அவனும் அவரைப் பின்பற்றலானான். காசி சென்று காசி விசுவநாதரை வணங்கினார். அலகாபாத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற உபந்நியாசம் நிகழ்த்தினார். ரூபசநாதனருக்கு உபதேசம் செய்தார். காசியிலிருந்த மாயாவாதிகளை மாற்றினார். சைதன்ய இயக்கத்திற்குப் பெரிதும் உழைத்த அடியார் பலராவாரெனில், அந்த இயக்கம் எந்த அளவில் இயங்கியதென உணர்தற்கியலும். அற்புதங்கள் பல நிகழ்த்தியவர். ஆத்மீகத்துறையில் ஆற்றல் மிகப் படைத்தவர்.

சக ஆண்டு 1455-ல் தனது 45 வயதில் சைதன்யர் மறைந்தார். சைதன்யர் பக்தி நெறியையே சிறப்பாகக் கொண்டார். அவர் சொல், செயல், இயக்கம் இவைகளில் பக்தி ஊடுருவியிருந்தது. ஆண்டவனிடம் அன்பு

கலந்த சேவை செய்வதே பக்தியாகும். மாயையின் தொடர்பைவிட்டு ஒருமித்த மனத்துடன் ஐம்புலன்களின் அதிபதியிடம் ஆசையைச் செலுத்துவதே பக்தி என்று நாரத பாஞ்சராத்திரம் பக்திக்கு இலக்கணம் கூறியிருக்கிறது. பக்தியே ஒரு சாதனமாகவும் பயனாகவும் அமைந்துள்ளது. பக்தி உச்ச நிலையையடையும்போது பிரேமையாகிறது. முத்தி நிலை எய்திய பின்னும்கூட பக்தி செயலற்று விடுவதில்லை. அதன் முன்னோக்கமும் இறைவனையடையும் இன்பமே. பிரேமை வேறு: காமம் வேறு. ஒன்று தங்கம்; மற்றொன்று இரும்பு. பக்தி, துன்பங்களை அழிக்கும்; நன்மைகளைத்தரும்; ஆனந்தத்திற்கு உறைவிடம்; கண்ணனைக் கவரும் பண்புடையது. கௌடிய வைணவர்களின் பக்திக் குறிக்கோளுக்குரிய தெய்வம் கோபால கிருஷ்ணன். ஆதலின் கிருஷ்ண வழிபாட்டையே சிறந்ததாகக் கருதினார்கள். இவ்வழிபாட்டில் நம் நாடு முழுவதுமுள்ள மக்களின் மனதைப்பதியவைத்த சான்றோர் ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகாப் பிரபுவே ஆவர்.

திருவாரூர்த் தெப்பவிழா

சில ஆண்டுகளாக திருவாரூரில் தெப்பவிழா நின்றிருந்தது. இவ்வாண்டு, சுமார் ரூ. 50,000 செலவில் கட்டப்பெற்ற தெப்பத்தை 2-5-60-ல் கமலாலயத்தில் அறநிலைய அமைச்சர் கனம். M. பக்தவத்சலம் அவர்களால் இயக்கிவைக்கப்பெறுகிறது. 3-5-60, 4-5-60 நாட்களிலும் தெப்பவிழா தொடர்ந்து நடைபெறும். பெரும்பொருட் செலவில் கமலாலயத்திருக்குளம் சென்ற ஆண்டில் புதுப்பிக்கப்பெற்றது எல்லோருக்கும் நினைவிருக்கலாம்,

உருமாறிப் பிறப்பென்னும் கடல்வீழ்ந்து கரைகாணு துழலு மாக்கள்
கருமாறி அருட்தெப்பம் தனிலேற்றி முத்தியதாம் கரையிலேற்றி
பெருமான்தாம் என்பதனை உலகுணர்த்த ஆண்டுதொறும் பிறங்கும் தெப்பத்
திருநாளைக் கொண்டசெயல் கண்டுணர்ந்து வாழ்மின்கள் சிறந்துநாளும்.

மங்கலஞ்செய் திருவாரூர் தெப்பமெனும் திருநாளை மகிழ்ந்து காண்போர்
பொங்கு நல்ல புதல்வருடன் பொருள் பெற்றுக் கல்வியதும் பொருந்தப் பெற்றுத்
தங்குநல்ல நன்மையெலாம் தாம்பெற்றே பல்லாண்டு தரணி வாழ்ந்து
திங்களணி பெருமான்தன் திருவடியிற் சேர்ந்தென்றும் திகழ்வ ரன்றே.

[வரலாற்றுச் செல்வர், திருச்சிராப்பள்ளி திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் மூலம் கிடைத்த பழம்பாடல்கள்]

திருநாராயணபுரம்: வேதநாராயணப் பெருமாள் கோயிலில் 27-2-60ல் ஸ்ரீஹனுமத் ஜெயந்தி அன்று ஸ்ரீஆஞ்சநேயருக்குப் புதிதாகக் கட்டப்பட்ட மண்டபத்திற்கு சம்புரோட்சணை நடைபெற்றது. 28-2-60 முதல் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு பிரதிதினமும் மண்டலாபிஷேகம் ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளும் நடந்து 15-4-60ல் முடிவுபெற்றது.

பெண்ணாகடம்: பிரளயகாலேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 30-4-60ல் தொடங்கி, 11-5-60 வரை நடைபெறும்.

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

20-3-60	கடம்பர்கோயில் : கடம்பவனீசுவரர் கோயில்.	அருணகிரிநாதர் சிலை நிறுவுதல், திருமுறைக்கோயில் நிறுவுதல், தேவாரம், திருப்புகழ், கல்வெட்டுத் திறப்புவிழா. திருப்பணிக் கால்கோல் விழா.
	கால்கோள் விழாவில் வெள்ளிக்கரணை ரூ. 161க்கு திரு. சண்முகம் பிள்ளை அவர்களால் ஏலத்தில் எடுக்கப்பட்டது.	
,,	சிவாயம்; இரத்தினகிரீசுவரர் கோயில்.	திருமுறைக்கோயில் நிறுவுதல், தேவாரக் கல்வெட்டுத் திறப்புவிழா.
,,	ஈங்கோய்மலை : மரகதசோளீசுவரர் கோயில்.	திருமுறைக்கோயில் நிறுவுதல்.
21-3-60	திருகாம்புலியூர் : மதுக்கரை, செல்லாண்டியம்மன் கோயில்.	ஆலயத்திருப்பணிக் கால்கோள்விழா.
	கால்கோல் விழாவில் வெள்ளிக்கரணை ரூ. 251க்கு திரு. பெரியசாமி பிள்ளை என்பவரால் ஏலத்தில் எடுக்கப்பட்டது.	
23-3-60	மன்னார்குடி : இராசகோபால்சுவாமி கோயில்.	இராசகோபுரத் திருப்பணிக் கால்கோள் விழா.
29-3-60	பென்னாரி : மாரியம்மன்கோயில்	திருத்தலஞ் சுற்றுவோர்களுக்காக மூன்று நீர்நிலைத் திறப்புவிழா. ஆலயப்பணியாளர் விடுதி திறப்புவிழா.
4-4-60	திருமழபாடி : வைத்தியநாதசுவாமி கோயில்.	பதிகத்திறப்பு விழாவும், திருமுறைக் கோயில் நிறுவுதலும்.
5-4-60	கீழப்பழுவூர் : ஆலந்துறையார் கோயில்.	பதிகத்திறப்பு விழாவும் திருமுறைக் கோயில் நிறுவுதலும்.
,,	கீழப்பழுவூர் : சீனிவாசப்பெருமாள் கோயில்.	ஆலயத்திருப்பணிச் கால்கோள்விழா.
	திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களால் வெள்ளிக்கரணை ரூ. 3,511-க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் ரூ. 111- நன்கொடை யளித்தார்கள்.	
9-4-60	திருவெண்காடு : சுவேதாரண்யீசுவரர் கோயில்.	72, உற்சவநாயன்மார்கள் பிரதிஷ்டையும் ஊர்வலமும். சிவபிரகாசம்பிள்ளை அவர்களின் குறிப்புகளைக்கொண்ட சிவஞானபோதம் நூல் வெளியிடுதல்.
10-4-60	திருவிடைமருதூர் : மகாலிங்க சுவாமிகோயில்.	உற்சவசிலை நிறுவுதல் விழாவும் நடராஜரைப்பற்றிய நூல் வெளியீடு விழாவும்.
,,	வயலூர் : சுப்பிரமணியசாமி கோயில்.	குடிதண்ணீர்க் குழாய்த் திறப்புவிழா.
13-4-60	பழநி : தண்டாயுதபாணிசுவாமி கோயில்.	கீழ்த்திசைக் கலைக்கல்லூரிக் கட்டிடக் கால்கோள் விழா.
,,	திருப்புடைமருதூர் : நாறும்பூநாத சுவாமி கோயில்.	இலட்சதீபம், ஈசான்யவிநாயகர் கோயில் திருப்பணிக் கால்கோள் விழா. அப்பர் நந்தவனத் திறப்புவிழா.

ஆரம்பூண்டான்

[வித்துவான் K. M. வேங்கடராமையா, M.A., B.O.L., திருப்பனந்தாள்]

திருவானைக்கா தலச்சிறப்பு

திருவானைக்கா, திருநெறிய மெய்ஞ் ஞானத் தமிழ் அருளிய **சம்பந்தர் அப்பர் சுந்தரர்** ஆகிய மூவராலும் தேவாரம் அருளப் பெற்ற சிறப்பினை யுடையது; ஐம்பூதத்தலங் களுள் அப்புத்தலமாக விளங்குவது; யானை பூசித்துப் பேறு பெற்றமையால் **திருவானைக்கா** என்றும், இறைவன் வெண்ணாவல் (ஜம்பு) மரத்தின்கீழ் எழுந்தருளி யுள்ளமையால் **ஜம்புகேசுவரம்** என்றும், இறைவி தவஞ் செய்து ஞானோபதேசம் பெற்றமையால் **ஞானஸ்தலம்** என்றும் பெயர்களை யுடையது; காவிரி, இந்திர தீர்த்தம், சந்திர தீர்த்தம் முதலிய தீர்த்தங்களையுடையது; முற்பிறப்பில் சிலந்தியாயிருந்து வழிபட்ட புண்ணியப்பல னால் அரசனாகப் பிறந்த **கோச்செங்கட் சோழர்** கட்டிய கற்றளிகளையுடையது; ஐந்து மதில் களுள், இறைவர் சித்தராய் எழுந்தருளித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்து எடுப் பித்த காரணத்தால் **திருநீற்றுமதில்** எனும் பெயர்கொண்ட மதிலையுடையது; இறைவர் நீர்த்திரளில் எழுந்தருளியுள்ளமையால் **நீர்த் திரள் நாதர்** என்று வழங்கப் பெறுகிறார். பரமன் **ஆரம்பூண்ட அற்புதம்** இத்தலத்தில் நிகழ்ந்தது.

ஆரம்பூண்டான்

உறையூரின்கண் இருந்து ஆண்ட சோழ வரசர் ஒருவர் மணியாரம் அணிந்துகொண்ட படியே காவிரியில் நீராடினார்; மணியாரம் காவிரி நீரில் தவறி வீழ்ந்தது. அரசர், 'சிவ பெருமானே! இம்மணியாரத்தைக் கொண்ட ருளும்' என்று வேண்டினர். உடனே அம் மணியாரம் திருமஞ்சனக் குடத்துள்ளே புகுந்தது; திருவானைக்கா எம்பெருமாற்குத் திருமஞ்சனம் ஆட்டியபொழுது அந்த ஆரம் சிவபெருமான் திருக்கழுத்தில் விழுந்து அணி செய்தது. இங்ஙனம் சிவபெருமான் திருவா னைக்காவில் ஆரம்பூண்டவராயினர். இவ்வற் புதத்தைச் சம்பந்தர்,

"பாரும் விண்ணும் கைதொழப்
பாயுங் கங்கை செஞ்சடை
ஆர நீரோ டேந்தினுன்
ஆனைக் காவு சேர்மினே"

என்று குறித்துள்ளார். சுந்தரர் இதனைச் சிறிது விரிவாகவே பின்வருமாறு பாடியுள் ளார்:—

தார மாகிய பொன்னித்
தண்டுறை ஆடி விழுத்தும்
நீரில் நின்றடி போற்றி
நின்மல கொள்என ஆங்கே
ஆரங் கொண்டஎம் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும்
எம்மையும் ஆளுடை யாரே.

இங்ஙனம் ஆரம்கொண்டமையின் இத்தலத் துச் சுவாமிக்கு **'ஆரங்கொண்ட பெருமான்'** என்ற பெயர் வழங்கலாயிற்று என்றறி கிறோம்.

ஆரம்பூண்டான் என்ற பெயரைத் திரு வானைக்காவில் இடைக்காலத்துத் தமிழ்ப் பெருமக்கள் இயற்பெயராகவோ சிறப்புப் பெயராகவோ தரித்திருந்தனர். 'ஆரம்பூண் டான்' என்று மேலே சம்பந்தரும் சுந்தரரும் குறித்த அற்புதச் செயலையே நினைப்பூட்டு கிறது; ஆகலின் இவ்வரலாற்றைக் குறிப்பதா கவே இப்பெயர் அமைந்தது எனக் கோடல் பொருந்தும். திருவானைக்காவில் காணப் பெறும் கல்லெழுத்துக்களில் மூன்றனுள் இப்பெயர் காணப்பெறுகிறது.

கல்லெழுத்துக்களில்

"தேர்போல்" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி, பாண்டிய அரசருள் ஒருவராகிய குலசேகரபாண்டியருடையதாகும். குலசேகரபாண்டியன் கி. பி. 1268 முதல் கி. பி. 1311 வரையில் அரசாண்டவர்; இவ்வரசர் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியதேவரின் மகனவர். இவரும் 'எம்மண்டலமும் கொண்டருளிய' என்ற சிறப்புப் பெயர் பூண்டவர். இவரது 10வது ஆட்சியாண்டுக் கல்லெழுத்துத் திருவானைக்காவில் உள்ளது. இக்கல்வெட்டு* ஒரு நிலவிலைப்பிரமாண இசைவுத்தீட்டு. இதில் கைவெப்பமிட்டவர்களுள் ஒருவர், "கோயில் கணக்கு சிற்றூமூர் உடையார் ஆரம்பூண்டான் திருவானைக்காப்பிரியன்" என்பவர் ஆவர். 158339

ஷை கோயிலில் போசள வீரராமநாதனது கல்வெட்டொன்று† காணப்பெறுகின்றது. வீரராமநாதன், எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியனுக்குக் கப்பஞ்செலுத்திக்கொண்டு சோணாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தவராவர். § இக்கல்வெட்டும் ஒரு நிலவிலைப் பிரமாண இசைவுத் தீட்டு. இதில் கையொப்பம் இட்டவர்களுள் ஒருவர், "கோயிற் கணக்கு சிற்றம்பருடையான் ஆரம்பூண்டான் திருவானைக்காப்பிரியன்" எனப் பெற்றார்.

---

* S. I. I. Vol IV. No. 426; A. R. No. 25 of 1891.

† S. I. I. Vol IV. No. 427; A. R. No. 26 of 1891.

§ திரு. ச. பண்டாரத்தார் - பாண்டியர் வரலாறு, பக்கம் 131.

மூன்றும் இராசராசசோழன் 1216 முதல் 1246 வரை அரசாண்ட சோழவரசனவர், இவரது 22-ம் ஆட்சியாண்டுக்கல்வெட்டொன்றும் *நிலவிலைப்பிரமாண இசைவுத் தீட்டுஆகும். நிலத்தை விற்றவர்களுள் ஒருவர் ஆரம்பூண்டான் என்ற பெயரை யுடையவர். இவர் கூத்தன் குன்றனான கிழாற்றூர் அரையனுக்குத் தம்பியாவர்; இவருடைய தம்பியின் பெயர் தாழி என்பது; ஆரம்பூண்டானும் தாழியும் சயிலை† ஆயினமைக்கு, இராஜேந்திர சோழமங்கலத்துக் காவற்காணியுடைய பெருமாள் அழகனான மணவாள முத்தரையன், இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

முடிப்புரை

எனவே சமயகுரவர்களால் குறிக்கப்பெற்றதாகிய 'இறைவன் ஆரம்பூண்ட வரலாறு' சமயத்தொண்டுபுரிந்தவர்களும் பொதுமக்களும் தம் பெயராகப் பூண்டு அவ்வற்புதச் செயலை நினைவுகூர்ந்து போற்றினார்கள் என்று அறிகிறோம். இதனாலும் சோழர் காலத்துத் தமிழ்ப் பெருமக்கள் சிவசரிதங்களுள் ஈடுபாடு உடையராயிருந்தமை நன்கு விளங்கும். இனி, ஷை கல்லெழுத்துக்களில் தேனுருங் கொன்றையன், என்னனைக் கன்றுபட்டன், ஆதிச்செல்வன் பண்டாரம், நல்ல நாமமுடையான், சிலந்தியைச்சோழனுக்கினன் திருத்தோப்பு முதலிய பெயர்கள் காணப்பெறுகின்றன.

---

* S. I. I. Vol VIII No. 340; A. R. No. 65 of 1903.

†சயிலை - கையெழுத்திடத் தெரியாதவர் என்று பொருள்படும் போலும்.

எட்டிகுடி: சுப்பிரமணியசுவாமி கோயிலில் சித்திரா பருவ உற்சவ விழா 29-4-60ல் தொடங்கி 14-5-60 வரை நடைபெறும். 1-5-60 முதல் 8-5-60 வரை சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறும்.

சென்னை: வடபழநி ஆண்டவர் கோயிலில் பங்குனி உத்திர இலட்சார்ச்சனை விழா 9-4-60 வரை நடைபெற்றது. ஒவ்வொருநாள் விழாவிலும் திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் மாணக்கரான திரு. ஏ. எஸ். இராசசேகரன் குழுவினரால் தேவார திருப்புகழ்ப் பாராயணம் நடைபெற்றது. தெப்பொற்சவம் 10-4-60 முதல் 12-4-60 வரை நடைபெற்றது. கனம் மந்திரி திரு. ஆர். வெங்கட்டராமன், நீதிபதி திரு. ஜெகதீச ஐயர், திரு. டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், திரு. பி. டி. இராஜன், அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., முதலியவர்கள் கலந்துகொண்டார்கள்.

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments
(Administration) Department, Madras-6.

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவெம்பாவை

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடலோர் எம்பாவாய்

[எந்தப் பொருள்களுக்கும் முதலும் முடிவுமாக உள்ள நின்திருவடிகள் எங்களைக் காத்தருள்க. எல்லா உயிர்கள் தோன்றுதற்கும், போகம்நுகர்வதற்கும், ஒடுங்குவதற்கும் காரணமாக இருக்கும் திருப்பாதங்கள் எங்களைக் காத்தருள்வதாக. திருமாலும் அயனும் காணமுடியாத இணையடிகள் எங்களைக் காப்பதாக. யாங்கள் உய்ய ஆட்கொண்டருளும் மலரடிகள் எங்களைக் காத்தருள்க. நாங்கள் ஆடும் இம்மார்கழி நீராட்டு எங்களைக் காப்பதாக.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

முப்பத்துமூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்

[முப்பத்து முக்கோடி தேவர்களும் நினைத்த இடத்திற்குச் சென்று நடுக்கம் தீர்க்கவல்ல மிடுக்குடையவனே! எழுந்திருப்பாயாக. நேர்மையும் வலிமையும் உடையவனே! பகைவர்க்கு வெம்மை போன்றவனே! துயில்எழுவாயாக. நப்பின்னைப்பிராட்டியே! உறக்கம் ஒழிவாயாக. விசிறியையும், கண்ணாடியையும் உன் மணாளனையும் தந்து இப்போதே எங்களை நீராடச் செய்வாயாக.]

அடியவர் திருநட்சத்திரங்கள்

சார்வரி—வைகாசி

சைவம்

10உ—கழற்சிங்க நாயனார்
16உ—நம்பியாண்டார் நம்பிகள்
17உ—நமிநந்தியடிகள் நாயனார்
17உ—சேக்கிழார் சுவாமிகள்
18உ—சோமாசிமாறநாயனார்
28உ—திருஞானசம்பந்த சுவாமிகள்
28உ—திருநீலகண்டயாழ்ப்பாண [நாயனார்
28உ—முருக நாயனார்
28உ— திருநீலநக்கநாயனார்

வைணவம்

25உ—நம்மாழ்வார்

அழகர் கோயில் தந்தப் பதுமைகள்

Paari Achchagam, 127, Broadway Madras-1.